பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 29 வெள்ளிக்கிழமை (13-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:262

# யுத்தத்துக்குத் தயாராகின்றனர் என புலிகள் மீது அரசு குற்றச்சாட்டு!

## செய்தியாளர் மத்தியில் அமைச்சர் மங்கள

கொழும்பு,ஓகஸ்ட்13

**கூடிய விரைவில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்ற நம்பிக்கையுடன் அரசு செயற்படுகின்றது. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் வகையில் அரசியல் படுகொலைகளில் ஈடுபடுகின்றனர். பங்கர்களை அமைத்து யுத்தத்திற்குத் தயாராகின்றனர் - எனக் குற்றம் சாட்டுகின்றார் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர.**

**நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மங்கள சமரவீர இப்படிக் கூறினார்.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிக்கும் வகையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டிலேயே இக்குற்றச்சாட்டை முன்வைத்தார் அவர்.

அண்மைக் காலங்களில் ஈ.பி.டி.பி. ஆதரவாளர்கள் தொடர்ச்சியாகப் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். புலிகளே இதனைச் செய்திருக்கின்றனர் எனப் புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் இச்செயலுக்கு அரசு வன்மை

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஒலிம்பிக் திருவிழா இன்று ஆரம்பம்!

எதென்ஸ்,ஓக.13

மாபெரும் விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக்போட்டி இன்று கிரிஸ் தலைநகர் எதென்ஸில் கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

100 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் பிறந்த இடத்துக்கே ஒலிம்பிக் திரும்பியுள்ளது. இந்த 28 ஆவது நவீன ஒலிம்பிக்போட்டி இன்று இலங்கை நேரப்படி 11.00 மணிக்கு விசேட நிகழ்வுகளுடன் ஆரம்பிக்கவுள்ளது.

சுமார் 180 இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 16 ஆயிரம் வீரர்கள் இம்முறை ஒலிம்பிக்கில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானியத் தூதர் கிளிநொச்சி வருகிறார்

இலங்கைக்கான ஜப்பான் தூதர் ஹக்கியோ சுடா நாளை சனிக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்கின்றார்.

அன்றையதினம் முற்பகல் 10 மணிக்கு இவர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

வடக்கு- கிழக்கில் ஜப்பான் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்

(16ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு-அம்பாறையில் சுமுகநிலையை உருவாக்குவது பற்றி புலிகள் ஆராய்வு!

## செயல்திட்டங்கள் குறித்து தமிழ்க்கூட்டமைப்பினருடன் பேச்சு

மட்டக்களப்பு,ஓக.13

கொலைகள், ஆள்கடத்தல்கள் போன்ற சம்பவங்களால் மட்டு - அம்பாறை மாவட்டங்களில் உருவாகியிருக்கும் குழப்பமான - அச்சுறுத்தலான - சூழ்நிலையைத் தணிப்பதற்கும்-திட்டமிட்ட முறையில் தமிழ்த் தேசியத்தை நசுக்குவதற்கு சில சக்திகள் மேற்கொண்டுவரும் விசமப் பிரசாரங்களை முறியடிப்பதற்கும் எடுக்கப்படவேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களோடு நேற்று பேச்சு நடத்தியிருக்கின்றனர்.

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலையில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்தவார இறுதியில் கூட்டமைப்பினர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசுவர்

யாழ்ப்பாணம்,ஓக.13

இன்றைய அரசியல்நிலை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று அடுத்தவார இறுதிப்பகுதியில் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வ

(16ஆம் பக்கம் பார்க்க)

## கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று குழப்பத்தில் முடிந்தது

கொழும்பு,ஓக.13

நேற்றுக்காலை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

தேர்தல்களின் வாக்களிப்பின்போது தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்குவது தொடர்பான சட்டமூல சர்ச்சையால் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் நேற்றைய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இக்கூட்டத்திற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளும் ஸ்ரீல.மு.காங்கிரஸ் பிரதிநிதிகளும் சமுகமளித்திருக்கவில்லை.

நாடாளுமன்றம் கூடுவதற்குமுன் நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கான கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று நாடாளுமன்றக்குழு அறை

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிக்கு ரூ. 90 லட்சம் யாழ். எம்.பிக்கள் ஒதுக்குவர்

வலி.வடக்கு,ஓக.13

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியிலிருந்து 90லட்சம் ரூபாவைக் கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு வழங்குவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்குத் தீர்வையின்றி வாகனங்களா? ஆளும் கூட்டமைப்புக்குள் அதனால் லடாய்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்திற்கு தீர்வையற்ற முறையில் வாகனங்களை வழங்கும் விடயத்தினால் ஆளும் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் லடாய் ஏற்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ மேடையில் ஏறி இந்த முடிவுக்கு எதிராகக் கூச்சலிடுகின்றார்.

ஆனால், அமைச்சரவையில் இருக்கும் ஜே.வி.பியின் நான்கு அமைச்சர்களும் இவ்விடயம் தொடர்பான தீர்மானம் அமைச்சரவையில் எடுக்கப்பட்டபோது வாயை மூடிக்கொண்டு மௌனமாக இருந்தனர். ஏன் இந்த இரட்டை வேடம் என்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரான திஸ்ஸ அத்தநாயக்க.

சமாதானப் பயணத்தில் புலிகளை உற்சாகப்படுத்தும் வகையிலேயே அமைச்சரவையில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது விதித்த தடையை இந்தியா நீக்குவதே நியாயம்!

### ஈழவேந்தன் எம்.பி. அறிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.13

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்பதற்காக 'பொடா' சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட வைகோ விடுதலை செய்யப்பட்டுவிட்டார். 'பொடா' வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளதையடுத்து விடுதலைப் புலிகள் மீதான தடையையும் நீக்குவதே நியாயம்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் மேற்கண்டவாறு தெரி

(15ஆம் பக்கம் பார்க்க)

## பிரேதப்பெட்டியுடன் ஈ.பி.டி.பியினர் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை,ஓக.13

திருகோணமலையிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தின் முன்பாக பிரேதப்பெட்டியினை வைத்து ஈபிடிபி. உறுப்பினர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

ஆகக்கூடிய வட்டி!

இப்போது தேசிய சேமிப்பு வங்கி உங்களுடைய புதிய நிலையான வைப்புகளுக்கு மிகவும் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களை வழங்குகின்றது. அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கி கிளைக்கு விரைந்து செல்லுங்கள்.

| தவணை வைப்புக்கள் | | வட்டி வீதம் (வருடத்துக்கு) | வ.வி.வ |
|---|---|---|---|
| நிலையான வைப்பு | 03 மாதங்கள் | 7.7% | 7.92% |
| | 06 மாதங்கள் | 7.8% | 7.95% |
| | 12 மாதங்கள் | 8.0% | 8.0% |
| | 24 மாதங்கள் | 8.4% | 8.07% |
| | 12 மாதங்கள் (மாதாந்தம்) | 7.75% | 8.03% |
| | *12 மாதங்கள் (மாதாந்தம்) ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு | 8.25% | 8.57% |
| *கௌரவ | | 9.75% | 10.20% |
| தேசிய சேமிப்பு சான்றிதழ் (3-48 மாதங்கள்) | | 7 7.5%-9.0% | 8.0% |

*விதிமுறைகளுக்கு அமைய

NSB

# எழுதுநர் மற்றும் இணைந்த சேவைகள் இனி 'அரச முகாமை உதவியாளர் சேவை' என மாறும்

கொழும்பு,ஒக.13

பொது எழுதுவினைஞர் சேவையும் அதனோடு இணைந்த ஏனைய சேவைகளும் ஒன்றாக்கப்பட்டு 'அரச முகாமை உதவியாளர் சேவை' (**Public Management Assistants Service**) என்று மாற்றப்பட்டுள்ளதாக அறியவருகிறது. இந்த மாற்றம் மத்திய அரச சேவை, மாகாண அரச சேவை ஆகிய இரண்டு சேவைகளையும் உள்ளடக்கியதாகவே அமையும் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்கான சகல நிர்வாக நடவடிக்கைகளும் பூர்த்தியாகியுள்ளன.

தற்பொழுது தனித்தனியாக இருக்கின்ற எழுதுவினைஞர் சேவை, கணக்குப் பதியுநர் சேவை, களஞ்சியக் காப்பாளர் சேவை, சிறாப்பர் சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை ஆகியனவே ஒன்றாக்கப்பட்டு 'அரச முகாமை உதவியாளர் சேவை' என மாற்றப்படுகிறது. அரச முகாமை உதவியாளர்கள் என்று அழைக்கப்படவுள்ள மேற்படி சேவைகளிலிருந்து உள்வாங்கப்படும் அனைவரும் பொருத்தமான முறையிலமைந்த ஒரு சுற்றோட்டத்தின் அடிப்படையில் பணிகளையும் பொறுப்புக்களையும் திணைக்களத் தலைவர்களின் வழமையான வழிகாட்டலுக்கு அமைய ஏற்றுக கடமைபுரிவர் எனவும் எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கும் நிலையிலுள்ள இந்த நிர்வாகச் சீரமைப்பு 01.01.2004 இலிருந்து அமுலாகும் வகையில் அமையலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இணைந்த சேவையைச் சேர்ந்தோர்களுக்கிடையில் சேவைப் பொறுப்புக்கள், திறமைகள் என்பவற்றின் அடிப்படையில் காணப்பட்ட பாரிய முரண்பாடுகளையும் நிர்வாகச்சிக்கல்களையும் நீக்கும் வகையில் இம்மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இனிவரும் காலங்களில் அரச முகாமை உதவியாளர் சேவைக்கு உள்வாங்கப்படவிருக்கின்ற புதியவாகளுக்கான கல்வித் தகைமைகளாக தாய்மொழி, கணிதம் உள்ளிட்ட நான்கு பாடங்களில் 'C' வகைச் சித்திகளும் மேலும் இரு பாடங்களில் சாதாரண சித்தியும் (S) ஒரே தடவையில் கல்விப் பொதுத் தராதர சாதா ரண தரத்திலும், அத்துடன், கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தில் மூன்று பாடங்களில் சாதாரண சித்தியும் அடிப்படைத் தகைமைக ளாகக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட் டது.

வெற்றிடங்களில் 70 வீதம் மேற்படி கல்வித தகைமையுடையோருக்கான திறந்த போட்டிப் பரீட்சை மூலமான தெரிவுக்கும் 30 வீதம் ஏற்கனவே, அலுவலக சிற்றூழியர் சேவையில் உள்ளவருக்கான மட்டுபடுத்தப்பட்ட பரீட்சை மூலமான தெரிவுக்கும் உரியதாக இருக்கும்.

அத்துடன், திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஒன்றரை மணித்தியாலம் கொண்ட மொழித்திறன் வினாத தாளுக்கும் ஒன்றரை மணித்தியாலம் கொண்ட உளச்சார்பு வினாத்தாளுக்கும் முகம கொடுக்க வேண்டும்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையை சந்திக்கவுள்ளோர் இரு மணித்தியால பொது அறிவு வினாத்தாளையும் ஒரு மணித்தியால உளச்சார்பு வினாத்தாளையும் ஆக இரண்டு வினாத் தாள்களை மட்டுமே முகம்கொடுக்கவேண்டும்.

அரச முகாமை உதவியாளர் சேவை வகுப்பு 3, வகுப்பு 2, வகுப்பு 1, அதிசிறப்புத் தரம் ஆகியவற்றைக் கொண்டதாக இருக்கும். உரிய வகுப்புக்களில் தேவையான காலப்பகுதிகளை நிறைவு செய்தவர்கள் தாபன நடவடிக்கை முறை, நிதிமுறைமைகள், அரச நிதி முகாமை, அலுவலக முகாமை, விடய ஆய்வு, பொது வினாத் தாள் ஆகியனவற்றுள் இச்சேவைக்கான குறிப்பேடு கூறும்வகையில் எழுத்துப் பரீட்சைகளைச் சந்தித்தே மேல் வகுப்புக்களுக்கான பதவியுயர்வுகளைப் பெறமுடியும். இணைந்த சேவை ஊழியர்கள் மத்தியில் பொது அறிவையும் சேவைசார் அறிவையும் ஆற்றலையும் வளர்க்கும் வகையில் பதவியுயர்வு முறைமைகள் அமைவதும் சுட்டிக்காட்டப்படத்தக்கது.

இலங்கையின் பொதுநிர்வாக முறைமையை சர்வதேச தரத்துக்கும் வளர்ச்சிப் போக்குக்கும் ஏற்றவகையில் சீரமைக்கும் அரசின் கொள்கைத திட்டத்திற்கு இணங்கவே இந்த மறுசீரமைப்புச் செய்யப்படுகிறது. இதன்மூலமாக பல்வேறு சேவைகளுக்கிடையிலான சம்பள முரண்பாடுகளும் நீக்கப்படுவதுடன் எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் கவர்ச்சிகரமான சம்பள அதிகரிப்பை வழங்கவும் அரசாங்கம் முன்வந்துள்ளதாகவும் அறியவருகிறது.

புதிதாக உருவாக்கப்படும் அரச முகாமை உதவியாளர் சேவைக்கான சேவைக் குறிப்பேடு இன்னும் குறுகிய காலத்துள் அரசாங்க ஊழியர்களின் கைகளுக்கு வந்து சேர்ந்துவிடும் என்றும் அதில் அனைத்து விடயங்களும் விவரமாகவும் விரிவாகவும் பிரசுரிக்கப்பட்டுள்ளன என்றும் மத்திய பொதுநிர்வாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## கசூரினா கடற்கரையில் பிதிர்க்கடன் நிறைவேற்ற வசதி

காரைநகர்,ஒக.13

காரைநகர் ஈழத்துச் சிதம்பர புனித தீர்த்தக் கரையான கசூரினா கடற்கரையில் ஆடி அ[illegible]வாசை தினமான நாளைமறுதினம் ஞாயிற [illegible] பக்தர்கள் தீ[illegible]தமாடுவ[illegible]ம் பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்கும் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அன்று அதிகாலை 5.30 மணிக்கு ஈழத்துச் சிதம்பரத்தில் விசேட பூஜையைத் தொடர்ந்து சுவாமி சமுத்திர தீர்த்தம் ஆடுவதற்காக கசூரினா கடற்கரைக்கு எழுந்தருளுவார். பின் காலை 9 மணி தொடக்கம் ஈழத்துச் சிதம்பரத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறும்.

இங்குள்ள அன்னதான மடாலயங்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் யாழ். மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து ஆலயம் வரை வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலையினால் நேரடி பஸ் சேவையும் நடத்தப்படவுள்ளது.

(எ-73)



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பிக்களுக்கும் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினருக்கும் இடையில் அரசியல்துறையின் யாழ். அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போது எடுக்கப்பட்ட படம். (படம்: வசந்தன்)

# அரச காணிகளை ஜனாதிபதி பெற்றாரா?

## ஆவண ஆதாரம் காட்டுகின்றது எதிரணி

கொழும்பு,ஒக.13

அரச காணிகளில் ஓர் அங்குலத்தைக் கூட ஜனாதிபதியோ அவருடைய புதல்வரோ பெறவில்லை என்று சாதிக்கின்றார் அமைச்சரவை மற்றும் அரசுத் தரப்பின் பேச்சாளரான ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர.

ஆனால், இதோ அவர்கள் பெற்றுள்ள காணிகளின் விவரம், ஜனாதிபதி மாளிகையில் இருந்து எழுதப்பட்ட கடிதம், எங்கெங்கு காணிகளைப் பெற்றுள்ளனர் என்ற தகவல்கள் - என்று ஆதாரங்களுடன் புட்டுவைக்கின்றார் முன்னாள் காணி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன.

நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர்களான மங்கள சமரவீர, அனுர பிரியதர்சன யாப்பா, அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் காணி விநியோகத்தில் இடம்பெற்றுள்ள சீர்கேடுகள் தொடர்பாக முன்னாள் காணி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன மீது குற்றம்சாட்டினார். ஜனாதிபதியும் அவரது மகனும் அரச காணிகளில் ஓர் அங்குலத்தைக்கூடப் பெறவில்லை. தனது ஊழலை மறைக்கவே ஜனாதிபதி மீது கரிபூச முனைகிறார் ராஜித. காணி விநியோக மோசடி தொடர்பாக அவர் அதிவிரைவில் பொலஸாருக்குப் பதில் சொல்ல வேண்டிவரும் என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும் முகமாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே மூன்று அமைச்சர்களும் இவ்வாறு வசைபாடினர்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவோ எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இக்குற்றச்சாட்டுக்குப் பதிலடியாக விலாவாரியாக விளக்கமளித்தார்.

"ஜனாதிபதி சந்திரிகாவுக்கு றோயல் கல்லூரிக்கு அருகில் 287 பேர்ச்சஸ் காணி வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் மகன் விமு[illegible] வீஜேகுமாரதுங்க மாத்தறை வெலிகமையி[illegible] மிரிஸ்ஸ என்ற இடத்தில் இரண்டு ஏக்கர் காணியைப் பெற்றுள்ளார். உல்லாசப் பிரயாண விடுதி ஒன்றை அமைக்கப் போகிறார் எனக் கூறியே இக்காணியை அவர் பெற்றுள்ளார்.

"இதோ அவர் ஜனாதிபதி மாளிகையிலிருந்து எழுதிய கடிதம்" - என ஆதாரப்படுத்துகின்றார் டாக்டர் ராஜித சேனாரத்ன.

"நான் அண்மையில் அரச காணிகளைப் பெற்றவர்களின் பெயர் விவரங்களை வெளியிட்டபோது துரதிர்ஷ்டவசமாக ஜனாதிபதியினதும், அவருடைய புதல்வரினதும் பெயர்களும் வெளிப்படுத்தப்பட்டுவிட்டன.

"இதனால், ஜனாதிபதியும், அரச தரப்பினரும் என்மீது நெருப்பெடுக்கின்றனர். எனக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் அரச ஊடகங்களின் மூலம் சேறு பூசுகின்றனர். நான் எதற்கும் பயப்படவில்லை. எந்த நடவடிக்கைக்கும் முகம் கொடுக்கத் தயார்.

"நான் செய்த ஒரே தவறு ஜனாதிபதிக்கும் அவரது மகனுக்கும் காணி வழங்கியதுதான்" - என்கிறார் முன்னாள் அமைச்சர் ராஜித சே[illegible]ரத்ன.

# மட்டு.மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி!

மட்டக்களப்பு,ஒக.13

மட்டக்களப்பு நகர மகாத்மாகாந்தி சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் நேற்றுப் பாரிய ஆர்ப்பாட்டப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இம்முறையும் மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் முன்னேறிய மாவட்டம் என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கல்வி ஊக்குவிப்பு ஒன்றியம், மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பன இணைந்து நடத்திய இப்போராட்டத்திற்கு ஆதரவாக, கிழக்குப் பல்கலைக்கழகம் அரைநாள் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்கள் பதாகைகளையும், வாசகங்களைக் கொண்ட சுலோகங்களையும் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

★ முன்னேறிய மாவட்டமாக அறிவித்தால் முன்னேறாத மட்டக்களப்பு!

★ ஏன் இந்த பாரபட்சம்? நியாயமான தீர்வு விரைவில் வேண்டும்.!

★ எமது கல்வியில் உமது அரசியல் லாபத்தை ஈட்டாதே!

★ அரசியல்வாதிகளே, உங்கள் போலி வாககுறுதிகள் எங்கள் கல்வியில் வேண்டாம்!

- போன்ற வாசகங்கள் பதாகைகளில் பொறிக்கப்பட்டிருந்தன.

காலை 7.30 மணிக்கு ஆரம்பமான ஆர்ப்பாட்டம் மதியம் 12 மணி வரை நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப பரராசசிங்கம், த.கனகசபை, பஷீர் சேகுதாவூத், க.தங்கேஸ்வரி, பா.அரியநேந்திரன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி ஆகியோர் காந்தி சதுக்கத்திற்கு விரைந்து சென்று ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சு நடத்தினர். (க-7-9)



அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் யாழ். அலுவலகத்தில் நேற்று மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 66 ஆவது பிறந்ததின நினைவு நிகழ்வு இடம்பெற்றது. அங்கு அவரது உருவப் படத்திற்கு கஜேந்திரகுமார் எம்.பி. மலர்மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம். (படம்: புஸ்பா)

# படுகொலைகளை மூடிமறைக்க முயல்வது தமிழினத்தையே பூண்டோடு அழித்துவிடும்

## ஊடகங்கள், புத்திஜீவிகள் மீது ஈ.பி.டி.பி. சாடல்

கொழும்பு,ஒக.13

"தமிழ் இளைஞர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுவதும், தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்படுவதும் இலங்கையில் இப்போது அன்றாட நிகழ்வாகிவிட்டன. புலிகளால் மேற்கொள்ளப்படும் இத்துப்பாக்கிப் பிரயோகங்களையும் இப்படுகொலைகளையும் இனியும் மூடி மறைக்க தமிழ் புத்திஜவிகளும், தமிழ் ஊடகங்களும் முயல்கின்றமை தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கவே வழிவகுக்கும்.

"புதனன்று மட்டும் எமது தோழர் பாண்டியன எனப்படும் ஆத்மலிங்கம் ரமணி உட்பட மூன்று தமிழ் இளைஞர்கள் புலிகள்ால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இத்தகைய அநியாய -அநாவசிய - படுகொலைகள் குறித்து தமிழ் மக்கள் இனியும் கண்மூடித்தனமாக மௌனம் காக்கக்கூடாது " - இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்தப் படுகொலைகள் ஏன்? சமாதான முன்னெடுப்புகளுக்கு தயாராகப் புலிகள் இருக்கின்றார்கள் என்பது உண்மையாயின் இந்தப் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்காமல் இருப்பது எதற்காக? கொன்று குவிக்கும் கொலை வெறி எதற்காக? இதனைத் தமிழ் மக்கள் ஆழமாகச் சிந்திக்கவேண்டும். இனப்படுகொலை இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தி குறைகாண்பவர்கள் சகோதரப் படுகொலைகள் தொடர்வது கண்டு மௌனித்து இருப்பது ஏன், தமிழ் பேசும் மக்களின் நலன்களில் உண்மையான அக்கறை கொண்டுள்ள சகலரும், சர்வதேச சமூகமும் புலிகள் படுகொலைகளை மேற்கொள்வதைத் தடுத்து நிறுத்த தம்மாலான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (க)



உதயன்

## ஈ.பி.டி.பியின் பிரலாபம்

வடக்கு - கிழக்கில் உள்ள ஈழத்தமிழர்களுக்கு அவர்களின் தாயகத்தில் ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை வழங்குவதற்கு எதிராக - ஜே.வி.பி. போன்று - ஈ.பி.டி.பியும் போர்க்கொடி தூக்கியிருக்கின்றது.

இலங்கையில் சுமார் அரைநூற்றாண்டு காலமாக நீடித்துவரும் இனப்பூசல் இது. இந்த ஐந்து தசாப்த காலத்தில் இப்பிணக்குக்குத் தீர்வுகாண்பதற்குக் காலத்துக்குக் காலம் பல்வேறு அமைதி முயற்சிகள், சமாதானப் பேச்சுக்கள், சமரச எத்தனங்கள் எனப் பல எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தடவையும் தடபுடலான ஆரவாரத்தோடு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும் எல்லாம் ஏட்டுச்சுரக்காயாக பயன்தராமல் தான் முடிவுற்றன. இந்த எத்தனங்களின் பலன் வெறும் பூஜ்ஜியம்தான்.

இந்தப் பட்டறிவை - அனுபவப்பாடத்தை - நன்கு புரிந்து கொண்டுள்ள ஈழத்தமிழ் இனத்துக்கு இப்போது ஆரவாரமாகப் பேசப்படும் முயற்சியிலும் இன்னும் நம்பிக்கை ஏதும் பிறக்கவில்லை. இம்முயற்சி வெற்றிகண்டு, அது நடைமுறைச் சாத்தியமான பின்னரே அதை நம்பலாம் என்பதுதான் யதார்த்த நிலை. அப்படித் தமிழர் தரப்புக் கருதுவதில் அர்த்தமுண்டு என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர்.

எனவே, இந்த நீண்டகால யுத்தத்தினால் பாதிப்புற்று - சொல்லொணாத்துயரங்களை அனுபவித்து - துயரத்தினதும் இழப்புகளினதும் எல்லைகளில் துவண்டு நிற்கும் தமிழினத்துக்கு இன்னும் தீர்வை நோக்கிய வெறும் வாய்ப்பேச்சு அல்லது முயற்சி என்ற 'பம்மாத்து' எடுபடாது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஐந்து தசாப்த கால அனுபவத்தின் தொடர்ச்சி இது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும் என்பதால், குதிரைவண்டிலில், குதிரைக்கு முன்னால் தடியில் கரட்டைக் கட்டித் தொங்கவிட்டுக் குதிரையை ஓடவிடும் மாய்மாலம் இங்கு செல்லுபடியாகாது.

கரட்டைக் கவ்வுவதற்காக குதிரை முன்னே ஓடும். குதிரையோடு சேர்ந்து கரட் கட்டிய தடியும் முன்னே செல்லும். கரட் குதிரையின் வாய்க்கு அகப்படாது. ஆனால், கரட்டைப் பிடித்து விடுவோம் என்ற நப்பாசையில் குதிரை ஓடிக்கொண்டேயிருக்கும்.

அதேபோன்று சமாதானத் தீர்வைத் தருகிறோம் என்று 'பாவ்லா' காட்டிக்கொண்டு தமிழினத்தை இன்னும் ஓடவிட்டுப் 'பேய்க்காட்டிக்' கொண்டிருக்கமுடியாது.

நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கான முயற்சிகளைப் பிறகு ஆரம்பிக்கலாம். ஐம்பது வருடங்களாக அந்த முயற்சியில் ஈடுபட்டு சலித்துப் போய்விட்டோம். இப்போது யுத்தத்தால் பாதிக்கப்பட்டுப் பெரும் மனித அவலத்தைச் சந்தித்து நிற்கும் தமிழ் மக்களின் அன்றாட மனிதாபிமானப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முதலில் ஓர் இடைக்கால ஏற்பாட்டைத் தாருங்கள். அதன் பின்னர் நிரந்தரத்தீர்வைப் பற்றிப் பேசலாம் - இதுதான் ஈழத் தமிழர்களின் நிலைப்பாடு.

இடைக்காலத் தீர்வு விடயத்தில் பேரினவாதம் தாராளப் போக்கில் நடந்து கொள்வதன் மூலம், ஈழத் தமிழர்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். சுமார் மூன்று தசாப்த காலம் அஹிம்சை வழியிலும், அதன்பின்னர் இரண்டு தசாப்த காலம் ஆயுத வழியிலும் தமது உரிமைகளுக்காகப் போராடிய ஈழத்தமிழினத்துக்கு, சிங்கள இனத்துடன் சமரசமாகப் பேசி உரிமைகளுடன் கூடிய கௌரவ வாழ்வை உறுதிப்படுத்தலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது அவசியம். இடைக்கால ஏற்பாட்டு விடயத்தில் தனது நியாயமான செயற்பாட்டின் மூலம் பெரும்பான்மை இனம் அதனைச் செய்து காட்ட ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

காலவரையறை குறிப்பிட்டு எட்டமுடியாத மாய விவகாரமாக இருக்கும் நிரந்தரத் தீர்வைப் பற்றி ஆராய முன்னர், யதார்த்தத்தில் மக்களுக்கு உடனடிப் பயன் தரும் இடைக்கால ஏற்பாடு குறித்து முதலில் தீர்மானிப்போம் என்று தமிழர்கள் வலியுறுத்துவதில் நியாயமும், அர்த்தமும் அதிகம் பொதிந்துள்ளன. ஈ.பி.டி.பியின் கட்சி அரசியல் கண்ணோட்டத்தில் அந்த அர்த்தம் புரியாமல் போனதில் வியப்பில்லை.

ஈழத்தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் புலிகளே என்பது சிங்கள ஸ்ரீலங்கா அரசு நடத்திய கடந்த பொதுத் தேர்தலிலேயே சர்வதேச உலகுக்கு ஐயம் திரிபற நிரூபிக்கப்பட்ட நிலையில், இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளுக்கு வழங்குவதை எதிர்த்து ஈ.பி.டி.பி. சத்தமிடுவதிலும் அர்த்தமில்லை.

ஈழத்தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் புலிகள் என்பதைத் தமிழர்கள் ஒன்று திரண்டு நிரூபித்த கடந்த தேர்தல் குறித்தும் அந்த வாக்களிப்பு முறைமை குறித்தும் கூட ஈ.பி.டி.பி. கூச்சலிடுகின்றது.

1990களில் பத்து உறுப்பினர்களுடன் இந்தியாவிலிருந்து வந்த ஈ.பி.டி.பியினர், கொழும்பில் வெள்ளைவான் ஆதிக்கத்தோடு தங்கள் நடவடிக்கையை ஆரம்பித்தது முதல் இன்றைய நிலைவரை தாங்கள் கடந்து வந்த 1994, 2000, 2001 பொதுத் தேர்தல்கள் குறித்துச் சற்றுத் திரும்பிப் பார்த்துவிட்டு இந்தத் தேர்தல் குறித்துப் பேசுவது நல்லது. இந்த மூன்று தேர்தல்களிலும் தாம் புரிந்த தில்லுமுல்லுகளையும், அதனால் சுவீகரித்துக் கொண்ட அரசியல் லாபங்களையும், அதன்மூலம் தாம் தேடிய சுகபோகங்களையும் எண்ணிப் பார்க்கும் ஈ.பி.டி.பியினரால் தமிழ் மக்களின் பேரெழுச்சியை வெளிப்படுத்திய - 1977 பொதுத் தேர்தல் போன்ற - இந்தத் தேர்தலையும் சகித்துக்கொள்வது கஷ்டம்தான்.

அதற்காக - தமது அரசியல் சுயலாபத்துக்காக - தமிழர்களின் நியாயமான கோரிக்கையைக் கொச்சைப் படுத்துவது பொருத்தமற்றது.

# கீரிமலை, மாவிட்டபுரம் ஆலயங்களுக்கு தனியார் வாகனங்கள் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,ஓக.13

நாளை நடைபெறும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேர் உற்சவத்திலும் மறுநாள் கீரிமலையில் நடைபெறும் ஆடி அமாவாசைத் தீர்த்த உற்சவத்திலும் கலந்துகொள்ளும் பக்தர்களின் நலன் கருதி விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இரு தினங்களும் யாழ். பஸ்நிலையம் உட்பட ஏனைய இடங்களில் இருந்தும் தெல்லிப்பழை வரை விசேட போக்குவரத்துக்களை வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையும் தனியார் பஸ் போக்குவரத்துச் சங்கமும் ஏற்பாடு செய்துள்ளன.

தெல்லிப்பழை, சோதனை நிலையத்தில் வைத்துப் பயணிகள் சோதனையிடப்பட்டபின் பஸ்களில் ஏற்றப்பட்டு ஆலயங்களுக்கு அழைத்துச்செல்லப்படுவர். பாஸ் ஏதும் பெறவேண்டியதில்லை.

தனியார் பஸ்களில் குழுவாகச் செல்பவர்கள், தனியார் மோட்டார் வாகனங்களில் செல்பவர்கள், மோட்டார் சைக்கிளகளில் செல்வோர் சோதனை நிலையத்தில் பதிவு செய்துவிட்டு நேரடியாக அந்த வாகனங்களிலேயே ஆலயம் வரை செல்லமுடியும். சைக்கிள்களில் வருவோர் நேரடியாக அனுமதிக்கப்படமாட்டார்கள். அவர்கள் பஸ்களிலேயே ஆலயத்துக்குச் செல்ல வேண்டும்.

சேந்தாங்குளம் சோதனை நிலையம் ஊடாக தனியார் பஸ்களிலும், மோட்டார் சைக்கள்களிலும் வருவோர் நேரடியாக கீரிமலைக்குச் செல்லலாம். ஏனையோருக்குக் கீரிமலை ஆலய ஆதனகர்த்தா பஸ் சேவை வசதி செய்வதாகக் கூறியுள்ளார். அவ்வாறு ஏற்பாடு செய்தால் அவர்கள் செல்லமுடியும் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேந்தாங்குளம் ஊடாகப் பயணம் செய்வதைத் தவிர்த்துத் தெல்லிப்பழை ஊடாகப் பயணஞ்செய்வது சிரமங்களைத் தவிர்க்க உதவும் என்று படைத்தரப்பு பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

(ஐ-3)

## வைத்தியர் குழு வருகை தரவுள்ளது

வலி.தெற்கு,ஓக.13

கொழும்பு அப்பலோ வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர் குழுவொன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் வைத்திய சேவையாற்றும் நோக்குடன் எதிர்வரும் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது.

தென்னிந்தியத் திருச்சபையின் ஏற்பாட்டில் மேற்படி வைத்தியக்குழுவினர் இங்கு வருகைதர உள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் 17ஆம் திகதி மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையிலும் 18ஆம் திகதி குடத்தனையிலுள்ள தென்னிந்தியத் திருச்சபை மண்டபத்திலும் வைத்தியப்பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

மேற்படி வைத்தியக் குழுவினரிடம் வைத்திய ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ள விரும்புவோர் மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையில் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-152)

# எரிபொருள்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படலாம்!

கொழும்பு,ஓக.13

மீண்டும் எரிபொருள்களின் விலைகள் உயர்த்தப்படக்கூடும் என்று எதிர்வு கூறப்படுகின்றது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சமர்ப்பித்துள்ள விலை அதிகரிப்பு அறிக்கையைத் திறைசேரி ஏற்றுக்கொள்ளுமானால் எரிபொருள்களின் விலைகள் மேலும் அதிகரிக்கப்படுவது தவிர்க்கமுடியாமல் போகும் என்று தெரியவருகின்றது.

பெற்றோல் விலையில் 2 ரூபா 50 சதமும் டீசல் விலையில் 12ரூபா 50 சதமும் மண்ணெண்ணெய் விலையில் 12 ரூபா 10 சதமும் அதிகரிக்கப்படவேண்டும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கேட்டுள்ளது.

எரிபொருள் விலை ஏற்றத்தில் தம்மால் எதுவும் செய்யமுடியாமல் இருப்பதாக நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே கூறியுள்ளார். விலை ஏற்புக் கோரிக்கையை அனுமதிப்பதா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கவேண்டிய பொறுப்பு திறைசேரியினுடையது. உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்திருப்பதால் இங்கும் விலைகள் அதிகரிக்கப்படவேண்டிய கட்டாயம் உருவாகிவருவதாக அமைச்சர் கூறியுள்ளார்.

எரிபொருள் விலைகள் அதிகரிக்க நேர்ந்தாலும் ஏனைய பொருள்களின் விலைகளும் சேவைகளின் கட்டணங்களும் உயராமல் இருக்கத் தாம் நடவடிக்கை எடுப்பார் என்றும் அமைச்சர் கூறினார்.

(ப)

# வைகோவின் உறுதியால் சிறைக்கம்பிகள் சிதறின!

## அவரைப் பாராட்டிச் சந்திரசேகரன் கடிதம்

வைகோவின் உறுதியான சிந்தனைகளின் முன்னால் சிறைக்கம்பிகள் தோற்றுப்போயின.

- இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார் மலையக மக்கள் முன்னணித் தலைவரும், எம்.பியுமான பெ.சந்திரசேகரன்.

வைகோவுக்கு எதிரான 'பொடா' வழக்கைத் தமிழக அரசு வாபஸ் பெற்றதை ஒட்டி அவருக்கு எழுதிய கடிதம் ஒன்றிலேயே சந்திரசேகரன் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

மேற்படி வழக்கைக் காட்டி சுமார் இரண்டு வருடகாலம் வைகோவை விளக்க மறியலில் வைத்திருந்தது ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு என்பது குறிப்பிடத்தக்கது.

வைகோவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் பெ.சந்திரசேகரன் எம்.பி.தெரிவித்திருப்பதாவது:-

'பொடா' வழக்கிலிருந்து தாங்கள் விடுவிக்கப்பட்டிருப்பது முழு உலகில் வாழும் தமிழ் மக்களைப் போலவே எம்மையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

தெளிவான கொள்கைகளுக்கும், உறுதியான அரசியல் நடவடிக்கைகளுக்கும் வெறும் சட்டங்களினால் தடைபோட முடியாது என்பதற்கு இது சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது.

இலங்கைத் தமிழர்களின் போராட்டத்திற்காகத் தாங்கள் எழுப்பிய போராட்டக் குரலுக்குக் கிடைத்த வெற்றியாக மாத்திரம் இதனை நாம் கருதவில்லை.

தமது விடுதலைக்காக ஈழப்போராளிகள் எழுப்பும் குரலின் நியாயமும் இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதாக உணர்கின்றோம்.

தங்களின் தெளிவான - உறுதியான - சிந்தனைகளின் முன்னால் சிறைக் கம்பிகள் தோற்றுப்போனதையும் அதே போல் முழுமூச்சான தங்கள் மீதான அரசியல் பழிவாங்கல் முற்றாகத் தோல்வியடைந்து போனதையும் நாம் உவகைக்குரியதாகப் பாராட்டுகின்றோம்.

விடுதலைக்காகப் போராடும் எம் மக்களுக்காகவும், தமிழ் வளர்ச்சிக்காக உலகமெங்கும் இயங்கும் அனைத்துப் பற்றாளர்களுக்காகவும் தங்களின் குரல் என்றும் சக்தியோடு ஒலிக்க வாழ்த்துகின்றேன் - என்றுள்ளது.

# கலாசாரம் பேணுவோரால் இருவர் நையப்புடைப்பு

கொடிகாமம்,ஓக.13

சாவகச்சேரிப் பகுதியில் அட்டகாசம் புரிந்த இளைஞர்கள் கலாசாரத்தைப் பேணுவோரால் பிடிக்கப்பட்டு பொதுமக்கள் முன்னிலையில் நையப்புடைக்கப்பட்டனர்.

திருட்டுகள் உட்பட சமூக விரோதச் செயல்களில் இவர்கள் ஈடுபட்டனர் என்று கலாசாரம் பேணும் இளைஞர்களிடம் பொதுமக்களால் முறையிடப்பட்டதாகவும் -

கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரியில் உள்ள வீடு ஒன்றிற்குள் புகுந்த பிரஸ்தாப இளைஞர்கள் இருவரும் அங்கிருந்த பெண்களைத் தாக்கி பாத்திரங்களை உடைத்து அட்டகாசம் புரிந்தனர் என்றும் -

இதுகுறித்து தகவல் அறிந்த கலாசாரம் பேணும் இளைஞர்கள் அங்கு சென்று இவர்களை மடக்கிப் பிடித்து நையப்புடைத்து வீதி வழியாக இழுத்துச் சென்றனர் என்றும் - கூறப்படுகிறது.

இதேவேளை, கைதடிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் எனப் பொய் கூறிப் பணம் வசூலித்த இரு இளைஞர்களும் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களால் பிடிக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

(ஓ-74)

### நாளை

ஆடி 30
சனிக்கிழமை
(14.08.2004)
திதி : சதுர்தசி
முழுவதும்
நட்சத்திரம் : பூசம்
முழுவதும்
சுபநேரம்: 03.05 - 4.35
ராகுகாலம்: 9.05 - 10.35
(பழைய நேரப்படி)

## பல்கலை. அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம்,ஓக.13

2004-2005 கல்வியாண்டில் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களை நாளை சனிக்கிழமை முதல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண முகவரான யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம் என்று புத்தகசாலையினர் தெரிவித்துள்ளனர்.

(10)

# 'நியாப்' திட்டப் பொறுப்பாளர் 23 இல் யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம்,ஓக.13

உலக வங்கியின் நியாப் செயற்றிட்டப் பொறுப்பாளர் எந்திரி நிஹால் பெர்ணாண்டோ இரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் 23ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளார்.

அன்று காலை யாழ்ப்பாணம் வரும் இவர் யாழ்.செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனைச் சந்தித்து 'நியாப்' திட்டத்தின் மூலம் யாழ்.குடாநாட்டில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.

அதனைத் தொடர்ந்து மட்டுவில் சந்திரன் கிராய், அத்தாய் பழைய கிராமம், புத்தூர் வாதரவத்தையிலுள்ள பெரிய குளம் மற்றும் ஊர்காவற்றுறை-மெலிஞ்சி முனை, நவாலி ஆகிய பகுதிகளுக்குச் சென்று அங்கு 'நியாப்' திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களைப் பார்வையிடுவார். அப்பகுதியிலுள்ள பயனாளிகளுடன் கலந்துரையாடல்களையும் மேற்கொள்வார்.

அதனைத் தொடர்ந்து அவர் கிளிநொச்சிக்குச் செல்வார். (ஐ-5)

### உதயவாக்கு

வாழ்க்கை என்பது நிலவு போன்றது சிலவேளைகளில் பிரகாசமாகவும் இருளாகவும் இருக்கும்.

**B.A. Final (யாழ்.)**
**G.A.Q. 1st in Com.**

A/L 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். பதிவுகள் செய்துதரப்படும்.
**விரிவுரைகள் ஆரம்பம்: 14.08.2004 சனி காலை 8 மணி**

நியூட்டன்,
ஆரிய குளம் சந்தி அருகில், யாழ்.நகர். (35218)

# சமய சந்நிதிகளில்

இருபாலை கிழக்கு கேணிக்குளம்பதி லிங்கப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரமபமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 20ஆம் திகதி காலை 9மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10.45மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (10)

★ ★ ★

சுன்னாகம் தெற்கு சிவபூதராயப்பெருமான் ஆலய அலங்கார உற சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. எதிர் வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் சங்காபி ஷேகமும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும் (10)

★ ★ ★

ஊர்காவற்றுறை பரலோக அன்னை ஆலயத்திருவிழாவில் நாளை சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் மறுநாள் காலை 7.00 மணிக்கு திருவிழாத திருப்பலியும்திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (10-30)

★ ★ ★

கைதடி இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 28ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த தோற்சவமும் நடைபெறும். (10-117)

★ ★ ★

நாவாந்துறை கடற்கரை வீதியில் அமைந்துள்ள புனித பரலோக மாதா திருவிழாத் திருப பலி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்று மாலை 6.30 மணிக்கு அன்னையின் திருச்சொரூப தேர்ப் பவனியும் இடம்பெறும்.

இம் மாதம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான அன்னையின் வருடாந்தத் திருவிழா நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 5.30மணிக்குத் தற்போது நடைபெற்று வருகின்றன. (10-51)

★ ★ ★

நீர்வேலி பரலோக மாதா ஆலயத்தின் நூற்றாண்டு யூபிலிப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை ஆராதனையும் மறுநாள் காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும் யூபலி நிறைவுச சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறும். (10-30)

★ ★ ★

நாவாந்துறை விண்ணக அன்னை ஆலய வருடாந்தத் திருவிழாவில் நாளை மாலை 5.30 மணிக்கு நற்கருணைப் பெரு விழாவும் மறுநாள் காலை 7 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும், திருச்சொரூப பவனியும், ஆசீரும் இடம் பெறும். (10)

★ ★

யாழ்.மரியன்னை பேராலய வருடாந்தத் திருவிழாவில் நாளை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும், மாலை திருச்சொரூப பவனியும், ஆசீரும் இடம்பெறும் (10-30)

## முதலாம் ஆண்டு இதய அஞ்சலி



மண்ணில் வந்தது 02 - 01 - 1933

விண்ணில் விரைந்தது 26 - 07 - 2003

### திருமதி கந்தசாமி திலகவதி

*எங்கள் அன்புத் தெய்வமே! தாயே!*
*மங்கையர் திலகமாய் மாண்புடன் வாழ்ந்தீர்!*
*உங்கள் நினைவு நெஞ்சில் நிலைத்திருக்கும்!*
*ஆத்மா சாந்தியடைய அத்தியடிப் பிள்ளையாரை*
*இறைஞ்சுகின்றோம்.*

57, அத்தியடி றோட்,
யாழ்ப்பாணம்.

அன்புடன்
குடும்பத்தினர்.

(35212)(40-11-16)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன்
அ.அமுதசொருபனின்
ஆருயிர்த் தந்தை

### அமரர் இளையதம்பி அமிர்தலிங்கம்



சிவ புண்ணியனாய் 29 – 11 – 1952

சிவ ஐக்கியத்துள் 11 – 08 – 2004

தங்களின் பாதக்கமலங்களில் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

11ஆம் அணி மாணவர்கள், விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்

(35213)(42-40-11-16)

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை(நேற்றையது)

பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் வியாழக்கிழமை, ஓகஸ்ட்-12-2004

| சந்தைப்புள்ளிவிவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1,440.27 | 1,443.31 | 3.04 | 0.21 |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2,136.96 | 2,144.44 | 7:48 | 0.35 |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) | | | | |
| ASTRI - அனைத்துப் பங்குகள் | 1,489.22 | 1,492.37 | 3.15 | 0.21 |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2,217.89 | 2,225.66 | 7.77 | 0.35 |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 190.50 | 170.60 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 11.50 | 11.60 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 2,723.00 | 3,330.00 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 352.70 | 353.50 | | |

இன்றைய பங்கிலாப அறிவித்தல்கள்

| கம்பனி பெயர் | பங்கிலாபம் (%) | XDதிகதி | பணம் செலுத்துகை |
|---|---|---|---|
| சம்பத் வங்கி | 15% முதலும் கடைசியும் | திகதி பின்னர் அறிவிக்கப்படும். | |

குறித்த திகதியில் முன்னுரிமைப்பங்கு வழங்கலோ மிகை ஊதியப் பங்கு வழங்கலோ இடம்பெறவில்லை.

*குறிப்பு: நி.ச.இ. விலை - நிறையிடப்பட்ட சராசரி இறுதி விலை.

## விண்ணக வாழ்க்கையின் முதலாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 24 - 12 - 1960



இறப்பு 27 - 07 - 2003

### அமரர் சிவகுரு யோகராசா (யோகன்)

*வலம்புரிச் சங்கு போல் வந்துதித்த*
*எம் யோகா - உன் வாழ்வு*
*ஆலமரம் போல் படருமென*
*நினைத்தோம் யோகா -அன்று*
*மாறா நோயினால்*
*மாற்றான் மண்ணிலிருந்து*
*ஆற்றங்கரை பட்ட மரம் போல் வீழ்ந்து*
*ஈழமண் வந்தீரோ எம் தம்பி*
*ஓராண்டு சென்றும்*
*உனை நினைக்க கண் குளமாகின்றதையா!*
*எப்பிறப்பில் உனைக் காண்போம் தம்பி.....!*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இலந்தைக்காடு,
வல்வெட்டித்துறை

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(35217)(40-11-16)

யாழ்ப்பாணத்தில் **SAAMSTECH** இன்

## ஆங்கில மற்றும் சிங்கள நேரடி வகுப்பு

**இன்று இலங்கையில் புதிய முறையிலான இலகுவான ஆங்கில வகுப்பினை 35,000 பேருக்கு மேல் வழங்கிய சாம்ஸ்டெக் நிறுவனத்தினால் முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் நேரடி ஆங்கில மற்றும் சிங்கள வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன.**

**நீங்கள் விரும்பிய நாள்களில் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை உங்களுக்கு வசதியான நேரங்களில் வாரங்களில் மூன்று நாள் வீதம் தினமும் 2 மணிநேரம்.**

(சனி, ஞாயிறு வகுப்புகளும் உண்டு)
முழுமையாகக் கதைக்கலாம்.
பாடநெறியின் முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ்

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் 6,000/-, சிங்களம் 4,000/-

**SAAMSTECH**
**Psalm Institute of Engineering and Technology**
**22-1/4, Galle Road, Dehiwala,**
**5540200, 0714104100**

குறிப்பு:
தேசிய ஆங்கில டிப்ளோமாவிற்கான அடுத்த தொகுதி பாடப் புத்தகங்கள் எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படவுள்ளன.
(சி-36593) (26-40-11-16)

## SAAMSTECH இன் இலவச ஆங்கில நேரடி வகுப்புகள்

இடம்: **ட்றிமர் மண்டபம்** (Trimmer Hall)
**யாழ். மத்திய கல்லூரி அருகில்**
காலம்: **15-08-2004 (ஞாயிறு), 16-08-2004 (திங்கள்)** ஆகிய திகதிகளில்

- இதுவரை வகுப்புகளில் கலந்துகொள்ளாதவர்களுக்கான முதலாவது வகுப்பு காலை 9-10, பிற்பகல் 2-3, பிற்பகல் 4-5 ஆகிய நேரங்களில் மேற்படி திகதிகளில் நடைபெறும்.
- யாழ். பல்கலைக்கழகம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, தாதியர் கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, ட்றிமர் மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெற்ற வகுப்புகளில் கலந்துகொண்டோர்க்கான இரண்டாவது நேரடி வகுப்புகள் முற்பகல் 11-12, பிற்பகல் 3-4 மாலை 5-6 ஆகிய நேரங்களில் மேற்படி திகதிகளில் நடைபெறும்.
- எமது மாணவர்களுக்கான 12, 13, 14, 15, 18 ஆம் புத்தகங்கள் கருத்தரங்கு நடைபெறும் இடத்தில் நேரடியாக வழங்கப்படும்.
- நேரடி வகுப்பில் கலந்துகொள்வோர்க்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள ஆங்கில மற்றும் சிங்கள 2 மாத நேரடி வகுப்புகளில் 50% சலுகைக் கட்டணம் வழங்கப்படும்.

**SAAMSTECH**
Psalm Institute of Engineering and Technology
22-1/4, Galle Road, Dehiwela
**T.P.: 5540200, 0714 104100**
(சி-36592)(34-40-11-16)

# கிளிநொச்சி விவசாய கேந்திர நிலையங்களுக்கு விவசாய உபகரணங்கள் விரைவில் வழங்கப்படும்

கிளிநொச்சி,ஓக.13

நெதர்லாந்து அரசின் உதவியுடன் நிகொட் நிறுவனத்தினால் கிளிநொச்சி மாவட்ட விவசாய கேந்திர நிலையங்களுக்கு விவசாய இயந்திர உபகரணங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி, உருத்திரபுரம், இராமநாதபுரம், புளியம்பொக்கணை, பூநகரி, முழங்காவில், அக்கராயன்குளம், பளை ஆகிய விவசாயக் கேந்திர நிலையங்களுக்குத் தலா இரண்டு உழவு இயந்திரங்கள் வீதம் 16 இருசக்கர உழவு இயந்திரங்களும், 16 பாரந்தூக்கிகளும், 8 இயந்திரத் தெளிகருவிகளும், 40 சாதாரண தெளிகருவிகளும், 80 நீர் இறைக்கும் இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், கிளிநொச்சி, உருத்திரபுரம், முழங்காவில், அக்கராயன்குளம் ஆகிய விவசாயக் கேந்திர நிலையங்களுக்கு ஒவ்வொரு 4 சக்கர உழவு இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட நிகொட் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (8-173)

## ஆசிரியர் இடமாற்றத்தை ஆட்சேபித்து மறியற்போராட்டம்

ஒட்டுசுட்டான்,ஓக.13

முத்தையன்கட்டு வலதுகரை 2ஆம் கண்டம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆசிரியர் ஒருவரின் இடமாற்றத்தினை ஆட்சேபித்து பெற்றோர், மாணவர்கள் இணைந்து அண்மையில் பாடசாலை முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியரை இடம்மாற்றக்கூடாது என பெற்றோர்களும், மாணவர்களும் இணைந்து கோஷமிட்டனர்.

இதுதொடர்பாகப் பெற்றோர்கள் கையொப்பமிட்ட மகஜர் கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டதாகப் பெற்றோர்கள் தெரிவித்தனர். (8-341)

## உள்ளூராட்சி வாரத்தையொட்டி கிளிநொச்சியில் சமூகப் பணிகள்

வட்டக்கச்சி,ஓக.13

கரைச்சி பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தையொட்டி பல்வேறு சமூகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 22ஆம் திகதி வன்னேரிக்குளம் யோகர் சுவாமிகள் திருவடி நிலையத்தின் முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. 23ஆம் திகதி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட போஷாக்குக் குறைந்த சிறுவர்களுக்கு டால்மா விநியோகிக்கப்பட்டது.

பிரதேச சபையின் கீழ் இயங்கும் வட்டக்கச்சி தாயமணி முன்பள்ளி, ஜெயந்தி நகர் முன்பள்ளி ஆகியவற்றில் சிறார்களுக்கான விளையாட்டுப் போட்டியும் நடத்தப்பட்டது. திருநகர் மயானத்திலும் கிளிநொச்சிப் பொதுச் சந்தையிலும் சிரமதான நிகழ்வுகளும் நடைபெற்றன.

மேலும் நகர்ப்புறச் சுத்தத்தினைப் பேணும் நோக்குடன் குப்பைகள் போடுவதற்கான தொட்டிகளை வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (8-405)

## வன்னியில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்குமாறு கோரி மகஜர்

வன்னியில் பல்கலைக்கழகத்தினை ஆரம்பிப்பது தொடர்பாக நேற்றுமுன்தினம் பல்கலைக்கழகங்களின் ஆணைக்குழுவின் தலைவரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதன் பிரதி கல்வி அமைச்சிடமும் கையளிக்கப்பட்டுள்ளதாக மக்கள் குழு தெரிவிக்கிறது.

வன்னிப் பல்கலைக்கழகம் ஆரம்பிப்பது தொடர்பாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் அரச உயர் அதிகாரிகள், புத்திஜீவிகள் மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ள இந்த மகஜரினை மக்கள் குழு பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் கொழும்பில் வைத்துக் கையளித்துள்ளனர்.

இந்த மக்கள் குழுவில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் திணைக்கள உயர் அதிகாரிகள் புத்திஜீவிகள் மற்றும் வவுனியா வளாகத்தின் ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவர்கள் அங்கம் வகிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

பிரதிக்கல்வி அமைச்சரை எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வின்போது வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோரின் ஏற்பாட்டில் மக்கள் பிரதிநிதிகள் குழு சந்திக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (8)




## வன்னிக்குச் சென்ற இளைஞர் ஒருவர் காணாமற்போயுள்ளதாக முறைப்பாடு

வவுனியாவில் இருந்து வன்னிக்கு சென்ற இளஞர் காணாமற்போயிருப்பதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி விஜயகுமார் அகிலன் என்ற 24 வயதான இளைஞன் வவுனியாவில் இருந்து புறப்பட்டு தனது ஊரான முல்லைத்தீவுக்குச் சென்றதாகவும் இதன் பின்னர் இரண்டாம் திகதி உறவினர்களை பார்வையிட புதுக்குடியிருப்புப் பகுதிக்கு போனதாகவும் கூறப்படுகிறது.

இதன் பின்னர் இவருக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் இருப்பதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுக்கு இவரின் சகோதரன் முறைப்பாடு தெரிவித்துள்ளார். (8)

## பயிர்ச்செய்கைக்கு நீரில்லை

முத்தையன்கட்டுக் குளத்தின் கீழுள்ள ஐந்தாம், ஆறாம் கண்டங்களில் வாழும் விவசாயிகள் பயிர்ச்செய்கைக்கு உரிய நீர் கிடக்காமையினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

போதிய நீரின்றி அவர்களின் பயிர்ச்செய்கைகள் பெருமளவில் பாதிக்கப்படுவதுடன், சில பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகள் காடுகளாக உருவாகும் நிலையும் காணப்படுகிறது.

அத்துடன் இங்கு வாழும் ஏழை விவசாயிகள் வாழ்வதற்குரிய அடிப்படை வசதியற்று காடுகளில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. சிலர் இப்பகுதியை விட்டு வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து செல்லும் நிலையும் ஏற்பட்டுள்ளதாகத் தொவிக்கப்படுகிறது. (8-34-201)

## உள்ளூராட்சி வார கலைநிகழ்வுகள் இன்று

கிளிநொச்சி,ஓக.13

கரைச்சிப்பிரதேச சபையின் உள்ளூராட்சி இறுதிநாளான இன்று கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறும் என கரைச்சிப் பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர். (8-305)



பச்சிலைப்பள்ளியில் உள்ள நான்கு முன்பள்ளிகளின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. முன்பள்ளிச் சிறுவர்கள் விளையாட்டொன்றில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். *(படம் : பரந்தன் செய்தியாளர்)*

## கண்டாவளைக் கோட்டப் பாடசாலைகளின் தமிழ்மொழித்தினப் போட்டி முடிவுகள்

விசுவமடு,ஓக.13

கண்டாவளைக் கல்விக் .கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கோட்ட மட்டத்திலான தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவற்றின் விவரம் வருமாறு:-

**பிரிவு I**

**இசையும் - அசைவும்**

1ஆம் இடம் - இ.நிலானி (பிரமந்தனாறு ம.வி.), 2ஆம் இடம் - க.சரண்யா (தம்பிராசபுரம் அ.த.க.பாடசாலை), 3ஆம் இடம் - சி.சிந்துஜா (கண்டாவளை ம.வி.).

**பா ஓதல்**

1ஆம் இடம் - சு.கோபிகிருஷ்ணா (தருமபுரம் இல.1, அ.த.க.பாடசாலை), 2ஆம் இடம் - செ.சந்தியா (குமாரசாமிபுரம் அ.த.க. பாடசாலை), 3ஆம் இடம் - தி.சங்கவி (கண்டாவளை ம.வி.).

**ஆக்கம் - எழுத்து**

1ஆம் இடம் - யோ.துஷாந் (தருமபுரம் ம.வி.), 2ஆம் இடம் - இ.குயிலினி (தருமபுரம் இல.1, அ.த.க.பாடசாலை), 3ஆம் இடம் - இ.நித்தியா (நாகேந்திரா வித்தியாலயம்)

**பேச்சு**

1ஆம் இடம் - இ.சுபாஜினி (தருமபுரம் இல.1, அ.த.க.பாடசாலை), 2ஆம் இடம் - வி.பிரவீனா (தம்பிராசபுரம் அ.த.க.பாடசாலை).

**வாசிப்பு**

1ஆம் இடம் - பா.அட்சயன் (பரந்தன் இந்து ம.வி.), 2ஆம் இடம் அ.விதுசாளினி (பிரமந்தனாறு ம.வி.), 3ஆம் இடம் - கே.லக்சோபனா (தருமபுரம் இல.1 அ.த.க.பாடசாலை)

**கதை கூறல்**

1ஆம் இடம் - பு.லக்ஷி (தருமபுரம் இல.1 அ.த.க.பாடசாலை), 2ஆம் இடம் - வீ.டிசாளினி (முரசுமோட்டை அ.த.க. பாடசாலை), 3ஆம் இடம் - கே.ரிஷாந்தினி (பெரியகுளம் ஐயனார் வித்தி).

**நடனம் (தனி)**

1ஆம் இடம் - அ.சனோஜினி (தருமபுரம் இல.1 அ.த.க. பாடசாலை), 2ஆம் இடம் - பா.ஜதுஷா (பெரியகுளம் ஐயனார் வித்தி பாடசாலை), 3ஆம் இடம் - வ.வர்சினி (கல்மடுநகர் அ.த.க. பாடசாலை). (வளரும்)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகச் சாரதிகளுக்கு வீதி ஒழுங்குகள் குறித்துக் கருத்தமர்வு

தமிழீழக் காவல்துறையினரால் தமிழர் புனர்வாழ்வுக் கழகச் சாரதிகளுக்கான வீதிப்போக்குவரத்து ஒழுங்குமுறைகள் தொடர்பான கருத்தூட்டல் கருத்தமர்வு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு ஆகியவற்றின் சாரதிகள் பங்குகொண்ட இக்கருத்தமர்வில் வீதிவிபத்துகளின் போது பதிவாக்கப்பட்ட ஒளிப்படங்கள் சாரதிகளுக்கு காண்பிக்கப்பட்டு கருத்துகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழக் காவல்துறை நடுவப் பணியகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒருமணி முதல் 3.30 மணிவரை நடைபெற்ற இக்கருத்தமர்வில் தமிழீழக் காவல்துறை நடுவப் பணியகக் கண்காணிப்பாளர் மாதவன், குற்றத் தடுப்புப் பிரிவுக் கண்காணிப்பாளர் இயலரசன், போக்குவரத்துப் பிரிவுக் கண்காணிப்பாளர் கனகலிங்கம், போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சிவகுமாரன், பரிசோதகர் பவானி ஆகியோர் பங்குகொண்டிருந்தனர். (8)

## தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கு கிளிநொச்சிப் பாடசாலை மாணவர்கள் தெரிவு

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய பாடசாலை மாணவர்கள் பலர் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வெற்றியீட்டிய பாடசாலகளினதும் பாடசாலை மாணவர்களினதும் விவரங்கள் வருமாறு:-

**உடற்பயிற்சிப் போட்டி**

ஆண்கள் - முழங்காவில் ம.வி.

பெண்கள் - இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை.

சதுரங்கம் - பெண்கள் (15 வயதுப் பிரிவு - வட்டக்கச்சி ம.வி.)

**மெய்வல்லுநர் நிகழ்வுகள்**

**ஆண்கள்**

15 வயதுப் பிரிவு

உயரம்பாய்தல் - இ.சத்தியரத்தினம் (இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை)

தட்டெறிதல் - சி.லோஜிதன் (இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை)

17 வயதுப் பிரிவு

800 மீற்றர் ஓட்டம் - செ.ஜியந்தரூபன் (கிளிநொச்சி ம.வி.)

தட்டெறிதல் - செ.செல்வரஜீபன்(தருமபுரம் ம.வி.)

உயரம்பாய்தல் - க.கெசிக்குமார் (தருமபுரம் ம.வி.)

19 வயதுப் பிரிவு

உயரம்பாய்தல், தடைதாண்டல் - கு.கோபிநாத் (கிளி. இந்துக் கல்லூரி)

**பெண்கள்**

11 வயதுப் பிரிவு

உயரம் பாய்தல் ச.எழில்நிலா(புனித திரேசா மகளிர் கல்லூரி)

15 வயதுப் பிரிவு

குண்டெறிதல் - ச.அனுஷா (கனகபுரம் ம.வி)

நீளம் பாய்தல் - த.விஜயதாரணி (முழங்காவில் ம.வி.),

17 வயதுப் பிரிவு

தட்டெறிதல், குண்டெறிதல், ஈட்டி எறிதல் சீ.தாரணி(அக்கராயன் ம.வி.)

குண்டெறிதல் - வே.ரமா (இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை)

உயரம் பாய்தல் - ந.ஜான்சி (முழங்காவில் ம.வி.)

100 மீ.ஓட்டம் - இ.துவாரகா (அக்கராயன் ம.வி.).

200 மீ.ஓட்டம் - இ.துவாரகா (அக்கராயன் ம.வி.)

19 வயதுப் பிரிவு

தட்டெறிதல் - கு.துஷ்யந்தினி (பரந்தன் இந்து.ம.வி.)

1500 மீ. ஓட்டம் - ம.சுபாஜினி (கிளி இந்துக கல்லூரி. (8-405-201)

## முல்லை மாவட்ட மாதர் சங்கங்களின் ஆய்வுப்பட்டறை சிறப்புற நடந்தது

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட மாதர் சங்கங்களின் ஆய்வுப்பட்டறை அண்மையில் நடைபெற்றது. பெண்களின் அபிவிருத்தி தொடர்பாக இப்பட்டறையில் ஆராயப்பட்டது.

முன்னதாக பொதுச்சுடரினை பெண்கள் ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் சுதாமதி ஏற்றினார். தமிழீழத் தேசியக்கொடியினை அரசியல் துறையைச் சேர்ந்த தமிழ்கவி ஏற்றினார். நிகழ்வில் சிறப்புரையினை தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நிகழ்தினார்.

கருத்துரைகளை முல்லைமாவட்ட அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சின்னண்ணா, மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி மற்றும் தமிழ்கவி, சுதாமதி ஆகியோர் நிகழ்தினர்.

# அரசாங்க அறிவித்தல்

## வாக்காளர் இடாப்புத் திருத்தம் - 2004

(1) 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின்படி 2004 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் வாக்காளர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன.

| பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள் | பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் |
|---|---|
| 2.1 மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | அரசாங்க அதிபர் அம்மாவட்டத்திற்குப் பதியும் அலுவலராயிருக்கும் அந்தந்த தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான வாக்காளர் பதிவேட்டுப் பிரதி |
| 2.2 பிரதேச செயலகம்/உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள வாக்காளர் பெயர்களடங்கிய பதிவேட்டின் பாகங்கள் |
| 2.3 மாநகர/நகர/பிரதேச சபை அலுவலகங்கள் | மாநகர சபைகள், நகர சபைகள் பிரதேசங்களினுள் வதியும் சகல வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள் |
| 2.4 ஒவ்வொரு கிராம அலுவலர்களின் அலுவலகம் | கிராம அலுவலர் பிரிவிற்குள்ளிருக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள் |

(3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு வாக்காளராகத் தகுதியுள்ள ஒவ்வொருவரும், தமது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிட்ட அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புக்களைப் பார்வையிடுவதன் மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

(4) வாக்காளர் இடாப்பை அல்லது அதன் பொருத்தமான பாகத்தை பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக்காணும் ஒவ்வொருவரும், 4.1 2004 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினையுடைய ஒவ்வொருவரும்,

(5) தத்தமது பகுதி கிராம அலுவலரிடம் 12.08.2004 தொடக்கம் 10.09.2004 ஆம் திகதிவரை இவற்றுக்கான விண்ணப்பங்களைப் பெற்று பூரணப்படுத்தி அவற்றினை மீள கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல்கள் அலுவலகம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
11.08.2004

உதவி பதியும் அலுவலர், தேர்தல் மாவட்ட இல.10 -
யாழ்ப்பாணம்.

### ஆளொருவரின் பெயரை வாக்காளர் இடாப்பில் பதிவதற்கென அந்த ஆளாலேயே செய்யப்படும் விண்ணப்பம் - 2004

.........................................................பிரிவு கிராம அலுவலர் ஊடாக, யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட பதியும் அலுவலருக்கு,

1.............................................. ஆகிய நான் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் எனது பெயரை ஒரு வாக்காளராகப் பதிவதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

2. எனது விண்ணப்பத்தின் சார்பில் கீழ்க்காணும் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

2.1 முழுப்பெயர்:.......................................
2.2 விலாசம்:.........................................
2.3 பிறந்த திகதியும், வயதும்:...........................
(01.06.1986 ஆம் திகதியும், அதற்கு முன்னர் பிறந்தவர்களும் பதிவுசெய்யத் தகுதியுடையவர்கள் என்பதைக் கருத்தில்கொள்ளவும்)
2.4 நீங்கள் இவ்வீட்டின் பிரதான குடியிருப்பாளரா?..........
2.5 பிரதான குடியிருப்பாளருடனான உறவுமுறை..........
2.6 2004-06-01 ஆம் திகதி மேற்குறிப்பிட்ட விலாசத்தில் சாதாரண குடியிருப்பாளரா?..........
2.7 பால்.......... இனம்..........
2.8 பதிவுமூலம் இலங்கைப் பிரஜையாயின் பிர்ஜாவுரிமைப் பத்திர இலக்கத்தினைக் குறிப்பிடுக..
2.9 தேசிய அடையாள அட்டை இலக்கம்:..........................

3. வாக்காளராகப் பதிவுசெய்யப்பட வேண்டிய இட விவரம்:....................

3.1 தேர்தல் மாவட்டம் இல.10 யாழ்ப்பாணம்
3.2 வாக்கெடுப்பு பிரிவு:...................
3.3 வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்:...................
3.4 கிராம அலுவலர் பிரிவும், இலக்கமும்:...................
3.5 கிராமம்/வீதியின் பெயர்:...................
3.6 வீட்டு இலக்கம்:...................
3.7 மேற்குறித்த வீட்டு இலக்கத்தில் 2003 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள பெற்றோர்/உறவினர் விவரம்:

| | பெயர் | தொடர்இல. |
|---|---|---|
| 1) | .................................. | .................... |
| 2) | .................................. | .................... |
| 3) | .................................. | .................... |
| 4) | .................................. | .................... |

திகதி:- 2004....................

....................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

#### கிராம அலுவலரின் சான்றிதழ்

குறிப்பு: 2003 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு விவரம் பின்பற்றப்படல் வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

01. தேர்தல் மாவட்டம் இல.10 யாழ்ப்பாணம்:....................................
02. வாக்கெடுப்புப் பிரிவு:............................
03. வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்:............................
04. கிராம அலுவலர் பிரிவும், இலக்கமும்:............................
05. கிராமம்/வீதியின் பெயர்:............................
06. வீட்டு இலக்கம்:............................
07. 2003 ஆம் ஆண்டு பதிவேட்டின்படி இப்பெயர் பதியப்படவேண்டிய பக்க இலக்கம்: ................................ (உதாரணம்:- அ/15/24)

மேற்காட்டப்பட்ட ....................என்பவர் வாக்காளராகப் பதியப்படுவதற்கு தகுதியுடையவர். இவரின் பிறந்ததிகதி ................ஆகும். இத்திகதி என்னால் பரிசீலிக்கப்பட்டது.

திகதி:- 2004....................

....................
கிராம அலுவலரின் ஒப்பம்
பதவிமுத்திரை

### தனது நெருங்கிய உறவினரொருவரை/தனது வீட்டில் குடியிருக்கும் ஒருவரை ஒரு வாக்காளராகப் பதிவதற்கு அவரின் சார்பில் வேறு ஆளாலே செய்யப்படும் விண்ணப்பம் - 2004

அ. எவர் சார்பாக விண்ணப்பிக்கப்படுகின்றதோ அவரின் முழுப்பெயர்:................
விலாசம்:..............................
ஆ. அவரின் தேசிய/வேறு அடையாள அட்டை இலக்கம்..............................
இ. அவர் பிரதான குடியிருப்பாளரா?.........
ஈ. அவருக்கும் எனக்குமுள்ள உறவுமுறை:.........
உ. அவருடைய தொழிலும் தற்போதைய விலாசமும்:.........
ஊ. அவரின் பிறந்ததிகதியும், வயதும்:.........
எ. பால்:......... இனம்:.........
ஏ. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:......
ஐ. விலாசம்:.......................... ஒ. வாக்காளராகப் பதிவுசெய்யப்படவேண்டிய இட விவரம்:.........

01. தேர்தல் மாவட்டம் இல.10 - யாழ்ப்பாணம்
02. வாக்கெடுப்புப் பிரிவு:...................
03. வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்:...................
04. கிராம அலுவலர் பிரிவும், இலக்கமும்:...................
05. கிராமம்/வீதியின் பெயர்:.......... 06. வீட்டு இல:......................
07. மேற்குறித்த வீட்டிலக்கத்தில் 2003 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளவர்களின் விவரம்:

| | பெயர் | தொடர்இல. |
|---|---|---|
| 1) | .................................. | .................... |
| 2) | .................................. | .................... |
| 3) | .................................. | .................... |
| 4) | .................................. | .................... |

மேலேயுள்ள விவரங்கள் எல்லாவகையிலும் உண்மையானவை எனவும் எந்த ஆள் சார்பில் இவ்விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்த ஆள் மேற்குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்திற்கான வாக்காளர் ஒருவராகப் பதிவுசெய்யப்படுவதற்குத் தகுதியுடையவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:- 2004....................

....................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

#### கிராம அலுவலரின் சான்றிதழ்

குறிப்பு: 2003 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு விவரம் பின்பற்றப்படல் வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ளவும்.

01. தேர்தல் மாவட்டம் இல.10 யாழ்ப்பாணம்:....................................
02. வாக்கெடுப்புப் பிரிவு:............................
03. வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்:............................
04. கிராம அலுவலர் பிரிவும், இலக்கமும்:............................
05. கிராமம்/வீதியின் பெயர்:............................
06. வீட்டு இலக்கம்:............................
07. 2003 ஆம் ஆண்டு பதிவேட்டின்படி இப்பெயர் பதியப்படவேண்டிய பக்க இலக்கம்: ................................ (உதாரணம்:- அ/15/24)

மேற்காட்டப்பட்ட ....................என்பவர் வாக்காளராகப் பதியப்படுவதற்கு தகுதியுடையவர். இவரின் பிறந்ததிகதி என்னால் பரிசீலிக்கப்பட்டது.

திகதி:- 2004....................

....................
கிராம அலுவலரின் கையொப்பம்
பதவிமுத்திரை

(சி-36577)(34)

# 28ஆவது ஒலிம்பிக் பெருவிழா

# எதென்ஸில் இன்று ஆரம்பம்

உலகப் புகழ்பெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் வரிசையில் 28ஆவது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் இன்று கிரேக்க நாட்டின் தலைநகர் எதென்ஸில் மிகக் கோலாகலமாக ஆரம்பமாகின்றன.

இன்று முதல் எதிர்வரும் 29ஆம் திகதி வரையான 17 நாள்கள் நடைபெறவுள்ள இப் போட்டிகளுக்காக எதென்ஸ் நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது. ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்படும் நாடாகத் தமது நாடு தெரிவு செய்யப்படுவதை உலக நாடுகள் தமக்குக் கிடைத்த பெரும கௌரவமாகக் கருதிவருகின்றன.

அந்த வகையில் ஒலிம்பிக் போட்டிகள் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட நாடு என்ற பெருமையை ஏற்கனவே பெற்றிருக்கும் கிரேக்க நாடு, இம்முறையும் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு மீண்டும் தாம் தெரிவானதைப் பெரும் கௌரவமாகக் கருதிக் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சிறந்த முறையில் திட்டமிட்டுத் தொழில்சார் வல்லுநர்கள் பலரின் பங்களிப்புடன் பெருமளவு செலவு செய்து இதற்கான ஒழுங்குகளைச் செய்துமுடித்தது.

கிரேக்க அரசின் கடந்த 50 ஆண்டுகால வரலாற்றில் முன்னெப்போதும் இத்தகைய பெரும்



ஒலிம்பிக் பதாகை

தொகை நிதி எந்தவொரு வேலைத்திட்டத்துக்கும் செலவு செய்யப்படவில்லை எனக் கூறும அளவுக்குப் பெரும் செலவு செய்துள்ளது. போட்டிகள் நடைபெறவுள்ள அரங்குகள், மைதானங்கள், போட்டிகளில் கலந்துகொள்ளும் வீர வீராங்கனைகள் மற்றும் போட்டிகளை நடத்தும் உதவியாளர்களுக்கான தங்குமிடங்கள், நவீன போக்குவரத்து வசதிகள் போன்ற சகல விடயங்களையும் உள்ளடக்கிய ஒலிம்பிக் கிராமம் ஒன்றை நவீன முறையில் திட்டமிட்டு வடிவமைத்து நிர்மாணித்துள்ளது.

இந்த 28ஆவது ஒலிம்பிக் போட்டிகளைச் சிறப்பான முறையில் நடத்தி முடிப்பதற்குக் கிரேக்க அரசு காட்டிவரும் சிரத்தைக்குச் சற்றும குறையாத வகையில் தமது தாய்நாட்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் சகல நாடுகளுக்கும் திருப்தி ஏற்படுத்தும் வகையிலும், அதன் மூலம் கிரேக்க நாட்டுக்கும புகழையும் பெருமையையும் ஈட்டிக்கொள்ளும் நோக்கிலும் சகல கிரேக்கப் பொதுமக்களும் உற்சாகத்துடன் தாமாக முன்வந்து ஒலிம்பிக் ஏற்பாடுகளுக்கு உதவப் போட்டிபோட்டுச் செயற்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வித பணியில் உதவும் பொருட்டு 20 ஆயிரம் தன்னார்வத் தொண்டர்களைத் திரட்டக் கிரேக்க அரசு முயன்றவேளையில் அதற்காக 6 லட்சம கிரேக்கப் பொதுமக்கள் முன்வந்ததிலிருந்து, அந்த நாட்டுப் பொதுமக்கள் இப்போட்டிகள் குறித்து எந்த அளவுக்கு ஆர்வமும் ஊக்கமும கொண்டுள்ளனர் என்பதை உணரக்கூடியதாகவுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளில் இம்முறை 28 வகையான விளையாட்டுகள் நடைபெறவுள்ளன. ஒலிம்பிக் கிராமத்திலுள்ள பலதரப்பட்ட 38 மைதானங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன. உலகத்தின் ஐந்து கண்டங்களையும் சேர்ந்த 204 நாடுகளின வீர, வீராங்கனைகள் இப்போட்டிகளில் பங்குகொள்கின்றனர். பங்குபற்றும் ஆண்கள மற்றும் பெண்கள் உட்பட விளையாட்டு வீரர்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து ஐந்நூறு ஆகும். இப்போட்டிகளின் மத்தியஸ்தம மற்றும் அனைத்து நடைமுறைப் பணிகளையும் மேற்கொள்வதற்காக 5 ஆயிரத்து 500 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவை தவிர செய்திகளைச் சேகரிக்கும் வகையில் ஒலி, ஒளி பரப்பாளர்கள், படப்பிடிப்பாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் என்ற வகையில் 21 ஆயிரத்து ஐந்நூறு பேர் ஈடுபடவுள்ளனர்.


போட்டிகளில் வெற்றியீட்டும் விளையாட்டு வீரர்கள், அவர்கள் பெறும் நிலைகளுக்கேற்ப தங்கம்,, வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்படுவர். போட்டிகளில் வெற்றியீட்டுவோர்களுக்காக இம்முறை 301 தங்கப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

உலகில் பெரும்பாலான நாடுகளில் பயங்கரவாதம் தலைவிரித்தாடும் இன்றைய காலகட்டத்தில், எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளின்போதும் பயங்கரவாத நடவடிக்கைகள் இடம் பெறக் கூடுமென்ற அச்சம் காரணமாக முன்னெச்சரிக்கையாக இம்முறை ஒலிம்பிக் போட்டிக் காலத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கிரேக்க அரசு ஒழுங்கு செய்துள்ளது.

இதற்கு முன்னெப்போதும இல்லாத வகையில் இம்முறை ஒலிம்பிக் போட்டிகளின்போது நவீன தொழில்நுட்ப முறையிலான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கிரேக்க அரசு ஒழுங்கு செய்துள்ளது. இதன்பொருட்டு மின்னணு பாதுகாப்பு ஏற்பாடாக இலத்திரனியல் பாதுகாப்பு வலைப்பின்னலொன்று ஏற்படுத்தப்பட்டு ஒலம்பிக் கிராமத்துள் சகலரது நடமாட்டங்களும் நுணுக்கமாகக் கண்காணிக்கப்படவுள்ளன. இதுதவிர ஆகாயத்திலிருந்து விமானக் கண்காணிப்பு நடவடிக்கைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

ஒலிம்பிக் வரலாற்றில் முன்னரொரு தடவை சகல பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறிப் பயங்கரவாதச் சம்பவமொன்று இடம்பெற்றிருந்த காரணத்தாலேயே இத்தகைய முன்னெச்சரிக்கைப் பாதுகாப்பு ஏற்பாடுகள் இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1972ஆம் ஆண்டு ஜேர்மனி நாட்டின் 'மூனிச்' ஒலிம்பிக் கிராமத்தில் போட்டிகளில் கலந்துகொள்ள இஸ்ரேல் நாட்டிலிருந்து வந்து தங்கியிருந்த ஐந்து இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களைப் பலஸ்தீனிய தீவிரவாதிகள் பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றதுடன், பின்னர் அவர்களது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டமையையடுத்து ஐந்து இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களைக் கொலை செய்த சம்பவம் உலகிலுள்ள விளையாட்டு ரசிகர்கள் அனைவரையுமே அச்சமயத்தில் துயரத்தில் ஆழ்த்தியிருந்தது.

பண்டைக்கால கிரேக்க நாடு வீரத்தை முன்னிலைப்படுத்தி இயங்கியது. கிரேக்க அரசர்


எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கான பிரதான மைதானம்
(ஹெலியில் இருந்து எடுக்கப்பட்ட படம்)

கள் தம்நாட்டு ஆண்மக்கள் திடகாத்திரமாகவும, உறுதியான உடற்கட்டுடனும் விளங்கவேணடுமென்பதில் ஆர்வங்காட்டினர். அந்த வகையில் அரசகுமாரிகளை மணக்க விரும்பி முன்வரும் வீரதீரமிக்க இளைஞர்களுக்கு அரச குமாரிகளை மணம்புரியும் சந்தர்ப்பம் வாய்த்ததோடு அரச பதவியை அடையும் அரியவாய்ப்பும் கிட்டியது.

அந்நாளில் கிரேக்கத்தில் 'பிகா' என அழைக்கப்பட்ட நாட்டை ஆண்டுவந்த கொடுங்கோல் மன்னனான ஓனாமசின் தனது மகளான இளவரசி 'ஹிப்போடோமியா'வை மணஞ்செய்துகொள்ள விரும்பிய இளைஞர்களுக்கு வைத்த போட்டியில் விதித்த நியாயமற்ற நிபந்தனையை ஒரு சவாலாக ஏற்றுத் தனது வீரத்தாலும் அதே சமயம் புத்திசாதுரியமான அணுகு முறையாலும் போட்டியில் வென்று இளவரசியை மணந்ததுடன் மகுடத்தையும் 'பிலாப்ஸ்' என்ற வீரன் கைப்பற்றிக் கொண்டான்.

தனது வெற்றியைக் கொண்டாடும் பொருட்டு கிரேக்கத்தின் 'ஆல்பியஸ்' ஆற்றின் கரையில் அமைந்திருந்த அழகுமிகு 'ஒலிம்பியா' என்ற பள்ளத்தாக்கில் விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பித்து அவன் நடத்திய வெற்றிவிழாவே இன்றைய ஒலிம்பிக் போட்டிகளுக்குக் கால்கோளாக அமைந்ததுடன், 'ஒலிம்பிக் போட்டிகள்' என்ற பெயர் தொடர்ந்து நிலைக்கவும் காரணமாயிற்று.

"ஒரு மனிதனின் ஆற்றல் நான்கு ஆண்டுகள வரைதான் தொடர்ந்து நீடித்திருக்கும். அதன் பின்னர் அவனது உடல்வலு முன்னைய நிலையிலிருந்து குறைவடைந்து செல்லும்" என்ற தத்துவ ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுதது கிரேக்கர்கள் இப்பந்தயங்களை நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒழுங்குசெய்து நடத்தினர் என்ற கதையும் பொருந்தக்கூடியதொன்றே. இவ்விதம் நடததப்படும் போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்களுக்கு 'ஒலிவ்' மலர்க்கொத்துப் பரிசளிக்கப்பட்டது என்ற செவிவழிக் கதையையும் நம்பவேண்டியே உள்ளது.

இவற்றுக்கு ஆயிரத்து ஐநூறு ஆண்டுகள் கழித்து பிரெஞ்சு நாட்டவரான பியரி கூபர்டின் பிரபு என்பவரால் 'மனித குலத்தின் மாண்பு மிக்க வழித்துணை விளையாட்டுக்களே' என்ற கருத்தை வலியுறுத்தும் வகையிலும், விளையாட்டுக்களால் மனிதனின் திறமை வெளிப்படுததப்படுவதுடன் நட்பு, கூட்டுமனப்பான்மை, மன உறுதி மற்றும் இடைவிடா முயற்சி போன்ற தன்மைகளால் அவன் ஊக்குவிக்கப்படுகிறான் என்பதனை பொதுமக்களுக்கு உணர்த்தும் வகையிலும், பலசிரமங்களைச் சந்தித்து ஒழுங்குபடுததப்பட்டதே நவீன ஒலிம்பிக் பந்தயங்கள்.

1896ஆம் ஆண்டில் உதயமான நவீன ஒலிமபிக் பந்தயத்தின் பிதா என்று பியரி கூபர்டின் பிரபு கருதப்படுகிறார்.

அவர் காட்டிச்சென்ற வழியில் ஆயிரமாயிரம் வீர, வீராங்கனைகளை ஓரிடத்தில் கூடவைத்து, நாடு, இனம், மொழி மற்றும் மதம் என்ற வேறுபட்ட கலாசாரங்கள் பலவற்றையும் மறந்து எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஒரு தாய் மக்கள் என்றதோர் ஒப்பற்ற உணர்வோடு சகோதர பாசத்தோடு, சமுதாய நேசத்தோடு போட்டியிட்டுப் பெருந்தன்மையோடு நடக்க வைத்திருக்கிறது ஒலிம்பிக் பந்தயம.

கூடுதல் வேகம், கூடுதல் உயரம் மற்றும் கூடுதல் கருத்து என்ற மூன்றுமே நவீன ஒலிம்பிக்கின் முத்திரை வாக்கியங்களாகும். அதே போன்ற நீலம், சிவப்பு, கறுப்பு, பச்சை மற்றும் மஞ்சள் ஆகிய நிறங்களைக் கொண்ட ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்ட ஐந்து வளையங்களே நவீன ஒலம்பிக்கின் சின்னமாகும். இவை உலகத்தின் ஐந்து கண்டங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவன. வெள்ளைப் பின்னணி கொண்ட சற்சதுரத்தின் நடுவில் காணப்படும் ஐந்து வர்ணங்கள் கொண்டவையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த நிலையிலுள்ள வளையங்களே ஒலிம்பிக் கொடியின் அமைப்பாகும். ஒலிம்பிக்கின் பிறப்பிடமான ஒலிம்பியாவிலிருந்து ஒலிம்பிக் போட்டி நடைபெறும் நாட்டுக்குத் தொடர் ஓட்டக்காரர்களால் எடுத்துவரும் ஒலிம்பிக் தீபம் ஒவ்வொரு ஒலிம்பிக் விழாவின்போதும் ஆரம்ப நாளன்று போட்டிகள் நடைபெறும் பிரதான அரங்கில் ஏற்றி வைக்கப்படுவது சம்பிரதாயபூர்வ நிகழ்வாகும்.

ஒலிம்பிக் போட்டிகளின் பாரம்பரிய நிகழ்வுகளில் ஒன்றான ஒலிம்பிக் தீபம் தொடர் ஓட்டக்காரர்களால் எடுத்துவரும் நிகழ்வு கடந்த சில மாதங்களின் முன்பே ஆரம்பித்து வைக்கப்பட்டு விட்டது.

தென் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்கா நாடுகளின் ஊடாக 21 நகரங்களைக் கடந்து எடுத்துவரப்படும் ஒலிம்பிக் தீபம் போட்டிகளின் ஆரம்ப நாளான இன்று முறைப்படி எதென்ஸ் நகரில் நிகழ்வுகள் ஆரம்பமாகும் பிரதான அரங்குக்கு எடுத்து வரப்பட்டு ஏற்றப்படுவதன் மூலம் இம்முறை ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

கடந்த சில ஒலிம்பிக் போட்டிகளின்போது பிரச்சினைக்குரிய விடயமாகப் பரிணமித்திருந்த போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்கள் ஊக்க மருந்து உட்கொள்ளல் மற்றும் அதற்கான ஊசி மூலம் ஊக்க மருந்தை உடலில் செலுத்திக் கொண்டு போட்டிகளில் கலந்துகொள்வதான குற்றச்சாட்டுக்களை இம்முறை முறைப்படி கையாள்வதற்காக சிறப்பான வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ளும் பொருட்டு பல வைத்திய பரிசோதனை நிலையங்கள் உருவாக்கப்பட்டிருப்பதுடன், 47 வைத்திய அதிகாரிகளும் 566 உதவியாளர்களும் அதற்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

உலகின் பல நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு ரசிகர்களால் இன்றுவரை 5.3 மில்லியன் யூரோ பெறுமதியான நுழைவுச் சீட்டுகள் கொள்வனவுசெய்யப்பட்டுள்ளன.

1896ஆம் ஆண்டில் இடம்பெற்ற முதலாவது நவீன ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து இன்று



ஒலிம்பிக் - 2004 இன் சின்னங்கள்
அதெனா - வ்வேவொஸ்
இது கிரேக்க கடவுள்களின் பெயர்கள்

ஆரம்பமாகும் 28ஆவது ஒலிம்பிக் போட்டிகள் வரையில் ஒலிம்பிக் வரலாற்றில் பல முககிய நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

அந்த வகையில் 1920ஆம் ஆண்டில் பெல்ஜியம் நாட்டில் நடைபெற்ற 7ஆவது ஒலிம்பிக் போட்டிகளின்போதே முதன முதலில் ஒலிம்பிக்குக்கான கொடியாக 5 வளையங்கள் ஒன்றோடொன்று இணைந்த சின்னம் கொண்ட ஒலிம்பிக் கொடி ஏற்றப்பட்டது.

1928ஆம் ஆண்டு நெதர்லாந்து நாட்டில் நடைபெற்ற 9ஆவது ஒலிம்பிக் போட்டிகளிலேயே முதன்முதலில் இந்திய நாட்டுக் ஹொக்கி அணியினர் தங்கப்பதக்கத்தை வென்றெடுத்தனர்.

1932ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற 10ஆவது ஒலிம்பிக் போட்டிகளிலேயே ஒலிம்பிக் போட்டிகளுக்கெனத் தனியான ஒலிம்பிக் கிராமம் உருவாக்கும் நடைமுறை அறிமுகப்படுத்

தொகுப்பு: வியெஸ்ரி

தப்பட்டது. 1936ஆம் ஆண்டில் ஜேர்மனியில் நடைபெற்ற 11ஆவது ஒலிம்பிக் போட்டிகளிலேயே ஒலிம்பிக் தீபம் தொடர் ஓட்டமாக எடுத்துவரப்பட்டு தொடக்க விழாவின்போது ஏற்றப்படும் நடைமுறை முதன்முதலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1940 மற்றும் 1944 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்றிருக்கவேண்டிய 12ஆவது மற்றும் 13ஆவது ஒலிம்பிக் போட்டிகள் இரண்டாவது உலக மகா யுத்தம் காரணமாக இடம்பெறவில்லை என்பது கூட ஒலிம்பிக் வரலாற்றில் பதிவுபெற்ற சுவாரஸ்யமான சம்பவங்களாகும்.

1960ஆம் ஆண்டில் இத்தாலியில் நடைபெற்ற 17ஆவது ஒலிம்பிக் போட்டிகளின்போதே முதன முதலில் ஒலிம்பிக் போட்டி நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பும் வழக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1964ஆம் ஆண்டில் ஜப்பானில் நடைபெற்ற 18ஆவது ஒலிம்பிக் போட்டியே முதன் முதலாக ஆசிய நாடொன்றில் நடத்தப்பட்ட ஒலிம்பிக் போட்டி என்ற பெருமையை வரலாற்றில் பதிவு செய்துகொண்டது.

1968ஆம் ஆண்டில் மெச்சிக்கோ நாட்டில் இடம்பெற்ற 19ஆவது ஒலிம்பிக் போட்டிகளின் போதே போட்டியில் கலந்துகொள்வதற்கு முன்னர் வீரர்கள் ஊக்கமருந்து பாவித்துள்ளனரா என பரிசோதனை செய்யும் நடைமுறை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1976ஆம் ஆண்டில் கனடாவில் நடைபெற்ற 21ஆவது ஒலிம்பிக் போட்டிகளின் போதே ஆண பெண் சமத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் இருபாலாரிலும் ஒவ்வொருவர் என்ற ரீதியில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுச் செய்தி

கீழே குறிப்பிட்டுள்ள பெயருடையவர்கள் அருகில் உள்ள செஞ்சிலுவைச சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

அலுவலக நேரம்: திங்கள் தொடக்கம் வெள்ளி வரை 8 மணி தொடக்கம் 5 மணிவரை (விடுமுறை நாள்கள் தவிர)

| | | |
|---|---|---|
| 95. | செல்வரத்தினம் மேரி அஜந்தா | கடற்கரை வீதி, பருத்தித்துறை |
| 96. | த. சுந்தரலிங்கம் | ஆதி கேயிலடி, வல்வெட்டித்துறை |
| 97. | குணசிங்கம் அருள்மொழி | மே/பா. சோமசுந்தரம் மங்கேளஸ்வரி, V.M. வீதி, பருத்தித்துறை |
| 98. | ரத்தினவடிவேல் ராமநாதன் | நெடியகாடு. வல்வெட்டித்துறை |
| 99. | பழனியாண்டி பாலேஸ்வரன் | புது வீதி, வல்வெட்டித்துறை |
| 100. | உதயகுமார் சந்திரவதனி | கற்கோவளம் இடம்பெயர்ந்தோர் முகாம், பருத்தித்துறை |
| 101. | தங்கலிங்கம் கண்ணகிதேவி | கற்கோவளம் இடம்பெயர்ந்தோர் முகாம், பருத்தித்துறை |
| 102. | குணபாலசிங்கம் மனோண்மணி | சூசையப்பர் கோயிலடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை |
| 103. | ஜெ. செபமாலை | புனித நகர், கற்கோவளம், பருத்தித்துறை |
| 104. | தாசீசியஸ் மேரி ஷிப்னா | புனித நகர், கற்கோவளம், பருத்தித்துறை |
| 105. | ஜோர்ஜ் அந்தோனியாப்பிள்ளை | புனித நகர், கற்கோவளம், பருத்தித்துறை |
| 106. | சபாபதிப்பிள்ளை | ராதா வாசம், வல்வெட்டி |
| 107. | தம்பாப்பிள்ளை செல்வரத்தினம் | வல்லாலை ஒழுங்கை, தும்பளை |
| 108. | வரப்பிரகாசம் மேரி மெட்டலின் | தொம்மையப்பர் வீதி, பருத்தித்துறை |
| 109. | ருசீந்திரம் ஜெயலட்சுமி | தேனியம்பை வீதி, வல்வெட்டித்துறை |
| 110. | விவேகானந்தராசா கிருஷ்ணகுமார் | ஜீவன்ஸ் இல்லம், பன்னையம்பதி, பருத்தித்துறை |
| 111. | கந்தசாமி சின்னக்கிளி | சல்லி வளைவு, பொலிகண்டி |
| 112. | நடராசா கந்தசாமி | தங்கவேலாயுதம், சுப்பர்மடம், பருத்தித்துறை |
| 113. | ப. வேலும்மயிலும் | வல்வெட்டித்துறை |
| 114. | லிங்கராசா தமிழகம் | A.G.A. ஒழுங்கை, வல்வெட்டித்துறை |
| 115. | இன்னாசிமுத்து லோயலா | கென்றியரசர் கல்லூரி முன்பாக, இளவாலை |
| 116. | தியாகராசா தனலட்சுமி | கல்வளைப் பிள்ளையார் கோயில் தெற்கு வீதி, சண்டிலிப்பாய் |
| 117. | கதிரன் மேரி | உச்சியோடை, மானிப்பாய் வடக்கு |
| 118. | கிருஷ்ணசாமி அன்புராணி | புலவர் இடம்பெயர்ந்தோர் முகாம், நவாலி |
| 119. | வேலாயுதம் சத்தியபாமா | அளவெட்டி தெற்கு, அளவெட்டி |
| 120. | வைரமுத்து ராஜேஸ்வரி | ஸ்ரீபவனம், சங்குவேலி, சண்டிலிப்பாய் |
| 121. | செல்வராசா மைதிலி | மே/பா. A.M.அல்பிரட் (ஆசிரியர்), டச்சு வீதி, பண்டத்தரிப்பு |
| 122. | அரியகுட்டி லட்சுமிப்பிள்ளை | சுதுமலை கிழக்கு, மானிப்பாய் |
| 123. | நாகம்மா செல்வராசா | மானிப்பாய் வடக்கு |
| 124. | சிவஞானசுந்தரம் சுந்தரராணி | இலவச கல்வி நிலையம், மானிப்பாய் |
| 125. | அப்புத்துரை விக்னேஸ்வரன் | தம்பளாவத்தை, அளவெட்டி தெற்கு |
| 126. | மனோகரன் லலிதா | சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு |
| 127. | சவுந்தரராசா ஜெகதாம்பாள் | சங்குவேலி, மானிப்பாய் |
| 128. | நடேசு சரஸ்வதி | சுதுமலை தெற்கு, மானிப்பாய் |
| 129. | சங்கரப்பிள்ளை லட்சுமி | மே.பா. நகுலேஸ் கட்டுடை, மானிப்பாய் |
| 130. | எனோக் மெற்றில்டா | கீரிமலை வீதி, பெரியவிளான் |
| 131. | கந்தசாமி நாகராசா | அந்தோனி வசா, பத்திமா வீதி, மாதகல் |
| 132. | கஜராகவன் | புளியடி வளவு, பெரிய கிணத்தடி, அளவெட்டி |
| 133. | தேவராசா ராஜேஸ்வரி | அம்மன் கோயிலடி, மானிப்பாய் மேற்கு |

(அ-36539) (24-11-15)

குறிப்பு:-மிகுதிப் பெயர் விவரங்கள் நாளை (14.08.2004) சனிக்கிழமை வெளிவரும்.

## மூன்று சில்லு சைக்கிள்கள் திருத்தப்படும்

தென்மராட்சி,ஓக.13

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்ட மூன்று சில்லு சைக்கிள்களை திருத்திக் கொடுக்க யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் முன்வந்துள்ளது.

திருத்தம் செய்ய வேண்டிய மூன்று சில்லு சைக்கிள்களை வைத்திருப்போர் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலா செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

இதற்கான நிதி உதவியினை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## சப்பர வெள்ளோட்டம்

தென்மராட்சி,ஓக.13

கைதடி, இணுங்கித் தோட்ட கந்தசுவாமி ஆலயத்திற்கு ஏழு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சப்பரத்தின் வெளோட்ட விழா எதிர்வரும் 20 ஆம் திகதி இரவு 8.00 மணிக்கு நடை பெறும்.

ஆலய பரிபாலன சபை உப தலைவர் க.வே.முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெறும் விழாவில் சப்பரச் சிப்பாச்சாரியார் கனகரத்தினம் பத்மநாதனுக்கு 'சிற்பசொரூபி' என்ற பட்டத்தினை தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (எ-117)

## ஓய்வூதிய அதிகரிப்பு வழங்க ஏற்பாடு

யாழ்.பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுவோரில் ஓய்வூதிய அதிகரிப்பு தகைமையுடையோரில் ஒரு பகுதியினருக்கு ஓய்வூதிய அதிகரிப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. ஓகஸ்ட் மாத ஓய்வூதிய வவுச்சரில் ஓய்வூதிய அதிகரிப்புடன் நிலுவையும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)



உ

இளவாலை, நாதோலை

அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய

### மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா

16.08.2004( திங்கட்கிழமை)

காலை 8.00 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறும். மாலை 5.00 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையை அடுத்து, திருவூஞ்சல் நடைபெற்று முத்துமாரி அம்மன் பூந்தண்டிகையில் திருவீதி உலாவரும் காட்சி இடம்பெறும்.

அடியார்கள் அனைவரும் வருக!
அம்மனின் அருள் பெறுக!!

- விழா உபயகாரர்கள்.

(35118)(34-11-15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

23 ~ 05 ~ 1938



24 ~ 08 ~ 2003

### அமரர் கனகசபை கந்தையாபிள்ளை

*(உரிமையாளர், அமுதா நகை மாளிகை)*

குடும்பத்தின் குலவிளக்கே!
குன்றா மணி விளக்கே!
பாசத்தின் பார்விளக்கே!
பண்புடைய திருவிளக்கே!
எம்மைவிட்டு நீர் பிரிந்தாலும்
எம்முள்ளே உமது அன்பு விளக்கு
ஆண்டொன்று சென்றாலும்
நினைவலையாக நிழலாடுதையா!!!

*திருமனை,*
*நடுத்தெரு,*
*காரைநகர்.* (35170) (23-11-15)

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்.

# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

## முதலாம் ஆண்டு அஞ்சலி

பிறப்பு 12 03 1922



இறப்பு 26 07 2003

திருமதி
### இராசலட்சுமி சோமசுந்தரம் (தாய்)

## 26ஆம் ஆண்டு அஞ்சலி

பிறப்பு 02 11 1912



இறப்பு 27 06 1978

அமரர்
### Dr. சரவணமுத்து சோமசுந்தரம் (தந்தை)

ஆசையோடு எமைப் பெற்றெடுத்து
பாசமதை ஊட்டி வளர்த்தெடுத்து
ஞான ஒளி பாய்ச்சி எம்மை வாழ வழி காட்டிச் சென்ற
எங்கள் அன்புத் தெய்வங்களே! உங்களை நாங்கள் இன்று
பாசத்துடன் நினைவு கூருகின்றோம்.

லயன் Dr. சோ. சுந்தரராஜன்,
இல.02, செட்டித்தெரு,
நல்லூர்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமகன்,
உற்றார், உறவினர்கள்.

(35115)

# அடக்கி ஒடுக்கப்படுவதுதான் கலாசாரம், பண்பாடா?



அண்மைக்காலமாக பல்வேறு காரணங்களால் எமது கலாசாரப் பண்பாடுகள் சீரழிகின்றன என பலரும் குரல்கொடுத்த வண்ணமேயுள்ளனர். ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயரிய பண்பு மாறாமல் இருக்கவேண்டும் என்பதற்காக சமய மற்றும் சமூக, கலை பண்பாட்டு ரீதியாக இது ஆணித்தரமாக எடுத்துரைக்கப்படுகின்றது. இது வரவேற்கத்தக்கதே.

ஆனால், நடைமுறையில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கட்டுக்கோப்புடன் குடும்பமாக வாழமுயலும்போது சந்தர்ப்பவசத்தால் மனமொத்து வாழமுடியாத இருவர் மணவாழ்வில் இணைந்துகொண்டால் அவர்கள் வாழ்நாள் முழுவதும் துன்பத்தில் வாழவேண்டியுள்ளது. அல்லது விவாகரத்து வரை செல்லவேண்டியுள்ளது.

இதனால், இருபாலாரும் பாதிக்கப்பட்டாலும் முக்கியமாக, அதிகமாகப் பாதிக்கப்படும் பெண்கள் பற்றியே இங்கு குறிப்பிடுகின்றேன்.

மனித உரிமைகள் மட்டுமன்றி மிருகங்களின் உரிமைகள் .பற்றியும் கூட அக்கறை கொள்ளும் இன்றைய நாகரிக சமூகத்தில், பெண்கள் ஒடுக்குமுறைக்குட்படுவது வேதனைகுரியதொன்றாகும். பெண்கள் ஆண்களுக்கு நிகராக எல்லாத்துறையிலும் வளர்ச்சிகண்டிருக்கும் இக்காலத்தில் மனைவியை அடக்கி, ஒடுக்கி தான் எப்படியும் வாழலாம் என எண்ணும் கணவனும் கொடுங்கோல் ஆட்சிபுரியும் மாமியார் மாமன் குடும்பத்தினரும் தமது ஈனச் செயல்களைச் செய்துகொண்டு இந்தச் சமூகத்தில் இன்னும் தலைநிமிர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதுதான் வெட்கப்படவேண்டிய விடயம் ஆகும்.

சமூகம், கலாசாரம், பண்பாடு என்று பயந்து கொண்டு இந்த ஒடுக்குமுறைகளுக்குப் பலியாகும் பெண்கள் அதிகமுள்ளனர்.

வெளியே சொல்லிக்கொள்ளமுடியாமல் உடல், உள ரீதியாக மிகவும் துன்பப்படும் பெண்கள், இங்கு வீட்டுக்குவீடு இருக்கின்றார்கள். இவ் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகத் துணிந்து போராடும் தன்மை சில பெண்களிடம் மட்டும் உண்டு. அவ்வாறு போராடி விவாகரத்துப் பெற்று வெளியே வந்தாலும் கூட அப்பெண்கள் மட்டில் சமூகம் இன்னும் ஓர் ஆரோக்கியமான பார்வையைச் செலுத்த முன்வரவில்லை.

அண்மைக்காலமாக குடும்பப் பிரச்சினை, விவாகரத்து வழக்குகள், கொலைகள் மிக அதிகம் எனச் செய்திகள் கூறுகின்றன.

குடும்பப் பெண்கள் ஒடுக்கப்படும் இப்பிரச்சினைக்குத் தீர்வு என்ன? அடங்கி ஒடுங்கி இருப்பதுதான் கலாசாரம், பண்பாடா? அல்லது விவாகரத்து தான் தீர்வா?

கலாசாரம், பண்பாடு பற்றி அக்கறை கொள்வோர் இப்பெண்கள் விடயத்திலும் அக்கறை கொள்ளவேண்டும். கணவனுக்குக் கீழ்ப் படிந்து அடங்கி, ஒடுங்கி வாழ்வதும் அவராலும் அவர் குடும்பத்தினராலும் கொலை செய்யப்படும் அளவுக்கு ஒடுங்கிவாழ்வதுதான் தமிழ்ப்பண்பாடா?

அவ்வாறின்றி, விவாகரத்துப் பெறலாம் என்று கூறினால் விவாகரத்துதான் இவற்றிற்குத் தீர்வா? விவாகரத்து என்பது சாதாரணமான ஒன்றாகிவிட்டால் பாதிக்கப்படும் பெண்களின் நிலை என்ன?

அவர்களுக்கு சமூகத்தில் பாதுகாப்பு உண்டா?

பொருளாதார வசதி உண்டா? அல்லது இவர்கள் மறுமணம்செய்துகொள்வதை சமூகம் மனப்பூர்வமாகப் பாகுபாடின்றி ஏற்றுக்கொள்கின்றதா?

பண்பாடு ஏற்றுக்கொள்ளுமா?

எனவே, குடும்பப் பிரச்சினைகளை விவாகரத்து வரை கொண்டுசெல்லாமல் குடும்பத்தினுள்ளேயே தீர்த்து வைக்கக்கூடியவாறு சட்ட ஒழுங்குகள் மற்றும் உதவிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

வருடாந்தம் பெண்கள் தினம் கொண்டாடினால் பெண்களின் விடுதலை கிடைத்துவிடும் என்றில்லை. பல பெண்கள் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், சட்ட ஆலோசனை அமைப்புகள், உள வள அமைப்புகள் என்பன இயங்குகின்றன. ஆனால், இவர்களின் சேவைகள் சாதாரண குடும்பப் பெண்களைச் சென்றடைவதில்லை.

கிராமத்துக்குக் கிராமம் பெண்கள் அமைப்புகளை உருவாக்கி வீட்டுக்கு வீடுசென்று எல்லாப் பெண்களையும் அதில் இணைத்து குடும்பங்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு இந்த அமைப்புகள் ஊடாக சட்ட உதவி, உள, வள ஆலோசனை, பாதுகாப்பு உதவி, மனித உரிமை பற்றி விளக்க உதவிகள் போன்றவற்றை வழங்கி, அப்பெண்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டும். குடும்பங்களில் உள்ள அறியாமையை நீக்கித் தீர்வு காணவேண்டும். இவற்றை ஏற்றுக்கொள்ளாத கணவன் மற்றும் குடும்பத்தினருக்கு கூரிய தண்டனை வழங்கக்கூடியவாறு சட்டமூலங்கள் உருவாக்கப்படவேண்டும். முக்கியமாகப் பெண்கள் குடும்பத்தில் கௌரவமாக நடத்தப்படக் கூடியவாறு கணவனாலோ மாமியார் குடும்பத்தாலோ இம்சைப்படுத்தப்படாதவாறு சட்டப் பாதுகாப்பு அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும்.

மேலைநாடுகளில் உள்ளது போன்று பெண்களை இம்சைப்படுத்தினால் சட்டரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்ற அச்சம் கணவனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஏற்படவேண்டும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் ஓரளவு பெண்களுக்குப் பாதுகாப்பளிக்கும் சட்ட ஒழுங்குகள் காணப்படுகின்றன. அவை கூட மேலும் மேம்படுத்தப்படவேண்டும். ஏனைய இடங்களிற்கும் பெண்களுக்கு பாதுகாப்பு மற்றும் பெண்ணுரிமை வழங்கப்பட அனைவரும் ஒன்றித்துச் செயற்படவேண்டும். சமூக நலன்விரும்பிகள் இதில் அக்கறைகொண்டு உடனடிச் செயலில் இறங்கவேண்டும். தவறின, மேலை நாடுகள் போன்று திருமணம், விவாகரத்து பின்பு திருமணம், விவாகரத்து என சமூகம் செல்வதைத் தடுக்கமுடியாது. பண்பாட்டையும் கட்டிக்காக்க முடியாது.

முதற்கட்டமாகப் பெண்கள் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், சட்ட ஆலோசனை அமைப்புக்கள் - உள,வள அமைப்புகள் தங்கள் செயற்பாடுகள் பற்றியும் அவர்களுடன் பொதுமக்கள் தொடர்புகொள்ளும் வழிகள் பற்றியும் பத்திரிகை மற்றும் வழிகள் மூலம் அறிவிக்கவேண்டும். ★

- ஜே.குமார் -
நல்லூர்

## சந்தியாவின் கடிதங்கள்



அன்புச் சகோதரி பிரியா!

நீ அன்புடன் எழுதிய கடிதம் கிடைத்தது. அக்கடிதம் மூலம் நீ பெண்களின், குறிப்பாக எம் யாழ்ப்பாணப் பெண்களின் நிலைமை, அதாவது முன்னேற்றம், கல்வி என்பன பற்றியும் பெண் வாழ்க்கையில் முன்னேற என்ன செய்யவேண்டும் என்றும் கேட்டிருந்தாய்.

நான் தான் விபரமாக ரசமாக எழுதுவேனென்று புகழ்ந்திருக்கின்றாய். அது எனக்குப் பெருமையாக இருக்கின்றது. (கொஞ்சம் ஓவர்தான்)

கடிதம் எழுதுவதே ஒரு கலை. ஓரளவு மன அமைதி, பக்குவம் வந்தாலேயே கடிதம் நன்றாக எழுதமுடியும்.

நீ கேட்டிருந்த எல்லா விடயங்களையும் எழுதுவதென்பது கஷ்டம்தான். எனவே, ஒவ்வொன்றாக எழுதுகின்றேன்.

'கல்யாணம்' பற்றிக்கேட்டிருந்தாய். அதை இக் கடிதத்தில் எழுதுகின்றேன்.

சீதனம் தேடுவதில் எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றனவோ அதைவிடப் பலமடங்கு சிரமம் கல்யாணத்தை நடத்துவது.

திருமண அழைப்பிதழைப் பார்த்தோமானால் பலவற்றில் 'தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய்' என எழுதுகிறார்கள். யாராவது தங்கள் குடும்பத்தினரை விடுத்து பக்கத்து வீட்டுக்குடும்பத்தினரையா அழைத்து வரப் போகின்றார்கள். ஒருவர் செய்வதைப் பார்த்து அர்த்தம் தெரியாமல் மற்றவர்கள் செய்யும் விநோதங்களில் இதுவும் ஒன்று.

அநேகமான திருமணங்களில் தெரியாதவர்களாக இருந்தால் கூடப் பெண்ணின் பெற்றோர்களை அறிந்து விடலாம். யாரிடமும் இல்லாத கலவரமும், பொறுப்பும், கவலையும் சேர்ந்து இருப்பவர்கள் தான் பெற்றோர்கள். திட்டத்தைவிட அதிகமான செலவும், உறவினர்களுடைய குறைச்சொல்லும் மாப்பிள்ளை வீட்டாரின் கெடுபிடியும் இவ்வாறு அவர்களை இனங்காட்டிவிடும்.

பெற்றோர்களும் சில தொந்தரவுகளைச் சுலபமாக எடுத்துக்கொள்ள முயற்சிசெய்வது நல்லது. மாப்பிள்ளை வீட்டார் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் ஒருவருக்கொருவர் தேவைகளைக் கேட்டு சகஜமான பாவத்துடன் நடந்து கொள்ள வேண்டும். இது அநேக சிரமங்களைக் குறைக்கும்.

நண்பர்களுக்கும், கல்யாணத்தன்று பெரிய 'பந்தா' வந்துவிடும். தங்களையே எல்லோரும் உபசரிக்க வேண்டும் என்று நினைப்பார்கள். இது பிழையான கருத்தென்று அவர்கள் உணரவேண்டும். தன் நண்பனின் - நண்பியின் - திருமணம் சிறப்பாக நடக்க இவர்கள் தான் இதை முன்னின்று நடத்தவேண்டும்.

ஒரு கல்யாணத்தில் பெண்வீட்டார் தன்னைச் சரியாக உபசரிக்கவில்லை என்று மாப்பிள்ளை வீட்டில் ஒருகுறை சொல்ல ஆரம்பித்தனர். அது கொஞ்சம் கொஞ்சமாய் பூதாகாரமாய் உருப்பெற்று கல்யாணமே நின்றுவிட்டது.

எனவே, உறவினர்களிடையேயும் ஓர் அன்பின் சமூகத்தை உருவாக்குவதற்கான முயற்சியே திருமணம். அன்றி நாம் உண்பதற்கும் குடிப்பதற்குமல்ல என்பதை உணர்ந்து நடந்தார்களானால் திருமணத்தில் குழப்பங்களே ஏற்பட வாய்ப்பில்லை.

இத்துடன், முடிக்கின்றேன் அடுத்த கடிதத்தில் சீதனம், அன்பளிப்பு பற்றி எழுதுகின்றேன். அதுவரை காத்திரு.-

உன்பிரியமான தோழி
சந்தியா.

## பெண்ணே உனக்காக!

பெண்ணே!
உனக்காக
இதோ... இதோ...
ஓர் எழுத்துப் பயணம்

உன் மனதில் உள்ளது
யாருக்கும்
தெரியாது!
ஆனால்------
நீ
என்னசெய்து
கொண்டிருக்கிறாய்
என்பதைக்
கூர்ந்து
பார்க்கின்றார்கள்....

பெண்ணே!
நீ உயிரைப் பிரசவிப்பதற்காய்
உன்னையே
வேதனைப்படுத்துகிறாய்...


ஆனால்---
நீ பிரசவிக்கும்
உயிர்கள்
உன்னை
வார்த்தைகளால்
பிளக்கின்றன.

பெண்ணே!
உன்னுடைய
முச்சக்கரற்று
முகாமிட்ட
இடமெல்லாம்
அன்பின் பூக்கள்
பூக்கின்றன!

ஆனால் –
உன்னையே
கசக்கி எறிகின்றார்கள்.

பெண்ணே!
உன் அன்பை
எல்லோரும்
உணரும்
காலம் வரும்
அன்றும் நீ
அன்பை மட்டுமே
காணிக்கையாக்குவாய்.

- தீபா -




## முயற்சியின் மறுபெயர்

"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு'' என்ற மூடர் தம் வாக்கைச் சவாலாக ஏற்று இன்று எத்தனையோ பெண்கள் விண்ணிலும் மண்ணிலும் கடலிலும் சாதனைபடைக்கும் வரலாற்றை நாம் பிரத்தியட்சமாகக் காண்கிறோம்.

அத்தகைய பெண்கள் வரிசையில் விண்ணில் விண்வெளி வீராங்கனையாகச் சாதனை படைத்து அதற்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா பற்றிய சில நினைவுக் குறிபபுக்கள் இங்கே.

இந்திய நாட்டின் முதலாவது விண்வெளி வீராங்கனை என்ற பெருமையைத் தனதாக்கிக் கொண்ட இவர், வட இந்தியாவின் ஹரியானா மாநிலத்தின் கார்னல் நகரில் பிறந்தார். அமெரிக்காவில் விண்வெளிப்பயணம் தொடர்பான பொறியியல் துறையில் மாஸ்டர் பட்டமும், டாக்டர் பட்டமும் பெற்றார்.

அதனைத் தொடர்ந்து அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான 'நாஸா' 1994 ஆம் ஆண்டில் ஒருவருட காலம் விண்வெளிப் பயிற்சியை வழங்குவதற்காக இவரைத் தெரிவு செயதது. இதன்மூலம் பயிற்சி பெற்ற கல்பனா, விண்வெளி வீராங்கனையாகப் பல சாதனைகள் புரிந்தார்.

இந்நிலையில், கடந்த 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி 'நாஸா'விலிருந்து விண்ணோக்கிச் செலுத்தப்பட்ட கொலம்பியா ஓடத்தில் பயணம் செய்த இவர், அந்த ஓடம் பூமிக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளை வானில் வெடிததுச் சிதறியதில் மரணத்தைத் தழுவிக் கொண்டார். இவ்விபத்தின்போது இவருடன் மேலும் அறுவர் உயிரிழந்தனர்.



தற்போது இவரின் ஞாபகார்த்தமாக அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் 74 ஆவது வீதிகு இவருடைய பெயர்சூட்டப்பட்டுளளது. இதனைவிட, நாஸா நிறுவனம்தான் புதிதாகத தயாரித்த 'எஸ்.ஜி.ஐ.ஆர்.ஆல்டிக்ஸ் 3000' என்ற சூப்பர் கம்பியூட்டருக்கு இவரது பெயரைச் சூட்டியுள்ளது.

இவ்வாறு பிறநாட்டுப் பெண்ணொருவரின் பெயர் உலக வல்லரசுக ளில் ஒன்றாகிய அமெரிக்காவின் வரலாற்றில் இடம் பெறுவது பெருமைக்குரிய விடயமாகும் இதற்குப் பின்னணியாக அமைநதது கல்பனாவின் முயற்சியே.

எனவே, ஒரு பெண் முயன்றால் முடியாதது என்று எதுவுமே இல்லை என்பது இப்போது புரிகிறதல்லவா?

-சாம்பவி

★ உலக விவகாரங்களில், முழுப்பங்கும் ஏற்றுப்பெண்கள் உழைக்காவிட்டால் உலகம் ஒருநாளும் அமைதியான நிலையை அடையமுடியாது.
★ ஆணைப் படைத்து வளர்ப்பவள் பெண். அவனை ஆட்கொண்டு வாழ்விப்பவளும் அவளே.

- பெர்னாட்ஷா -

# 28ஆவது ஒலிம்பிக் பெருவிழா...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரு போட்டியாளர்கள் இணைந்து ஒலிம்பிக் தீபத்தை ஏற்றும் நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டது.

ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்ட நூறாண்டு நிறைவு என்ற வகையில் 1996ஆம் ஆண்டு அமெரிக்காவில் இடம்பெற்ற 26ஆவது ஒலிம்பிக் போட்டிகள் வரலாற்றில் சிறப்புப்பெற்றன. 1896ஆம் ஆண்டிலேயே நவீன ஒலிம்பிக் போட்டிகளின் முதலாவது போட்டி உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 1948ஆம ஆண்டில் இங்கிலாந்தின் லண்டன் நகரில் இடம்பெற்ற 14ஆவது ஒலிம்பிக் போட்டிகளிலேயே முதன்முதலில் உத்தியோகபூர்வமாக எமது நாட்டு வீரர்கள் பங்குகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

1940 மற்றும் 1944 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்றிருக்க வேண்டிய 12ஆவது மற்றும் 13ஆவது ஒலிம்பிக் போட்டிகள் அக்காலகட்டத்தில் இரண்டாவது உலக மகாயுத்தம் இடம்பெற்றதன் காரணமாக இரத்துச் செய்யப்பட்டமையால் லண்டன் போட்டிகளை 12ஆவது ஒலிம்பிக் போட்டிகள் எனச் சில வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவதுமுண்டு. அதிலிருந்து 1976ஆம் ஆண்டில் கனடாவில் இடம்பெற்ற 19ஆவது ஒலிம்பிக் போட்டிகள் தவிர்ந்த சகல ஒலிம்பிக் போட்டிகளிலும் நம் நாட்டு வீரர்களும் பங்குகொண்டு வந்துள்ளனர்.

அந்தவகையில் இலங்கை கலந்து கொண்ட தனது முதலாவது ஒலிம்பிக் போட்டியிலேயே இலங்கை சார்பாகக் கலந்துகொண்ட டங்கன் வைற் என்ற விளையாட்டு வீரர் 400 மீற்றர் தடைதாண்டும் ஓட்டப்போட்டியில் வெள்ளிப்பதக்கத்தை வென்றெடுத்து இலங்கைக்குப் பெருமை தேடித் தந்தார்.

அன்று முதல் அரை நூற்றாண்டு காலம் வரை இலங்கை சார்பாகக் கலந்துகொண்ட எந்தவொரு வீரராலும் ஒலிம்பிக் போட்டிகளில் எந்தவொரு பதக்கத்தையும் வெல்லமுடியவில்லை. இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் 2000ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இடம்பெற்ற 27ஆவது ஒலிம்பிக் போட்டிகளில் மீண்டுமொரு தடவை இலங்கைக்குப் பெண்களுக்கான 200 மீற்றர் குறுந்தூர ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க வெண்கலப் பதக்கத்தை வென்றெடுத்ததன் மூலம் பெருமை தேடித்தந்தார்.

1996 மற்றும் 2000ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற இரு ஒலிம்பிக் போட்டிகளிலும் இலங்கை சார்பாக 15 வீரர்கள் கலந்துகொண்டனர். ஆனால, இன்று ஆரம்பமாகும் 28ஆவது ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை சார்பாக ஏழு பேர் கொண்ட அணியே பங்குபற்றுகிறது.

27ஆவது ஒலிம்பிக் போட்டிகளுக்குச் சென்ற இலங்கைக் குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்ற சுசந்திகாவுக்கு இம்முறையும் போட்டிகளுக்குச்செல்லும் குழுவுக்கு இரண்டாவது தடவையாகவும் தலைமை தாங்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

எவ்வளவு தான் நாகரிகம் அடைந்து விட்ட போதிலும், இன்று பல நாடுகளிலும் பல்வேறு மட்டங்களிலும் அரசியல் தலையீடுகள் உள்ளது போன்றே விளையாட்டுத்துறையிலும் பல தலையீடுகள் காணப்படுவதாக ஊடகத்துறை விமர்சகர்களால் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது. குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றில் விளையாட்டுத்துறையில் இத்தகைய அரசியல் தலையீடுகளால் தகுதியும் திறமையும் கொண்ட பலர் பின்தள்ளப்படவும், தகுதியில் குறைந்தோர் தமது அரசியல் செல்வாக்கின் மூலம் ஒலிம்பிக்கில் கலந்துகொள்ளும் அணியில் இடம் பிடித்துக்கொள்ளவும் சந்தர்ப்பம் வாய்க்கிறது. அந்த வகையில் போட்டியில் கலந்துகொள்ளும் வீரரொருவர் போட்டியில் தோல்வியுற நேர்ந்தாலும் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்வதற்குக் கிட்டும் சந்தர்ப்பத்தைத் தமக்குக் கிட்டிய பாக்கியமாகக் கருதுவதாகக கூறப்படுவதைக் கொண்டு ஒலிம்பிக் போட்டிகள் உலகத்தில் வாழும் பொதுமக்கள் குறிப்பாக விளையாட்டுத்துறை ஆர்வலர்கள் மத்தியில் எத்துணை உயர்ந்த மதிப்பைப் பெற்றுள்ளன என்பதை நாம் உணரமுடிகிறது.

இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளும் ஏழு இலங்கை வீர, வீராங்கனைகள அடங்கிய குழுவில் இடம்பெற்றுள்ள கொன்ரட் பிரான்சிஸ் என்ற வீரரும் மேனகா டி சில்வா என்ற வீராங்கனையும் நீச்சல் போட்டிகளில் பங்குகொள்ளவுள்ளனர். பெண்களுக்கான குறிபார்த்துச் சுடுதல் போட்டியில் மாலி விக்கிரமசிங்க என்ற வீராங்கனையும், பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் தமயந்தி தர்ஷா என்ற வீராங்கனையும், ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் ரோஹான் பிரதீப்குமார் என்ற வீரரும் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் அனுராத இந்திரஜித் கூரே என்ற வீரரும், உயரம் பாய்தல் போட்டியில் மஞ்சுளகுமார என்ற வீரரும் இலங்கையின் சார்பில் போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

இந்த 28ஆவது ஒலிம்பிக் போட்டிகளை நேரில் கண்டு களிப்பதற்காக உலகின் பல நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு ரசிகர்கள் எதென்ஸ் நகரில் பெருந்திரளாகக் கூடியிருப்பதாகத் தெரிவிக்கப்படும் அதே சமயம், உலகின் பல பாகங்களிலுமுள்ள சுமார் 400 கோடி மக்கள் தொலைக்காட்சி ஒளிபரப்புக்களூடாக இப்போட்டிகளைக் கண்டுகளிக்கவுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு உலகெங்கும் உள்ள 300 இற்கும் அதிகமான தொலைக்காட்சி அலைவரிசைகள் இன்று முதல் போட்டிகள் முடிவடையும் வரை இடைவிடாது இவ் ஒலிம்பிக் போட்டிகளை ஒளிபரப்பவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளை நேரில் கண்டுகளிப்பதற்காக - குறிப்பாக இலங்கை அணிசார்பாக இப்போட்டிகளில கலந்து கொள்ளும் வீரர்கள வெளிப்படுத்தும் திறமைகளைக் கண்டு களிப்பதற்காக - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராய்ச் [illegible] எதென்ஸ் நக[illegible]துக்கு செ[illegible]வுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க ஒலிம்பிக் போட்டிகளின் நிறைவு விழாவில் கலந்து கொள்ளத் தயாராகி வருவதாகத் தெரிய வந்துள்ளது.

இலங்கைப் பணத்தில் 11 ஆயிரம் ரூபா மதிப்புடைய 90 யூரோவுக்கு விற்பனையாகும் ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஓர் அனுமதிச் சீட்டினைக்கொள்வனவு செய்து, பிரயாணத்துக்கெனத் தனியாகப் பெருந்தொகைப் பணம் செலவிட்டு ஒலிம்பிக் போட்டிகளை நேரில் கண்டுகளிப்பதற்கான வாய்ப்பு சாதாரண பொதுமக்களுக்குக் கிட்டப்போவதில்லை. ஆயினும், தொழில்நுட்பத்துறை வளர்ச்சியின் பலனாக இன்று வீட்டிலிருந்தபடியே தொலைதூரத்துக்கப்பால் - கிரேகத்தின் எதென்ஸ் நகரத்தில இடம்பெறும ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்வுகளை உடனுக்குடன், நேரில் பார்ப்பது போன்ற மன உணர்வுடன் கண்டு மகிழக்கூடிய வாய்ப்பு எமக்குக் கிட்டியிருப்பது குறித்து நாம் திருப்தியடைவோம். ☆


## தேவை

பில் கிளார்க் ஒருவரும், தொலைத் தொடர்புச சேவைப்பகுதியில் வேலை செய்வதற்கு ஒருவரும் தேவை. (பெண்கள் மட்டும்) 15.08.2004 இற்கு முன்னர் நேரில் வரவும்.

**சன்லைற் றைக்கிளீனஸ்**
பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

(35165) (43-21-11)



## Computer Courses

Diploma in Computerized Accounting
Diploma in AUTOCAD
Diploma in Internet E-mail
Diploma in Microsoft office 2003
Diploma in Computer Hardware Engineering

புதிய பிரிவு
ஆரம்பம் 14-08-04

மேலதிக விவரங்களுக்கு:
43, Arasady Road,
Thaddatheru Junction, T.P: 021 2225170
Jaffna, Srilanka.

(சி-36566)(21-11-32)



உ

## வில்லூன்றி புனித தீர்த்தம் ஆடி அமாவாசைப் பெருவிழா

15-08-2004 ஞாயிற்றுக்கிழமை

* தீர்த்தோற்சவம்

காலை 6.45 மணி வசந்த மண்டபப் பூசை
காலை 8.00 மணி தீர்த்த வாரி
காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை தீர்த்தத் கட்டடத்தில் அனுக்கிரகம்.
காலை 10.00 மணி சுவாமி கோவிலுக்கு எழுந்தருளல்

* பிதிர்க்கடன்கள்

காலை 8.15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தர்ம பரிபாலனசபை, வில்லூன்றி தேவஸ்தானம்,
பரிபாலனசபை, வில்லூன்றி புனித தீர்த்தம்.

(35185)(42-21-11)


## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 - 06 - 1936



உதிர்வு 30 - 07 - 1989

திருமதி **பாக்கியமலர் மாசிலாமணி**

திதி:திரயோதசி .(13-08-2004)

தேவருலகில் வாழ்கின்ற ~ எங்கள்
தெய்வத்தின் திருநாளில்
பாமலர் தூவுகின்றோம் ~ நாளும்
பாக்கியமலர் காவுகின்றோம்
பேசிச்சிரித்த முகம் பார்த்து ~ தாய்மைப்
பொட்டகத்துள் தவழ்கின்றோம்
வீசிச்சிரிக்கும் பொன்காற்றில் ~ மாசில்
வீணையின் தவமாகின்றோம்
அம்மாவைப் பாடுவோம் ~ தினமும்
அம்மாவைப் பாடுவோம்
இம்மாநிலம் இருக்கும் வரையும்பெற்ற
எம் தாயை என்றும் வணங்குவோம்!

"மணிமலர் இல்லம்",
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

ஆண்டுகள் பல கழிந்தாலும் அன்பு மறவாத
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், உறவினர்கள்.

(35187)(42-19-12)


## பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியிற் கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன

☆ பணிநிலை: கணனித்தரவு பதியுநர்

☆ தகைமை:

01. எம்.எஸ்.ஓபீஸ் கற்கைநெறி முழுமை செய்திருத்தல் வேண்டும்.
02. க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருந்தல் வேண்டும்.

☆ சம்பள அளவுத்திட்டம்: 3300 - 4300 / 10 X 100 2000

தகுதியுடையவர்கள் 2004-08-20 ஆம் நாள் காலை 10.00 மணிக்கு நடுவப்பணியகம், ஆயப் பகுதி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் சான்றிதழ்களுடன் வருகைதரவும்.

1. தன்வரலாற்றுச் சான்றிதழ்
2. கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்
3. ஏனைய தகைமைகளையும் பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்.

**மனிதவள மேலாளர்,**
**ஆயப்பகுதி,**
**நிதித்துறை.**

(சி-36543) (21-11-24)


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## நெஞ்சை விட்டகலா 31ஆம் நாள் நினைவஞ்சலி

செல்வி
**செல்லத்துரை ஜெயரூபி**
**(பட்டு)**



வாழும் கனவோடு அவனியில் பிறந்தவளே
பாழும் நோயது உன்னுயிரை வாங்கியதோ
பூவோடும் பொட்டோடும் இப்பூவுலகில்
வாழ்வாய் என்றிருந்தோம் – ஆனால்
பட்டு நீயோ பாசத்தின் உறவுகளை
பாதியிலே தவிக்கவிட்டு பரலோகம்
சென்றனையோ
எம் உணர்வுகளில் உறைந்தவளே
எம் உயிர் இப்பூவுலகை விட்டு
நீங்கும்வரை
உன் நினைவுகள் என்றென்றும்
நிலைத்திருக்கும்.

அன்பின் வடிவில் 27-02-1979
துன்பத் துயரில் 14-07-2004

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆத்மா சாந்தியடை இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


நீர்வேலி வடக்கு,
பன்னாலை - நீர்வேலி.

மீண்டும் பூவுலகில் எம்மடியில்
பிறப்பாய் எனக் காத்திருக்கும்
**குடும்பத்தினர்**

(C-35175)(21-11)

# தெய்வீகப் பிரவாகம் பரப்பிய தென்மராட்சி ஆடிவேல் பவனி

தெய்வீகப் பொலிவுபெற்ற தென்மராட்சியில் அருளொளி தெய்வீகம் பரப்பும் திருப்பதியாக விளங்குவது டச்சு வீதியிலுள்ள ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலயம் ஆகும். தன்னை நாடி வருபவர்களுக்கு வாரி வழங்கும் தெய்வம்தான் அந்த சூர்வடிவேலன்.



புரவி நடனம்

சாவகச்சேரி நகரில் உள்ள பொதுமக்கள் உட்படச் சாவகச்சேரி நகர வர்த்தகர்கள் எல்லோரும் சூர்வடிவேலோனைக் கைகூப்பித் தொழுது நற்பேறு பெற்றிடுவர்.

இந்த ஆலயப் பெருவிழா கதிர்காமக் கந்தனின் ஆலய உற்சவத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து தினங்கள் கோலாகலமாக நடைபெறுவது வழக்கம். இந்நாள்களில் சாவகச்சேரி விழாக்கோலம் பூண்டு அழகுபடுத்தப்பட்டிருக்கும். இந்த ஆலயத்தின் நாளாந்தப் பூசை வழிபாடுகள் ஒழுங்குமுறைப்படி ஆலய குரு சிவஸ்ரீ கிருஸ்ணமூர்த்திக் குருக்கள் தலைமையில் நடைபெற்று வருவது வழமை.

கடந்த காலங்களில் மிகச் சிறப்பாக இந்த உற்சவம் இடம்பெற்றுவந்தது. எனினும், 2002ஆம் ஆண்டு இடம்பெயர்வு காரணமாகச் சுமார் 3 ஆண்டுகள் வழமையான வழிபாடுகள் இல்லாது இந்த ஆலயம் இருந்து வந்தது. மீண்டும் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியதையடுத்து வழமைபோல பூசை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த வருடமும் இந்த ஆலய உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஆலயத் தீர்த்த உற்சவத்திற்கு முதல்நாள் பழநி ஆண்டவர் முத்துச் சப்பரத்தில் ஆரோகணித்து வேல் விழாவுக்கு ஊர்வலமாகப் புறப்பட்ட காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

தமிழ் மக்களுடைய பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வு அம்சங்களுடன் சுவாமி வீதி வலம் வந்தமை சிறப்பாக அமைந்தது. அந்தக் குன்று தோறாடிடும் முருகன் சந்நிதி

**தொகுப்பு:**
**சாவகச்சேரிச் செய்தியாளர்**


வேலன் சூரிய வேல்வடிவினனாக நகரில் காட்சி கொடுத்தான்.

அந்த ஆடிவேல் விழா நிகழ்வில் காவடி ஆட்டம் தவில், நாதஸ்வர கலைஞர்கள் சகிதம் முன்னே செல்லத் தொடர்ச்சியாகச் சிலம்படி நிகழ்வுடன் இளைஞர்கள், சிறுவர்கள் பின் தொடரப் புரவி நடனம் இடம்பெற்றது.

வீதிகள் தோறும் பொதுமக்கள், வர்த்தகர்கள் பூரண கும்பம் வைத்து முருகப்பெருமானை வரவேற்றனர். வேல்விழாவையொட்டி

**ஞானக்கதிர்**

நகர் விழாக்கோலம் பூண்டிருந்தது. ஆங்காங்கே குளிர்பானங்கள், தண்ணீர்ப்பந்தல்கள் உட்பட நிவேதியப் பொருள்கள் வழங்கப்பட்டன.




முத்துச் சப்பரத்தில் பழநிவேலன் பவனி

வேல் விழாவில் உடுக்கை சல்லாரியுடன் பழநி முருகன் புகழ்பாடும் கூட்டு வழிபாட்டுப் பிரார்த்தனையாளர்களின் தோத்திரப் பாடல்களும் ஓங்கி ஒலித்து விழாவைச் சிறப்பித்தன.

வேல்விழாப் பவனி சாவகச்சேரி செருககல் பிள்ளையார் கோவிலை அடைந்து அங்கு விசேட பூசைகள் இடம்பெற்றதையடுத்து ஆலயத்தைச் சென்றடைந்தது.

மேற்படி வேல்விழாப் பவனி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. அன்றைய தினம் ஆலயச் சூழல் உட்பட சாவகச்சேரி நகரத்தில் தெய்வீகப்பிரவாகத்தைக் காண முடிந்தது. ✻





**அகில இலங்கைத் திருமுறை மன்றம் கடந்த 31ஆம் திகதி யாழ்ப்பாணம் சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தில் நடத்திய திருமுறைப் பெருவிழாவில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் நடைபெறுவதையும் -**

**'அகத்தியர் தேவாரத்திரட்டு' என்னும் நூலினை சிவநெறிப் புரவலர் கு. கங்கைவேணியன் வெளியிட்டுவைக்க, புளியங்கூடல் செருத்தனைப்பதி ஸ்ரீ மகாமாரியம்பாள் ஆலய அறங்காவலர் து.சிவஞானசெல்வம் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.**

(எ)

## உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மேலும் சில

யாழ்ப்பாணம்,ஓக.13

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மேலும் சில பாடசாலைகள் பெற்ற முன்னணிப் பெறுபேறுகள் அதிபர்கள் மூலம் கிடைக்கப் பெற்றுள்ளன. அவை வருமாறு:-

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி -**

☆வர்த்தகம்: 2ஏ சி - இ.ஜெனாத்தன், ஏ 2பி, பா.கார்த்திகா, ஏ பி சி - தேவராசா சுதர்சினி.

☆ கலை: 2ஏ சி - சு.சுமன், ஏ பி சி - ஜெ.ஜெயகிருஷ்ணன், அ.அரவிந்தன், ஏ 2பி - மு.கார்த்திகா.

☆ கணிதம்: பி 2சி - வே.திருலெளகீகன்.

**பண்ணாகம் மெய்கண்டான் ம.வி. -**

2 பி எஸ் - செ.விஜயசங்கர், பி 2சி - க.மோகனா.

**கைதடி முத்துக்குமாரசாமி ம.வி. -**

ஏ பி எஸ் - நால்வர், ஏ 2சி - ஒருவர், ஏ சி எஸ் - ஒருவர், 2பி எஸ் - மூவர், பி சி எஸ் - ஒருவர். (10-28)

## செயலமர்வு

சமூக நல அமைச்சினால் நடத்தப்படும் செயலமர்வு எதிர்வரும் 14, 15, 16ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ)

## நலன்புரி நிலையங்களின் சமாசப்பணிமனை திறப்பு

ஏழாலை,ஓக.13

யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத்தின் தலைமைப் பணிமனை கடந்த திங்கட்கிழமை சுன்னாகத்தில் திறந்துவைக்கப்பட்டது.

நலன்புரி நிலையங்களின் சமாசத் தலைவர் எஸ்.கணேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலி. தெற்கு, வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றிய உறுப்பினர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

(ஒ-45)

## நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் சிலை கோலாகலமாகத் திறப்பு

வலி.தெற்கு,ஓக.13

தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவருடைய உருவச் சிலை நேற்றுமுன்தினம் காலை நவாலி மகாவித்தியாலய வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

நவாலி மகாவித்தியாலய அதிபர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் சோமசுந்தரப் புலவரின் சிலையைத் திரைநீக்கம் செய்து திறந்துவைத்தார்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், யாழ்ப்பாண மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஓய்வுபெற்ற அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ், சிலையை வடித்த பழைய மாணவரான தில்லைநாதன் சந்திரகுமார் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வியாளர்கள், பொதுமக்கள் பலரும் திறப்பு விழாவில் கலந்துகொண்டனர்.

திறப்பு விழாவைத் தொடர்ந்து வித்தியாலய மண்டபத்தில் அதிபர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் தலைமையில் சேமசுந்தரப்புலவர் பற்றிய சிறப்புரைகள் நடைபெற்றன.

நவாலி சோமசுந்தரப் புலவரின் சிலைக்குப் பெறுமதியான அழகிய கட்டடம் ஒன்றைத் தனது சேவைக் காலத்தில் கட்டித்தருவதாக வலிகாமம் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தமது ஆசியுரையின்போது குறிப்பிட்டார்.

கவிஞர் சோ.பத்மநாதன், கலாநிதி அ.சண்முகதாஸ், கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன் ஆகியோர் புலவரின் சிறப்புகள் பற்றி உரையாற்றினர்.

சோமசுந்தரப் புலவரின் சிலையை உருவமைத்த தி.சந்திரகுமார் இவ்விழாவில் மாலை அணிந்து பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார் "சிற்பக்கலைமாணி" என்ற சிறப்பு விருது பாடசாலை சமூகத்தின் சார்பாகப் பேராசிரியர் அ.சண்முகதாஸினால் அவருக்கு வழங்கப்பட்டது.

சோமசுந்தரப்புலவர் பற்றிய மாணவர் உரைகள், கவிதைகள், இசையும் கவிதையும், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

(ஐ-152-100)

## வலி. மேற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக.13

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார எழுச்சி நிகழ்வின் ஓர் அங்கமாக அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடனும, கல்விச் சமூகத்துடனும் பிரதேச சபையின் செயற்பாடுகளுக்கான தொடர்பிணைப்பை ஏற்படுத்தும் வகையில் 08.08.2004 சனிக்கிழமை கண்காட்சி நடத்தப்பட்டது.

இக்கண்காட்சியில் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், உத்தியோகத்தர், ஊழியர்களால் சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சியும், சங்கானை மக்கள் வங்கி, சங்கானைப் பிரதேச செலயக சமுர்த்தி வங்கிப் பிரிவினரால் வங்கி நடைமுறைகளை வெளிப்படுத்தும் வகையிலான கண்காட்சியும், விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களால் தகவல் தொழில்நுட்ப விழிப்புணர்வுக் கண்காட்சியும் விஞ்ஞான பிரிவு மாணவர்களால் டெங்கு, சூழல் மாசடைதல் விழிப்புணர்வுக் கண்காட்சியும் நடத்தப்பட்டன. அத்துடன், சங்கானைக் கோட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் முன்பள்ளிப் பாடசாலைகளின் முன்பள்ளிக் கல்விக் கண்காட்சியும் நடத்தப்பட்டுப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ)

## சனசமூக நிலையத்துக்கு போரூட் உதவி

ஊர்காவற்றுறை,ஓக.13

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நிதியுதவியுடன் போரூட் நிறுவனத்தால் ஊர்காவற்றுறை அண்ணா முன்னேற்ற விளையாட்டுக்கழகத்திற்கு எண்பதாயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள், தளபாடங்கள், இசைக்கருவிகள் ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

இசைக்கருவிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் ஒரு தொகையைப் பயன்படுத் 15 பேர் தெரிவுசெய்யப்பட்டு யாழ். திருமறைக் கலாமன்றத்தில் பயில ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மேற்படி விளையாட்டுக்கழகத்தின் உப தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஒ-16)

## விதவைகள் ஓய்வூதிய நிலுவைகள் வருட இறுதியில் வழங்கப்படும்

தென்மராட்சி,ஓக.13

தென்மராட்சிப் பிரதேசத்தில் விதவைகள் ஓய்வூதியம் பெறுவோருக்கான அதிகரித்த ஓய்வூதியத்தை இவ்வருட இறுதியில் நிலுவையுடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அதிபர்கள், ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய குடிசார் ஓய்வூதியர்களுக்கு ஓகஸ்ட் மாத ஓய்வூதியம் அதிகரித்த ஓய்வூதிய நிலுவையுடன் வழங்கப்பட்டுள்ளது.

1996 இற்கு முன்னர் ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் விபரங்கள் கோரப்பட்டு மீளாய்வுசெய்யப்பட்ட ஓய்வூதியம் தற்போது வழங்கப்பட்டு வருவதால் செப்ரெம்பர் மாத ஓய்வூதியத்துடன் அதிகரித்த ஓய்வூதியம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள மவுக்கினி சோக்கேஸ் மூன்றும், முதிரை சோக்கேஸ் ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனிஸ் ரெக்ஸ், நவாலி வீதி, மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை. (34899)

5ஸ்ரீ26745 இலக்கமுடைய **Morris oxford** கார் நல்ல நிலையிலுள்ளது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.குணபாலன் (பவா) பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.(35202)

இரு மீன் தொட்டிகள் ஒன்று பெரிய நீள் சதுரம் மற்றையது பெரிய அறுகோணம், வளர்ப்பு கலர் மீன்களுடன் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச.சிவரூபன், இலங்கை வங்கி ஒழுங்கை, சுன்னாகம்.(35164)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி வீதி தபாற்பெட்டி சந்திக்கும் திருநெல்வேலி சந்திக்குமிடையில் 92ஆம் இலக்கத்தில் உட்புறம் (1பரப்பு 7.65 குளி) நாற்புற மதில், கிணற்றுடன் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்புகளுக்கு: திருமதி பொ.கயிலாசநாதன், 61, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி.(35192)

## தவறிவிட்டது

86/2, வளாக வீதி, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த மா.பாலசுந்தரம் என்பவரது தே.அ.அ (450560308V), வீசேட அ.அ, சாரதி அனுமதிப் பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் 09-08-2004 அன்று திருநெல்வேலிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும் T.P. 021-2225366.(35203)

## தேவை

வீட்டில் தங்கியிருந்து உதவி புரிவதற்கும் வீட்டைப் பராமரிப்பதற்கும் பணிப்பெண் தேவை. தொடர்பு: கிறிஸ்ரி இராசநாயகம், 12/3, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (35167)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கெளரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973இல் பிறந்த, கார்த்திகை 2ஆம் பாதம், 2இல் செவ்வாய், கிரகபாவம் 21¼ உடைய **B.Sc. Computer** கற்று லண்டனில் பணிபுரியும் மணமகனுக்கு சிவந்த, அழகான, நற்பண்புள்ள, மணமகள் தேவை. ஜாதகம், குடும்ப விவரத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல.2344 மே/பா உதயன்.(35196)

## கோழிக்குஞ்சு விநியோகம்

அதிவிசேட **Prima Broiler** குஞ்சுகளும் (மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு 36/=) சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும 19-08-2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ் ஆனைக்கோட்டை சந்தி T.P. 2867, 077 6090926, P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, தாரகை, முதலாம் கட்டை பருத்தித்துறை, ஸ்ரீராம் பருத்தித்துறை பஸ்நிலையம் முன், றஞ்சீத் 517, ஸ்ரான்லி றோட், யாழ். (35150)

## மீட்டல் வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஓக.13

பலாலி ஆசிரிய கலாசாலையின் 2 ஆம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டையை எதிர்வரும் 16ஆம் திகதி அலுவலகத்தில் பெற்றுக கொள்ளலாம் எனவும், அன்று தொடக்கம் எதிர்வரும் 19ஆம் திகதி வரை 4 தினங்களுக்கு மேற்படி பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் நடைபெறவுள்ளன எனவும் இதில் அனைத்து மாணவர்களையும் பங்குபற்றிப் பயனடையுமாறும் கலாசாலை அதிபர் கு.சதாசிவமூர்த்தி தெரிவித்துள்ளார். (10-201)

## எழுச்சிப்பேரவை புனரமைப்பு

சாவகச்சேரி கல்வயல் கிராம சேவையாளர் பிரிவில் தேசிய எழுச்சிப் பேரவை புனரமைப்பும், கிராமத்தரிசிப்பும் கடந்த ஞாயிறுக்கிழமை கல்வயல ஆலடிப் பிள்ளையார் ஆலய முன்றிலில் இடம்பெற்றன.

தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.சந்திரசேகர தலைமையில் இடம்பெற்றன இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக -யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.சிறீநாத் ஆகியோர் உரைகளை நிகழ்த்தினர்.

இப்பகுதி 6பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு கருத்தூட்டலும், சமூக அபிவிருத்தி தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இப்பகுதியில் சுமார் 200இற்கும மேற்பட்டவர்கள் அங்கத்தவர்களாக இணைந்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-31)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



உடுவில், கற்பொக்கணை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகக் கிரியைகளைச் சிறப்புற நடத்திமுடித்தமையைப் பாராட்டி கும்பாபிஷேகப் பிரதம ந[illegible]டுவில் மீனா[illegible]சி சுந்தரே[illegible] தேவஸ்தான பிரதம குருவுமான **பிரம்மஸ்ரீ சி.முத்துச்சாமிக் குருக்களுக்கு** விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினர் "வேதசிவாகம கிரியாபானு" என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளனர். "வேதசிவாகம கிரியாபானு" **பிரம்மஸ்ரீ சி.முத்துச்சாமிக் குருக்கள்** அவர்களின் சிவாச்சாரியபணி மென்மேலும் சிறக்கவும் நீண்டகாலம் நீடிக்கவும் எல்லாம்வல்ல கற்பொக்கணை ஸ்ரீ வீரகத்தி விநாயகரைப் பிரார்த்திக்கிறோம்.

தர்மகர்த்தா சபை.
கற்போக்கணை. ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம். உடுவில்.
(35197) (24-11-21)

# VACANCY
## Post of Interpreter/Driver

The Applicant should have the following Qualifications:
- An Excellent command in English and Tamil
- Healthy
- Must have a drivers license
- Must be prepared to work unsupervised
- Previous experience required preferably with international NGO

The Selected person should be prepared to visit Mine fields, to carry on interpretation work on full time basis
*Salary Negotiable.*
Please send your bio data with contact Telephone Numbers with in seven days

To **The Operations Manager**
**THE HALO TRUST**
*655, Navalar Road, Nallur, Jaffna.*
(35188) (21-11)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கருணானந்தர் சுப்பிரமணியம்**
(மண்டைதீவு)

அன்னாரின் வீட்டுக்கிருந்தியம் இன்று (13.08.2004) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

101, பத்திரகாளி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (35205)(40-21-11)

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.




கல்வயல். சாவகச்சேரியைச் சேர்ந்தவர்களும் தற்போது கனடாவில் வசிப்பவர்களுமாகிய
**நந்தன் - நிகிலா** தம்பதிகளின்
செல்வப் புதல்வி **அனித்தா**

தனது ஏழாவது பிறந்தநாளை இன்று (13.08.2004) வெள்ளிக்கிழமை தம்பி ஆகாஷ் உடன் கல்வயலில் உள்ள அப்பம்மா இல்லத்தில் வெகுகுதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

அனித்தாவை அப்பா, அம்மா, அக்கா, அபிநயா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி மற்றும் உற்றார்,. உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டுகாலம் எல்லா வளங்களும் பெற்று பேரின்பப் பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

ஐயனார் வீதி, கல்வயல்,
சாவக்ச்சேரி.
(35193) (24)
தகவல்: மாமா.

# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.1984 இற்கு முன்பு அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை

## பகிரங்க ஏலவிற்பனை

### செய்யப்படும்

| | கிளை | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 01 | காங்கேசன்துறை | 14-08-2004<br>15-08-2004 | யாழ்.<br>ஸ்ரான்லி வீதிக்கிளை |
| 02 | பளை | 21-08-2004<br>22-08-2004 | யாழ்.<br>ஸ்ரான்லி<br>வீதிக்கிளை |
| 03 | ஊர்காவற்றுறை | 11-09-2004<br>12-09-2004<br>13-09-2004<br>14-09-2004 | யாழ்.<br>ஸ்ரான்லி<br>வீதிக்கிளை |

அறிவித்தலின்றித் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது

எமது காங்கேசன்துறைக் கிளையின் மல்லாகம் நீடித்த கருமபீடத்தில் அடகுசேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அப்பிரதேச மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பிரதேச முகாமையாளர்,
யாழ்ப்பாணம்.
(சி-36587)(34-21-11)

## பெங்களூரிலுள்ள பல்கலைக்கழகத்தில் படியுங்கள்

# பிருந்தாவன் கல்லூரி

(முன்னர் தேசிய முதற்றரக் கல்லூரி)
(அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது)
2nd Cross Bhoopasandra RMV Extm 2nd Stage Bangalore 94 India
E-Mail intel@brindavan College.Com, WWW brindavan College. Com,
Tel. 018023414557, 23417833. Fax: 23615621, 23417832.

கருத்தரங்கும் உடன் அனுமதியும்
**ஓகஸ்ட் 15 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு - கொழும்பு ஹில்ரனில்**
(அதிபர்/நிர்வாக அறங்காவலர்)
இந்த வருடமே சேர்ந்து ஒரு வருடத்தை மீதப்படுத்துங்கள்.


- B.Sc.நுண்ணுயிரியல்
- உயிர் தொழில்நுட்பவியல்
- மரபணுவியல்
- கணனி விஞ்ஞானம்
- B.C.A.
- B.COM.
- B.B.M.
- M.Sc. உயிர் தொழில்நுட்பவியல்
- நுண் உயிரியல்
- மரபணுவியல்
- M.C.A.
- M.B.A.

ஓகஸ்ட் 12ஆம், 13ஆம் திகதிகளில் மாலை 6.30 மணிக்கு தொலைக்காட்சி 'அலைவரிசை ஐ' நிகழ்ச்சியில் காணலாம்.

**Company Secretarial Services (Pvt)Ltd**
#285C,1/1, Stanley Tilakaratne MWJubilee Post Nugegoda
Tel. 011 - 2854438/0777-387273
E-Mail yapadd @ Sol.lk. (C/36588)(42-11-21)

Further details.
Mr.Gunawardana 011-2811524
Mr.Gunasekara 038 - 2232657
038 - 2234154.

# ஈராக்கிலிருந்து படைகளை விலக்கும் திட்டத்தை நிராகரித்தார் ஜோர்ஜ் புஷ்!



பென்சகோலா,ஓக.13

ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகளை விலக்கிக் கொள்ளும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரியின் திட்டத்தை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நிராகரித்துள்ளார்.

புளொரிடா மாநிலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட புஷ் அதுபற்றிக் கூறியதாவது:-

ஈராக் போருக்கு ஆதரவாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஹெரி வாக்களித்தார். பின்னர் தன்னைப் போருக்கு எதிரான வேட்பாளராக அறிவித்துக்கொண்டார்.

ஈராக் போர் குறித்த நிலைப்பாட்டை ஜோன் ஹெரி அடிக்கடி மாற்றிக் கொள்கிறார்.

அதிபர் தேர்தலுக்கு இன்னும் 84 நாள்கள் இருக்கின்றன. தனது நிலைப்பாட்டை ஹெரி மீண்டும் மாற்றிக்கொள்ளப் போதிய கால அவகாசம் இருக்கிறது. ஈராக்கில் அமெரிக்கப் படைகள் தங்கள் பணியை முடிக்காமல் திரும்புவதை நாங்கள் விரும்பவில்லை. அரசியல் இப்பிரச்சினையை முடிவு செய்யக்கூடாது - என்றார்.

இதேவேளை -

2002ஆம் ஆண்டு ஒக்ரோபரில் ஈராக் போருக்கு ஆதரவாகக் வாக்களித்தார். ஆனால், தனக்குக் கிடைத்த ஆதரவை புஷ் தவறாகப் பயன்படுத்திக்கொண்டார்.

போதிய கூட்டணி ஆதரவு, போரை முடிவுக்குக் கொண்டுவரும் திட்டம் ஆகியவை இல்லாமல் புஷ் போரில் குதித்தார் என்று ஜோன் ஹெரி கூறியுள்ளார். (8)

## சீக்கியர் மீது தாக்குதல்; 5 அமெரிக்கர்கள் கைது!

நியூயோர்க்,ஓக.13

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வசிப்பவர் ரஜிந்தர்சிங் கல்சா என்ற சீக்கியர். இவர் தன் உறவினர் ஒருவருடன் ரிச்மண்ட் ஹில் பகுதியில் வீதியில் நடந்துசென்றபோது அங்கிருந்த அமெரிக்கர்கள், கல்சாவை வம்புக்கு இழுத்தனர். அவரது தலைப்பாகையைக் கழற்றும்படி கூறினர். அதற்கு அவர் மறுத்ததும் அவரைத் தாக்கினர். இதைப் பார்த்த அவரது உறவினர் தப்பி ஓடிவிட்டார். இதில் காயம் அடைந்த கல்சா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 5 அமெரிக்கர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் 5 பேரும் குற்றவாளிகள் என்பது நிரூபணமாகி உள்ளதாகத் தீர்ப்பில் கூறினார். தண்டனை என்ன என்பது பற்றி பின்னர் கூறப்படும் என்றும் நீதிபதி தீர்ப்பில் கூறியுள்ளார். (10)

# மரண தண்டனைச் சட்டங்களை தளர்த்துமாறு சீனாவிடம் கோரிக்கை

பீஜிங்,ஓக.13


மரணதண்டனைக்கான சட்டங்களை சீனா தளர்த்தவேண்டுமெனச் சீன சட்டவல்லுநர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இது தொடர்பாகச் சீன சட்டவல்லுநர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொலைக் குற்றங்கள் அல்லாத சாதாரண குற்றங்களுக்காகவும் சீனாவில் மரணதண்டனைகள் விதிக்கப்படுகின்றன. வருடாந்தம் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் பேர் கொல்லப்படுகின்றனர்.

கடத்தல்கள், போலிநோட்டு அச்சிடுதல், நிதிமோசடி, புராதன கல்லறைகளிலுள்ள பெறுமதியான பொருள்களைத் திருடுதல், விபச்சாரத்துக்கு வழிசமைத்தல் ஆகியவற்றிற்காகவும் சீனாவில் மரணதண்டனைகள் விதிக்கப்படுகின்றன. இவை தொடர்பாக இப்போது 68 புகார்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தற்போதைய மரணதண்டனை விதிப்புக்கான சட்ட விதிகள் இப்புகார்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கும் வழிசமைக்காத குற்றங்களுக்கும் மரண தண்டனைகள் விதிக்கப்படுகின்றன. நாம் இதை ஏற்கவில்லை. இதற்கான விதிகளைப் படிப்படியாக இல்லாதொழிப்பதற்காக நாம் பரிசீலனை செய்யவேண்டும்.

உலக நாடுகளில் வருடாந்தம் விதிக்கப்படும் மரண தண்டனைகளின் எண்ணிக்கைகளைவிடச் சீனாவில் விதிக்கப்படும் மரண தண்டனைகளின் தொகை அதிகமாகும். எனவே, மரண தண்டனை விதிப்புக்கான சட்டவிதிகளைச் சீனா தளர்த்த வேண்டும் - என்றுள்ளது. (8)



பிரேஸில் நாட்டில் நிட்டிரோய் பகுதியில் திமிங்கிலம் ஒன்று கடந்த மூன்று நாள்களுக்குமுன் கரை ஒதுங்கியது. இதை உயிரோடு மீண்டும் கடலில் விட கடல் ஆராய்ச்சியாளர்கள் முயன்றனர். பல்வேறு சாதனங்களைக் கொண்டு 58 மணிநேரம் போராடிக் கடலுக்குள் திமிங்கிலத்தைக் கொண்டுசெல்ல முயன்றனர். ஆனால், கடைசியில் இந்தத் திமிங்கிலம் நேற்று முன்தினம் உயிரைவிட்டுவிட்டது. அவர்கள் திமிங்கிலத்தைக் கடலில் விட முயற்சிப்பதைப் படத்தில் காணலாம்.

# நஜாப் நகரில் இருந்து வெளியேற கூட்டுப்படைகளுக்கு உத்தரவு

டுபாய்,ஓக.13

ஷியா பிரிவினரின் புனித நகரான நஜாப்பிலிருந்து வெளியேறுமாறு அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகளுக்கு ஈராக்கிய இடைக்கால அரசின் துணை ஜனாதிபதி இப்ராஹிம் ஜபாரி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஒருவார காலமாக அங்கு ஷியா தீவிரவாதிகளுக்கும் அமெரிக்கக் கூட்டுப் படைகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் சண்டையை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டே அவர் இவ்வுத்தரவை அல்-ஜசீரா தொலைக்காட்சி மூலமாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை விடுத்தார்.

நஜாப்பிலிருந்து கூட்டுப் படைகளை வெளியேறுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன். ஈராக்கிய படைகள் மட்டும் அங்கு இருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நஜாப் அனைத்து முஸ்லிம்களுக்கும் உரிய புனித நகராகும். அங்கு நிகழும் வன்முறைகளை ஈராக்கியப் படைகளால் முறியடிக்க முடியும். அதனால் அந்நகரை நிர்வகிக்கவும் இயலும். அல்-சத்தாரும் அவரது விசுவாசிகளும் மனம் மாறித் திரும்புவதற்கு இடைக்கால ஈராக்கிய அரசு அரசியல் கதவைத் திறந்துவைத்திருக்கும். அவர் அரச விரோத நடவடிக்கைகளையும் சண்டையையும் கைவிட்டுத் திரும்பவேண்டும் என்றும் அவர் உரையில் அறிவித்தார்.

நஜாப்பில் தொடர்ந்து அல்சத்தாருக்கு ஆதரவான தீவிரவாதிகளில் 360 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என அமெரிக்கப்படைகள் குறிப்பிட்டுள்ளன. எனினும், இறந்தவர்களின் எண்ணிக்கை குறைவானது எனச் சத்தாரின் பேச்சாளர்கள் தெரிவித்துள்ளார்கள். (8)

# ஆள்கடத்தலை நிறுத்தாவிட்டால் பொருளாதாரத்தடை விதிக்கப்படும்

## பங்களாதேஷிற்கு அமெரிக்கா எச்சரிக்கை

பங்களாதேஷில் இருந்து பிற நாடுகளுக்குக் குழந்தைகளையும், பெண்களையும் கடத்துவது அதிகரித்துள்ளது. இதைத் தடுத்து நிறுத்தாவிட்டால் அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. பங்களாதேஷிலிருந்தும் அதன் வழியாகவும் ஆண்டுதோறும் 10 ஆயிரம் முதல் 20ஆயிரம் பெண்களும், குழந்தைகளும் கடத்தப்படுகிறார்கள். அவர்கள் இந்தியா, பாகிஸ்தான், பஹ்ரைன், குவைத், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளுக்குக் கடத்தப்படுகின்றனர். இது தொடர்பாக அமெரிக்க துணைச் செய்தித் தொடர்பாளர் ஆடம் எரேம் கூறியதாவது:-

பங்களாதேஷில் இருந்து ஆள்களைக் கடத்துவதைக் கட்டுப்படுத்த அந்நாட்டு அரசு கடும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இல்லையென்றால், அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படலாம். ஆள்கடத்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது குறித்து அந்த அரசிடம் விவாதம் செய்துவருகிறோம். இப்பிரச்சினை குறித்து 2004 இல் அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் ஆள்கடத்தலைக் கட்டுப்படுத்தப் பரிந்துரைகளும் தரப்பட்டுள்ளன.

# கசிப்புக் கடத்தியோர் கைது!

கொழும்புத்துறை,ஓக.13

கொழும்புத்துறைப் பகுதியில் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களை வாகனமொன்றில் கடத்தி வந்தவர்களைப் பொலீஸார் கடந்த சனிக்கிழமை மடக்கிப் பிடித்தனர்.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டுவரும வாகனங்களைப் பிடிப்பதற்காக இப்பகுதியில் பொலீஸார் இரவு வேளைகளில் சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இந்நிலையில், கடந்த சனிக்கிழமை அதிகாலை வீதியால் வந்த 'லாண்ட் மாஸ்ரர்' ஒன்றை மறித்துப் பொலீஸார் சோதனையிட்டனர். அதில் கசிப்பு பரல்களும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தபடும் உபகரணங்கள் என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டன. இதையடுத்து அதில் வந்தவர்களைப் பொலீஸார் கைதுசெய்தனர்.

மக்கள் குடியிராத வீடுகளில் வைத்துச் சட்டவிரோதமாகக் கசிப்பை உற்பத்தி செய்து கடத்தி வருவோரே இவ்வாறு பிடிக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. (ஒ-30)

# ஆள்களில்லாத வீட்டில் பட்டப்பகலில் திருட்டு!

யாழ்ப்பாணம்,ஓக.13

ஆள்களில்லாத வேளையில் வீடுபுகுந்த திருடர் அங்கிருந்த இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர். இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை பகல் நாயன்மார்கட்டு அம்பாள் வீதியில் உள்ள இ.இராசரத்தினம் என்பவரது வீட்டில் இடம்பெற்றது. வீட்டார் அனைவரும் வெளியே சென்றிருந்த சமயமே இச்சம்பவம் இடம்பெற்றது.

இதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி பேச்சியம்மன் ஆலய மூலஸ்தான விக்கிரகத்தில் இருந்த அங்கி, தகடு மற்றும் சிறிய விக்கிரகக்கற்கள் என்பன களவாடப்பட்டதாக யாழ. பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-6)

## பெண்களுக்கான தொழில் பயிற்சி

பெண்களுக்கான வீட்டுத் தளபாடம் திருத்தும் பயிற்சிநெறி ஒன்று யாழ். மாவட்ட தொழில் துறைத் திணைக்களத்தினால் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் பங்குபற்ற விரும்பும் பெண்கள் தமது பெயர் விவரங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் யாழ். செயலகத்தில் இயங்கும் மாவட்டத் தொழில்துறைத் திணைக்களத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு மாவட்ட அலுவலர் கேட்டுள்ளார். (ஒ-5)

## சூரியகலச் சக்தி முறை நெடுந்தீவில் அறிமுகம்

கிராமியப் பொருளாதார அபிவிருத்திக்கான மீளப்பெறக்கூடிய சக்தித் திட்டத்தின்கீழ் நெடுந்தீவுப் பிரதேசத்தில் 'செல்கோ' நிறுவனம் சூரியகலச் சக்தி (சோளர்) முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

கிளிநொச்சிப் பிரதேச பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் மூலம் இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்கீழ் முதல் கட்டமாக 15 வீடுகளுக்கு சூரியகலச் சக்தி (சோளர்) பொருத்தப்பட்டுள்ளது. இன்னும் அதிகளவு பயனாளர்கள் இதனைப் பெற்றுக்கொள்ளக் காத்துள்ளனர் என்பதால் இது மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது எனச் சம்பந்தப்பட்டோர் தெரிவித்துள்ளனர். (ஒ-112)

# தீவகக் கிராமங்களுக்கு மின் வழங்க பிரதேசசபை நிதி ஒதுக்கியது

தீவகத்திலுள்ள புளியங்கூடல், ஏழுவில் ஆகிய கிராமங்களுக்கு மின் விநியோக வேலைகளுக்கென ஊர்காவற்றுறைப் பிரதேசசபையினால் இலங்கை மின்சாரசபைக்குப் பத்து லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடையில் இருந்து கிராமிய மின் வழங்கல் திட்டத்தின் கீழ் இந்தப் பத்து லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேசசபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் தெரிவித்தார்.

தீவகத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக இக்கிராமங்களில் ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த மின்சார இணைப்புக்கள் முற்றாகச் சீர்குலைந்துள்ளன. இதனால், இப்பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து எட்டு வருடங்களுககு மேலாகியும் உடனடியாக மின்விநியோகத்தை ஆரம்பிக்க முடியாதநிலை ஏற்பட்டிருந்தது.

ஏ-9 பாதை திறந்த பின்னர் தற்சமயம் இங்குள்ள கிராமங்களில் பொதுமக்கள் கணிசமான அளவில் மீளக்குடியமர்ந்துவருகின்றனர். மேலும், இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்வதை ஊக்குவிக்கும் பொருட்டு அவற்றிற்கு மின் இணைப்பு உட்பட அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டி உள்ளது.

இதனால் மேற்படி திட்டத்திலிருந்து வருடா வருடம் ஒவ்வொரு கிராமத்திற்கும் மின் விநியோகத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருவதாகச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஒ-16)

## ஆங்கில ஆசிரியர் பணியில் சேர

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ். வலயப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித்தியும், சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் டி அல்லது ஏ தரத்தில் சித்தியும் பெற்றவர்களிடமிருந்து பகுதிநேர ஆங்கில, ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சுயவிவரங்களுடன் விண்ணப்பங்களை இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன் தமக்கு அனுப்பி வைக்கும்படி யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ)

# திருப்பணி நிதி சேகரித்தவர் வீதி விபத்தில் சிக்கினார்

ஆலயத் திருப்பணிக்கு வீதியில் நிதி சேகரித்துக் கொண்டிருந்தவர் வாகனத்தினால் மோதுண்டு காயமடைந்தார். இச்சம்பவம் நேற்று முன்தினம் கைதடிப் பிள்ளையார் கோயிலடியில் இடம்பெற்றது.

ஆலயத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தில் இவர் திருப்பணி நிதி சேகரிக்கச் சென்றவேளையில், மறுபுறத்தில் வேகமாக வந்த வாகனம் இவரை மோதித் தள்ளியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதடி மேற்கைச் சேர்ந்த முருகேசு நாகேந்திரம் (வயது40) என்பவரே இதில் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஒ-117)

## பட்டதாரிகள் ஒன்றியம்

குருநகர்,ஓக.13

பாஷையூர் பட்டதாரிகள் ஒன்றியம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. பாஷையூரைச் சேர்ந்த பட்டதாரிகள் இணைந்து உருவாக்கிய இந்த ஒன்றியத்திற்கு விக்ரர் நிஷாந்தன் தலைவராகவும், எஸ்.யூடித்ராணி செயலாளராகவும், எஸ்.ஞா. கபிரியேல் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயப் பகுதிப் பணிமனையில் ஆலயப் பங்குத் தந்தையின் தலைமையில் நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது. (ஓ-51)

எம்முடன் இணைந்தோர் நிச்சயம் உயர்கல்வி பெறுவோர்.

**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி யாழ்.நகர்.

பிரிவு 2 **A/L DAY CLASS**
கலை, வர்த்தக வகுப்புகள்

| | |
|---|---|
| Acc. திரு.பாலவாசன் | Eco. திரு.உதயன் |
| B.St. திரு.யசோ | Log. திரு.சயந்தன் |
| Tam. திரு.குழந்தை | H/C. திரு.பத்மராஜா |
| Geo. திரு.பாபு | Hin. திரு.N.T.தரன் |
| Hist. திரு.சுதன் | P/Sc. திரு.றொபின்சன் |
| Chri. திரு.வசந்தன் | Drama திரு.மதி |

(சி-36590)
ஆரம்பம்: 16.08.2004 7 மணி

**கிறீன் பீல்ட் சனசமூக நிலையம்**
46 ஆவது ஆண்டுவிழா
காலம்: 21.08.2004 காலை 6.00மணி
சைக்கிள் ஓட்டப்போட்டி - 30மைல்
மரதன் ஓட்டம் - 10மைல்
விணணப்பங்களைச் சனசமூக நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவுதிகதி 20.08.2004
குருசோ வீதி. யாழ்ப்பாணம். (35198) - நிலைய நிர்வாகிகள்.

## துப்புரவுப்பணி

குருநகர்,ஓக.13

நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் டெங்கு ஒழிப்புத் திட்டத்தை முன்னிட்டு யாழ். பிரதேச செயலகக் கிழக்குச் சமுர்ததி வலயத்தினர் இன்று குருநகர் தொடர்மாடிப் பகுதியில் அமைந்துள்ள தேவதாஸ் பூங்காவில் துப்புரவுப்பணிகளை மேற்கொள்ளவுள்ளனர் என யாழ். நகர் கிழக்கு வலய சமுர்த்தி வங்கிமுகாமையாளர் ம.கியுமன் தெரிவித்துள்ளார்.

இத்துப்புரவுப் பணி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் எனவும் குருநகர் தொடர்மாடி சனசமூக நிலைய நிர்வாகிகளும் இணைந்துகொள்வார்கள் எனவும் - அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-51)

## எழுவைதீவில் புனரமைப்பு

நிகொட் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் எழுவைதீவு புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் தலைமையிலான குழுவினர் கடந்த சனிக்கிழமை எழுவைதீவுக்குச் சென்றனர்.

அக்குழுவினர் எழுவைதீவுப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோருடன் கலந்துரையாடினர். இக்கலந்துரையாடலில் "நிகொட்" திட்டத்தின் நோக்கம் பற்றியும் அது நிறைவேற்றப்படுவதற்கான பொதுமக்களது பங்களிப்புக் குறித்தும் விளக்கமளித்தனர். மேற்படி சந்திப்பிற்கான ஒழுங்குகளை ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் எவ்.எக்ஸ்.செல்வநாயகம் மேற்கொண்டிருந்தார். (ஓ-201)

**ஈசன் கல்வி நிலையம்**
**A/L 2005 DAY CLASS**
வர்த்தகப் பிரிவு

| | |
|---|---|
| Eco: K.உதயன்: | Thu, 7.00 a.m.<br>Sat, Sun 5.00 p.m. |
| Acc: D.Sam | Mon, Wed, Fri 7.00 a.m. |
| B.St: B.S.பசில்: | Mon, Tue, Wed,<br>Thu, Fri 8.30 a.m. |

(35/35942)
ஆரம்பம்:19.08.2004 THU:7.00 a.m. (S.L.T)

**DAY CLASS**
**A/L 2005 கலை, வர்த்தக**
வகுப்புகள் ஆரம்பம் 13.08.2004 மாலை 3.00 மணி

| | |
|---|---|
| Acc. - பாலவாசன் | Eco. - மோகன் |
| Com. - யசோ | Tam. - பாலா |
| Log. - R.P.சர்மா | H/C. - சந்திரன் |
| Dra. - ரமேஷ் | Chi. - கொலின்ஸ் |
| Geo. - ஜெகன் | P/Sc. - தீபன் |

ஸ்ரார் கல்வி நிலையம், சுன்னாகம் (35207)

## OLD MAHAJANANS

Mr.S.Selvakunachandran, Old Mahajanan and former Chemistry teacher is in Town and wishes to meet old Mahajanans. A Dinner will be hosted to honour him by old Mahajanans on Monday 16th August 2004 at Euroville Auditorium at 17, Agrarian Services Lane, Nallur (Near Muthirai Junction)

Interested please confirm your participation.

Tel: 2222849 / 2227012 / 0777110305

- Old Mahajanan.

(35204)(42-34-12-19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எம்மண்ணுக்குப் பெருமை சேர்த்த
**மரியநாயகம் சஞ்சீவ் (பலியன் ஆதவன்)**
மதங்களுக்கிடையிலான சர்வதேச அமைப்பினால் தென்கொரியாவில் நடத்தப்பட்ட சர்வதேச சமாதான இளையோர் விளையாட்டு விழாவில் பங்குபற்றி 110m தடைதாண்டல் போட்டியில் 2 ஆம் இடத்தைப் பெற்றமைக்காகப் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம். அத்துடன், இன்னும் பல சாதனைகளை நிலைநாட்ட வாழ்த்துகின்றோம்.

பாஷையூர்க் கிளை. (35206)(34-12-19)
ஜேர்மன் புனித அந்தோனியார் கலை விளையாட்டு அபிவிருத்திச் சங்கம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணகம் 19 - 02 - 1943



விண்ணகம் 14 - 07 - 2004

அமரர்
**வேலுப்பிள்ளை மார்க்கண்டேயபிள்ளை**
(முன்னாள் மின் அத்தியட்சகர் இலங்கை மின்சாரசபை)

ஊர் மகிழ வந்துதித்தீர் சாளம்பை மண்ணில்
கார் இருளைப் போக்குதற்கும் பார் துயரை மாற்றுதற்கும்
பேர் ஒளியாய், மின்னொளியாய்த் திகழ்ந்தீர் இன்று
ஊர் நெகிழ விடை பெற்றீர் எங்குற்றீர் ஐயா!

31ஆம் நினைவு நாளாகிய இன்று (13-08-2004) அன்னாரின் ஆத்மா சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

1. சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினர்,
2. சதாவதானி கதிரைவேற்பிள்ளை சி.க.கூட்டுறவுச் சங்கத்தினர்,
3. உதயதாரகை விளையாட்டுக் கழகத்தினர்.

சதாவதானி கதிரைவேற்பிள்ளை வீதி,
தம்பசிட்டி, பருத்தித்துறை. (C/36594)(42-12-19-34)

## கண்ணீர் அஞ்சலி



எங்கள் அன்பு நண்பி
**திருமதி பகீரதன் சிறீவதனியின் தந்தையும்**
எமையெல்லாம் தனது சொந்தக் குழந்தைகள்போல நேசித்தவருமான
அமரர் **முருகேசு ஸ்ரீஸ்கந்தராசா (அதிபர்)**
அவர்களின் மறைவை நினைவுகூர்ந்து எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன், அன்னாரின் குடும்பத்திற்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

யாழ்ப்பாணம். (35208)(34-12-19) - **வதனியின் பல்கலைக்கழக நண்பிகள்.**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 - 11 - 1928



இறப்பு 13 - 08 - 2000

## திருமதி இரத்தினம் வைரமுத்து

நடிகமணியின் முத்தான நவரத்தின மாமணியே!
கடிகமழ் வஸந்த கான சபா கட்டிட உதவிய கற்பகமே!
மடிமீது மக்களைப் போல் மாற்றாரையும்
அணைத்திட்ட மாணிக்கமே!
இடிபோன்றதுதான் உன்பிரிவு என்றாலும்
இருக்கின்றாய் எம்மனதில் அழியாமல்!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

"சாரங்கா",
காங்கேசன்துறை. (35201)(34-12-19)

**கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை**
**- வெற்றிடங்கள் -**

1. 1. **கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் - ஆண்கள்/பெண்கள்**
Junior Security Officers - Men/Women
தகைமைகள்:
க.பொ.த. (சா/த) தமிழ், கணிதம் உட்பட ஆறுபாடங்கள் சித்தி
2. **பாதுகாவலர்கள்** - Patrolmen
தகைமைகள்: எட்டாம் வகுப்புச் சித்தி

2. a) **உயரம்:** 5'4" (ஆண்கள்)
5'2" (பெண்கள்)
b) **வயது:** 20 தொடக்கம் 55 வரை
(நல்ல தேகாரோக்கியமும், கண்பார்வையும் இருத்தல்வேண்டும்)
c) மெய்வல்லுனர், விளையாட்டுத்துறை, சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ், சாரணர் படைவீரர்களுக்கும் இளைப்பாறிய பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

3. **சம்பளம்:** அனுபவத்திற்கேற்ப வழங்கப்படும்.
கிராம அதிகாரியின் நற்சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தே.அ.அ, அனுபவச் சான்றிதழ், கல்வித்தகைமை ஆகியவற்றுடன் 14.08.2004 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நேர்முகப்பரீட்சைக்குச் சமுகம்கொடுக்கவும்.

இல.43. கல்லூரி வீதி.
யாழ்.இந்து மைதானம் முன்பாக.
யாழ்ப்பாணம்.
**- பணிப்பாளர்.**
(36591)(42-12-19-34)

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை-2004
### மாதிரி வினாத்தாள் இல.08 விடைகள்
### வினாத்தாள் I

01) 3
02) எல்லா விடைகளுக்கும் சரிபோடவும்
03) 3 04) 1 05) 2 06) 3 07) 3
08) 2
09) 2 10) 2 11) 2 12) 3
13) 2 14) 2 15) (6) 16) 12
17) 3 18) 2 19) 4 20) (3) [1] (1)
21) 5 22) 2 23) 1
24) 1 25) 8 26) 11
27) 2 28) 6 29) 2
30) எல்லா விடைகளுக்கும் சரிபோடவும்
31) 1 32) 1
33) 1 34) 2 35) 1 36) 1
37) 2 38) 1 39) 2 40) 3

### வினாத்தாள் II

(1)
01) அரச்டி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
10.08.2004
செல்வன் ப.சேரலாதன்,
இப்படிக்கு,
தங்கள் நல்வரவை நாடும்,
02) சுஜீவனின்
03) 17:00 மணித்தியாலம்
04) செல்வன் ப.சேரலாதனுக்கு
05) ம.தர்மலிங்கம்
06) பிற்பகல்
07) ரூ.4.50
08) ரூ.16.50

02)
01) ✓ 02) ✓ 03) ✓ 04) ✗ 05) ✗
06) ✓ 07) ✓ 08) ✓

03) 01) 4 02) 2 03) 4 04) 1
05) 2

04) 01) Puppy 02) Where 03) Your
04) Yesterday 05) Night

05) 01) 3 02) 2 03) 3 04) 1

06) 01) தர்மசக்கரம்
02) வாளேந்திய சிங்கம்
03) தாமரை இதழ்/பலாபெதி
04) நெற்கதிர்
05) நிறைகலசம்/பூரணகும்பம்
06) சூரியன்
07) சந்திரன்

07)
01) 75cm 02) 1/8 03) வடக்கு 04) 36
05) 5 நாளுக்கு 06) 150 லீற்றர்
07) 600 ரூபா

08)
01) சந்திரன் (பூரண சந்திரன்)
02) நீ
03) தந்தாய்
04) நிசி
05) சந்தோசம்/மகிழ்ச்சி
06) இருளை
07) நான்
08) Day
09) World
10) You
11) Light

9) 01) பால்
02) பணம்
03) இலவசம்
04) நான்கு
05) கமக்காரன்
06) அம்மா (Mother)

10) 01) 30 ரூபா
02) ரூபா 83.25
03) 14 ரூபா
04) ரூபா 5.10
05) ரூபா 12,750.00

11) 01) ஏப்ரன் 02) நெருக்கமாகவும்
03) அருவிவெட்டுப் பாடல்
04) சங்கிலித் தையல்
05) கையுறைகளைப்

12) பொருத்தமான கருத்துடைய வசனங்கள்

**புள்ளித்திட்டம்**

**வினாத்தாள் I**
40x2½=100 புள்ளிகள்

**வினாத்தாள் II**

| | |
|---|---|
| 01) | 08 புள்ளிகள் |
| 02) | 08 புள்ளிகள் |
| 03) | 10 புள்ளிகள் |
| 04) | 05 புள்ளிகள் |
| 05) | 04 புள்ளிகள் |
| 06) | 07 புள்ளிகள் |
| 07) | 14 புள்ளிகள் |
| 08) | 11 புள்ளிகள் |
| 09) | 06 புள்ளிகள் |
| 10) | 10 புள்ளிகள் |
| 11) | 05 புள்ளிகள் |
| 12) | 12 புள்ளிகள் |

**மொத்தம் 100 புள்ளிகள்**

# புலிகள்மீது விதித்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

வைகோ விடுதலை செய்யப்பட்டமை தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

'பொடா' சட்டத்தின் கீழ் கைதுசெய்யப் பட்ட வைகோ விடுதலையான செய்தி உள்ளத்தில் உவகையை ஊற்றெடுக்கச் செய்கின்றது. அவர் ஈட்டிய வெற்றி தனிமனிதன் பெற்ற வெற்றியல்ல ஈழத்தமிழர்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

வட இந்தியாவில் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்காகக் கொண்டுவரப்படுவதாகச் சொல்லப்பட்ட 'பொடா' சட்டம் வைகோ, பழநெடுமாறன் ஆகியோர் மீது திணிக்கப்பட்டது. அவர்கள் இருவரும் சிறையில் ஒன்றரை வருடம் வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டமையை நாடு அறியும், நானிலம் அறியும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினார்கள் என்பதற்காக அவர்கள் சித்திரவதைக்கு ஆளானார்கள். விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசிய வைகோ விடுதலை செய்யப்பட்டுள்ளார். எனவே, 'பொடா' சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையும் நீக்கப்பட வேண்டும் என்பதே யதார்த்தம். இது சொல்லாமல் புரியும் விடயமாகும்.

'பொடா' சட்டத்தை வைத்து அந்த மண்ணில் இருந்து வெளியேற்றப்பட்ட - அண்மையில் விமானநிலையத்தில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்ட ஈழவேந்தன் மீண்டும் அந்த மண்ணில் வைகோவையும் பழ.நெடுமாறனையும் கட்டி அணைக்கும் நிலை ஏற்படும் என நம்புகிறேன்.

வைகோ விடுதலைக்காக குரல் கொடுத்து வந்த மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனுக்குத் தமிழினம் வழங்கும் கௌரவம் நிச்சயமானது என்று அதில் உள்ளது.

(எ-3)

**NEW SCIENCE CENTRE**
யாழ்நகர்.
A/L 2006
**INORGANIC CHEMISTRY**
ஒட்சியேற்றமும் தாழ்த்தலும்
ஆரம்பம்: 14.08.2004 சனி 10 a.m.
Sat., Sun., 10-11 a.m.
By: அன்பழகன் B.Sc.

**2004/2005ஆம் கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பம்**
2004/2005ஆம் கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பப்படிவம் நாளை (14.08.2004) சனிக்கிழமை முதல் விநியோகம் செய்யப்படும்.
பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பேசி. 021 222 6693
(C36598)(33-14-18)

**NEW SCIENCE COLLEGE**
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
G.C.E. A/L
மீள்பரீட்சார்த்திகளுக்காக திங்கள் முதல் வெள்ளிவரை 7.00-8.00 அலகுரீதியான கடந்தகால வினா - விடை
★ பௌதிக இரசாயனம் ★
திரு.மகேஸ்ரன் B.Sc. PGO MPHIL
2006 A/L
அசேதன இரசாயனம்
புதன், வெள்ளி - 5.00 p.m.
ஆரம்பம்: 13.08.2004
(35232) (43-33-14-18)

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2751450 இலிருந்து 2769091 வரை
சீட்டிழுப்பு இல. 1539 திகதி 11.08.2004
வெற்றி எண்கள்
32 34 42 49 54
போனஸ் எண் 26
ஜக்பொட் பரிசு ரூபா.23,37,700/- வெல்லப்பட்டுள்ளது

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| 5 | 01 | 23,37,700/- | 23,37,700/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 1,00,000/- | 2,00,000/- |
| 4 | 111 | 10,000/- | 11,10,000/- |
| 3 | 5,518 | 500/- | 27,59,000/- |
| 2 | 92,480 | 20/- | 18,49,600/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 32ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 113,360 | 10/- | 11,33,600/- |

இந்த சனிக்கிழமை ஜக்பொட்
Rs. 15,00,000/-
2764012-6-81
2763984-9-77
2768243-4-09
2755913-0-79
2756438-3-26

**சைன் உடுவில்**
A/L -2005
DAY CLASS
Ta. - பத்மநாதன
Lo. - E.S.பவன
Hc.- சுரேஸ்
Geo. - சங்கர்
Acc. - சசி
Com. - நந்தீஸ்
Ec.- மோகன்
P/sc. - கியூபேட
ஆரம்பம்.
16.08.2004
8.00 a.m.
(35225)(43)
கணிதம், தமிழ் ஆசிரியர் தேவை.

18.08.2004 வரை மட்டுமே
**13**
யாழ்ப்பாணத்து ஓவியர்களின் ஓவியங்களின் காட்சி
சிறப்பு நிகழ்வு -iii
**சொல்லோவியம்**
நிகழ்வு ஒருங்கிணைப்பாளர்:
திரு.செல்வமனோகரன்
15.08.2004/ 4.00 p.m. - 5.00p.m.
பிரெஞ்சு நட்புறவுக்கழகம்,
83, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில்
THE PHONE SHOP, DIAL LINKS
204, KKS. Road, Jaffna.

**வேலையாள்கள் தேவை**
ஹொட்டல் வேலையில்
அனுபவம் உள்ள
★ காசாளர்
★ சிட்டை எழுதுநர்
★ மேற்பார்வையாளர்
★ சப்பிளேயர்
★ ரீமேக்கர் உடன்தேவை
(C/36802)(33)
தொடர்புகளுக்கு:
திறிஸ்ரார் ஹொட்டல்
162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**வீடு வாடகைக்கு**
A/L மீள் பரீட்சைக்குத் தோற்றும் மாணவிகள் யாழ். நகர கல்வி நிறுவனங்களில் சென்று படிக்க வசதியாக சுதுமலையில் அமைதியான சூழலில் அறைகள் உண்டு. மாணவிகள் சேர்ந்து உணவு சமைக்கவும் வசதி செய்து தரப்படும். T.P: 0777-259823 (35214)(33)

அலகு ரீதியான மீட்டல் வகுப்புகள்
பௌதிகம் - K.றமேஸ் B.Sc.
சனி, ஞாயிறு 3-6 p.m.
வணிகக்கல்வி K.சாந்திநாதன் B.B.A.(Hons)
சனி, ஞாயிறு 10-12 p.m.
ஆரம்பம் 14.08.2004 (சனி).
THIGAAL. K.K.A. வீதி. இணுவில்.
(35219)(43)

**தவறிவிட்டது**

நேற்று (12.08.2004) வியாழக்கிழமை முகமாலையில் இருந்து கொக்குவில்-நீர்வேலி-சுன்னாகம் மானிப்பாய் ஆகிய இடங்களில் பிரயாணம் செய்தபோது நீலநிற சூட்கேஸ் ஒன்று (ஆடைகள், மருந்துவகைகள் அடங்கியது) தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள்

A.சூரியகுமாரன்

இல.120, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்).

(35221)(33)

**லக்சுமி** இணுவில்
சேரன், சினேகா, கனிகா, கோபிகா
இன்னும் பலர் நடிப்பில்
ஆட்டோகிராஃப்
தினசரி 11.00, 3.00, 7.00 (புதிய நேரம்).
(35224)(29)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இன்று மட்டும்
சிம்பு. ரம்யாகிருஷ்ணன். மும்தாஜ் நடித்த
குத்து
புதியநேரம்: 10.30, 2.30, 6.30
நாளை முதல
வசூல்ராஜா M.B.B.S.
(சி-36364)(32)

**நாகம்ஸ்** சுன்னாகம்

சரத்குமார், சாக்ஸி, வடிவேல நடித்த
மாணிக்கம்
காட்சிகள் 11.00,3.00,7.00(புநே.)
(C/36415)(12)

சங்கானை
சரத்குமார், விசாரே, செந்தில் நடித்த
நேதாஜி
தினசரி 11.00, 2.45, 6.00 (புநே)
வெள்ளி, சனி, ஞாயிறு.
Past Perfect (இரவு 8.45 பு.நே.)

# மரண அறிவித்தல்கள்

## இலங்கைநாதர் கந்தசாமி



மலேசியாவைப் பிறந்தகமாகவும் சுழிபுரம் தேவதோட்டத்தை நிரந்தர வாழ்வடமாகவும் அவுஸ்திரேலியாவைத் தற்காலிக வாழ்விடமாகவும் வசித்துக் கொண்ட இலங்கைநாதர் கந்தசாமி நேற்று (12-08-2004) வியாழக்கிழமை அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் அமரர்களான இலங்கைநாதர்-மாரிமுத்து தம்பதிகளின் மூத்த புதல்வனும் அமரர்களான சி.அப்புத்துரை (முன்னாள் விதானை, சுழிபுரம்)-திலகவதி தம்பதிகளின் மூத்த மருமகனும் காந்தகுமாரியின் அருமைக் கணவரும் ஈஸ்வரநாதன், அருணகிரிநாதன், செந்தில்நாதன் ஆகியோரின் அருமைத் தந்தையும் செல்லத்துரை அவர்களின் சகோதரரும் நிரஞ்சனி, சுபி ஆகியோரின் மாமனாரும் சாம்பிகா, அபிராமயா ஆகியோரின் பேரனும் இராஜராஜேஸ்வரி (இந்தியா), சதானந்தவேல் (ஓமான்), நித்தியானந்த மனுநீதி (ஓமான்), கிருபானந்த மனுநீதி (வலயக்கல்வி அலுவலகம்-வடமராட்சி), நிர்மலாதேவி (சுழிபுரம்), நளாயினி (டுபாய்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14-08-2004) சனிக்கிழமை நண்பகல் ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

MRS.K.SHAN THAKUMARI, # 27, PINE WOOD AVENUE, DANDENONG NORTH, VIC7ORIA 3175, AUSTRALIA, PHONE: 0061397012129

*"மநு இல்லம்"*
*சுழிபுரம் மத்தி,*
*சுழிபுரம்.* (C36803)(32-14-18)

தகவல்: அ.நிர்மலாதேவி (மைத்துனி - மலரக்கா).

## திருமதி இராசமணி சேதுராசா

(மண்டைதீவு)

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி சேதுராசா நேற்று (12-08-2004) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆரூரபிள்ளை சேதுராசாவின் அன்பு மனைவியும் திருமணிதேவி, மைலேஸ்வரி (நீலா) ஆகியோரின் தாயாரும் யோகநாதன், இராசேந்திரன் ஆகியோரின் மாமியாரும் சதீஸ், தர்மிளா, துவேனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ரூபவதி, பேரின்பநாயகம் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (13-08-2004) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு மண்டைதீவில் நடைபெற்றுப் பூதவுடல் மண்டைதீவு தலைக்கிரி மயானத்திற்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முதலாம் வட்டாரம்,*
*மண்டைதீவு.* (35230)(15-14-18)

தகவல்: கை.பேரின்பநாயகம். (சகோதரன்).

## இளையதம்பி அமிர்தலிங்கம் (அமுது)

(உரிமையாளர் - கல்லுடைக்கும் ஆலை, நீர்வேலி)



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, ராஜ வீதியை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி அமிர்தலிங்கம் (11.08.2004) புதன்கிழமை சிவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் லாவண்ய சொரூபி (லாலா) அவர்களின் அன்புக் கணவரும் அமுதசொரூபன் (விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்), அகிலன், அஜந்தன் (பிரான்ஸ்), அகன் (யா/இந்துக் கல்லூரி-உயர்தரம் 2003), காலஞ்சென்ற செல்வி அபிதா மற்றும் கார்த்திகன் (யா/இந்துக் கல்லூரி ஆண்டு -7), கிருஷிகன் (புனித ஜோன் பொஸ்கோ) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அருளாநந்தம், அமரர் கனகலிங்கம், பஞ்சலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நல்லைநாதன் (கனடா), திருநாவுக்கரசு, தர்மசொரூபி, தர்மகுணலட்சுமி (ஜாப்தீவு), கலைஞானசொரூபி சிறீரங்கநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2004) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*ராஜ வீதி,*
*கோப்பாய்.* (35222)(43-14-18)

தகவல்: அ.லாவண்ய சொரூபி (மனைவி).

## தம்பிப்பிள்ளை தம்பிஐயா

(முன்னாள் பிரபல ஒலி, ஒளி அமைப்பாளர், புளியங்கூடல்)



ஊர்காவற்றுறை, புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் தற்சமயம் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை தம்பிஐயா அவர்கள் 10.08.2004 செவ்வாய்க்கிழமை அன்னாரின் புளியங்கூடல் இல்லத்தில் இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - கனகம் தம்பதிகளின் அன்பு மகனும் அனலைதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் ஆருயிர்க் கணவரும் ஸ்ரீகலா, ஸ்ரீகரன் (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையும் தர்மகுலசிங்கம், மங்களராணி (கனடா) ஆகியோரின் அருமை மாமனாரும் ஸ்ரீராஜ், நிரோஜன், நீரஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சுபாரத்தினம் மற்றும் பொன்னுத்துரை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சிவசுப்பிரமணியம், தெய்வானைபிள்ளை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, இரத்தினம் மற்றும் பத்மாவதி, சுந்தரவல்லி, முருகேசபிள்ளை, சரஸ்வதி, கனகசபை, பரஞ்சோதி, செல்வராணி, இராஜரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் தவமணிதேவி, சரோஜினிதேவி, சொர்ணலிங்கம், சுபத்திராதேவி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.08.2004) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் புளியங்கூடல் சந்தி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சுருவில் இந்து மயானத்திற்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புளியங்கூடல் சந்தி,*
*வேலணை.*
T.P.0777569325,
- 0777322441 (35226)(43-14-18)

தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள்.

## யுத்தத்துக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகக் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, திருகோணமலை, சம்பூர் ஆகிய பிரதேசங்களில் அவர்கள் பாரிய பங்கர்களைப் புதிதாக அமைத்துவருகின்றனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இவை எல்லாம் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல்களாகும்.

இது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவித்துள்ளோம். அவர்கள் இப்போது இந்த முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் - என்றும் அமைச்சர் மங்கள சமரவீர கூறினார்.

"புலிகளும், அரசும் பரஸ்பரம் குற்றச்சாட்டுகளைச் சுமத்திக்கொண்டிருக்கும்போது எப்படி மீண்டும் பேச்சு ஆரம்பிக்கப்படும்?" எனச் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அரசும்," புலிகளும் சமாதானப் பேச்சுக்கள் மீது நம்பிக்கை இழந்துவிடவில்லை. அரசு பலவழிகளிலும் விட்டுக்கொடுப்புடன் செயற்படு கின்றது.

புலிகளின் சமாதானச் செயலகத்திற்குத் தீர்வையற்ற முறையில் வாகனங்களை இறக்குமதி செய்யவும் அனுமதித்துள்ளோம். இதனை வெளிப்படையாகவே செய்கிறோம். ஆனால், முன்னைய அரசு சட்டவிரோதமான முறையில் புலிகளுக்கான ஒலிபரப்பு சாதனங்களை நோர்வேத் தூதரகத்தின் மூலம் பெற்றுக கொடுத்து விட்டு ஒன்றும் தெரியாததுபோல் நடித்துவிட்டது என்று சுட்டிக்காட்டினார் மங்கள சமரவீர."புலிகள் தமது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான யோசனையை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளனர். அதற்கான மாற்று ஆலோசனைகளை அரசு புலிகளிடம் சமர்ப்பித்துள்ளதா?" - என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசு மாற்று ஆலோசனைகளைத் தயாரித்து வருகின்றது. உரிய நேரத்தில் புலிகளிடம் அது ஒப்படைக்கப்படும். எனவே, புலிகளும் விட்டுக் கொடுப்புகளுடன் பேச்சுக்கு முன்வரவேண்டும் - என அமைச்சர் பதிலளித்தார். (க)

## கிளிநொச்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்துறையினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று மாலை பொற்பதி வீதியில் உள்ள அரசியல்துறையின் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், எம்.பிக்களான மாவை சேனாதிராசா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கி.சிவனேசன், மா.க.ஈழவேந்தன், செ.கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோருடன் மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ்.செம்மணன், தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சூ.சிறில் முதலியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஒன்பதுபேரும் தமக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில் தலா 10 லட்சம் ரூபாவைக் கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக்கு வழங்குவர் என்றும் -

மிகுதிப்பணத்தைக் குடாநாட்டில் மேற்கொளளப்படவேண்டிய வீதி திருத்தப்பணிகள், சுகாதாரம், முன்பள்ளிகள், பெண்கள் அபிவிருத்திச் செயற்பாடு போன்றவற்றுக்கு முன்னுரிமை அடிப்படையில் பயன்படுத்துவது என்றும் - சந்திப்பில் முடிவுசெய்யப்பட்டது.

குடாநாட்டில் குறிப்பாக தீவகம், வலிகாமம் ஆகிய பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகளை இனம்காண குழுக்கள் நிறுவப்பட்டுள் ளதாகவும் - கூறப்பட்டது. (எ-86)


### பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளின் A/L பரீட்சை முடிவுகள் திருப்தியளிக்கவில்லையா?

உங்கள் பிள்ளையின் பல்கலைக்கழக அனுமதி?

உங்கள் பிள்ளையின் வேலைவாய்ப்பு?

மொத்தத்தில் உங்கள் பிள்ளையின் எதிர்காலம்?

விடை: IIS ஆல் மட்டுமே முடியும்.

ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒளியூட்டிய IIS நிறுவனம் உங்கள் பிள்ளையின் எதிர்காலத்திற்கும் வழிகாட்டக் காத்திருக்கின்றது.

உங்கள் பிள்ளை கணனித்துறையில் ஒரு துறைசார் வல்லுநராக சர்வதேச பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக, கௌரவமான ஒரு வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள அல்லது வெளிநாடு சென்று உயர் கல்வியைத் தொடர்வதற்கு நாம் வழிகாட்டுகின்றோம்.

கவலையை விடுங்கள் மேற்படி விடயம் தொடர்பாகப் பெற்றோர்கள மாணவர்களுக்கான மிக முக்கிய கலந்துரையாடல் ஒன்று 15.08.2004 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு IIS இன் தலைமை அலுவலகத்தில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. முற்றிலும் இலவசமான இக்கருத்தரங்கில் பங்குகொண்டு உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானியுங்கள்.

'IIS என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி'

INSTITUTE OF INFORMATICS STUDIES
'An *Edexcel* approved training Centre'
# 100, Clock Tower Road, Jaffna.
T.P. No: 021 222 2831/ 021 222 6933


## அடுத்தவார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் வெளிநாடு சென்றுள்ளமையாலும், கிழக்கு மாகாண எம்.பிக்கள தமது மக்களுடனான சந்திப்புக்களைத் தற்போது நடத்தி வருகின்றமையாலும் தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பு பிற்போடப் பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலும் அடுத்த நாடாளுமன்ற அமர்வுகள் முடிவடைந்த பின்னர் இச்சந்திப்பு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 17ஆம் திகதி முதல் நான்கு தினங்கள் இடம்பெறவுள்ளது. (எ-3)

## புலிகளுக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதே அமைச்சரவையில்தான் ஜே.வி.பியின் நான்கு அமைச்சர்களும் இருந்துள்ளனர். அப்போது அவர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கவில்லை. ஆமாம் சாமி போட்டனர்.

ஆனால், ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவோ கொழும்பிலிருந்து பதுளைக்குப் போய் அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்திற்கு எதிராகக் குரல் எழுப்பு கின்றார்.

அப்படியானால் ஜே.வி.பியின் ஒழுங்குவிதிகளை மீறிய நான்கு அமைச்சர்களையும் உடனடியாக இராஜினாமா செய்யும்படி அவர் வலியுறுத்துவாரா? ஜே.வி.பியின் போக்கு 'ஊருக்கு மட்டும்தான் உபதேசம் உனக்கில்லை யடி' என்பதுபோல் இருக்கின்றது - என்று சாடுகின்றார் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.

இவ்விடயம் தொடர்பாக விவசாய, கால்நடை, அபிவிருத்தி அமைச்சர் அனுரகுமார திஸ்ஸ நாயக்காவிடம் கேட்டபோது -

ஜே.வி.பியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் வேறுபட்ட கொள்கைகளை உடையவை என்றாலும் பொதுவான விடயங்களில் இணைந்து செயற்பட வேண்டிய கடப்பாடுண்டு.

இவ்விடயத்திலும் அப்படித்தான். இணக்கப்பாடுகளுக்குள்ளும் முரண்பாடுகள் உண்டுதானே! என்று பதில் அளித்தார்.

## பிரேதப் பெட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்ட தமது கட்சி உறுப்பினரின் சடலம் தாங்கிய பிரேதப்பெட்டியுடனேயே இவர்கள் இந்தப் போராட்டத்தில் குதித்தனர்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு பெற்றுக்கொடுக்குமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (எ-7)

## மட்டு-அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'சோலையகம்' அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில்,இடம்பெற்ற ஒரு சந்திப்பின் போது இது குறித்து விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பிலிருந்து கருணா அணியினர் விரட்டப்பட்ட பின்னர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும்.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் மட்டு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட தலைமைச் செயலகப் பொறுப்பாளர் மாஷல், புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் பிரபா ஆகியோரும் -

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், அரியநேந்திரன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி, செல்வி தங்கேஸ்வரி, அம்பாறை மாவட்ட எம்.பியான எஸ்.பத்மநாதன் ஆகியோரும் - கலந்து கொண்டனர்.

மட்டு, அம்பாறை மாவட்டங்களில் தற்சமயம் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையால் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தைச் சீர்செய்து அங்கு சுமுகநிலையை ஏற்படுத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்தில் எடுக்கப்படவேண்டிய திட்டங்கள் குறித்து நேற்றைய சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் தமிழ்த்தேசியத்தை வலுப்படுத்தல் போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன.

தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்த கிழக்கில் பட்டிதொட்டி எங்கும் பிரசார நடவடிக்கைகளை முடுக்கிவிடுவது என்றும்- சந்திப்பில் முடிவு செய்யப்பட்டது. (ஐ-3)


ஈசன் அக்கடமி
K.K.S. வீதி, கோண்டாவில்.
பொருளியல்
K.உதயன்
A/L 2006
சனி, ஞாயிறு
3-4 (N.T.)
A/L 2005
சனி, ஞாயிறு
4-5 (N.T.)
குறிப்பு:தனிப்பாடம்
அனுமதிகள்
வழங்கப்படும் (35229)

ஈசன் கல்வி நிலையம்
பௌதிகவியல்
A/L 2005,2006
சடப்பொருளியல்
பாகுமை
SAT,SUN: 4.30 p.m.
இலத்திரனியல்
SAT,SUN: 5.30 p.m.
திரு.குமரன் (B.Sc)
ஆரம்பம்:
14-08-2004
(35036)

SUBRA
Spoken English and Grammar
by
BRITTO
புதிய பிரிவு 13.08.2004 மாலை 4.30 மணிக்கு
★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை ★
பேச்சுச் சிங்களம்
திரு.லீலாக்கிருஸ்ணன்
மாலை 6.30 மணிக்கு
(C-36485)

CHEMISTRY GROUP
BY:N.VAKEESAN
வினாத்தாள் ரீதியான மீட்டல்
at சுதுமலை (மதவடி வீதி)
Sat.,Sun.: 3.00-5.00 p.m.
Mon.,Fri.: 6.00-7.00 a.m.
ஆரம்பம்: 14-08-04
at. Thirunelvely
(பல்கலைக்கழகம் முன்பாக)
Sat.,Sun.: 8.30-10.30 a.m.
Tue.,Thu.: 4.00-5.00 p.m.
ஆரம்பம்: 15-08-04
★யாவும் புதிய நேரப்படி
★வரையறுத்த மாணவர் தொகை
★தொடர்பு: 0777593793
(35172)

பிறைற்றின்
தென்மராட்சி
A/L DAY
CLASS
Logic
S.R.J. சுதன்
ஆரம்பம்:
14.08.2004
சனி 12.00 p.m.
(35184)

விசேட பிரிவு ஆரம்பம்
Diploma in
Eng.Drawing &
AutoCAD
பொறியியற் பீடத்திற்குத் தெரிவாக இருக்கும் மாணவர்களிற்கான விசேட பிரிவு 14-08-2004 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பதிவுகளிற்கு முந்துங்கள்!
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்.
(சி.36301)

A/L பரீட்சை எழுதிய மாணவர்களே!
நீங்களும் aat கற்கை நெறியை
தமிழ் மொழியில் கற்றிட அரியதொரு வாய்ப்பு





100% FREE
19.08.2004 க்கு முன்
பதிவுகளை
மேற்கொள்ளும்மாணவர்களுக்கு
விரிவுரைக் கட்டணத்தில் 100% கழிவு வழங்கப்படும்
தொடர்புகளுக்கு: IPAS
199, பிரதான வீதி,
(பிறிமியர் பேக்கரி மேல்மாடி) யாழ்ப்பாணம்.
TEL: 0777- 563294
Chartered Accountancy Fundation January 2005 க்கான விரிவுரைகள் நடைபெறுகின்றன.
22.08.2004 க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு விரிவுரைக் கட்டணத்தில் 50% விசேட கழிவு வழங்கப்படும்.


## ஜப்பானியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள், சமாதான முன்னெடுப்புகள் ஆகியன தொடர்பாக இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்படும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜப்பான் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்களையும் அவர் பார்வையிடுவார். (எ-3-173)

## கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார தலைமை தாங்கினார்.

17 ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பிக்கும்போது இரண்டு சட்டவரைவுகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

முதலாவதாக, வெளிநாட்டவர்களும், வெளிநாட்டுக் கம்பெனிகளும் இங்கு காணிகளை வாங்கும்போது நூறுவீத வரி விதிக்கும் காணிக் கொள்வனவுத் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதம் நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது.

இரண்டாவதாக, தேர்தல் வாக்களிப்புகளின் போது தேசிய அடையாள அட்டைகள் கட்டாயமாக்கும் சட்டம் ஒன்றைச் சமர்ப்பிப்பது தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி இதனைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டது. ஆனாலும், அவசரமாக விவாதிக்கமுடியாது. மலையகம் மற்றும் யுத்த பாதிப்புக்குள்ளான வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் பல ஆயிரக் கணக்கானோர் அடையாள அட்டைகளின்றி இருக்கின்றனர். இவ்விடயம் தொடர்பாக முதலில் பரிசீலனை செய்யப்பட வேண்டும். இதற்குக் கால அவகாசம் வேண்டும். எனவே, இது தொடர்பாக விவாதத்தைப் பிரிதொரு தினத்திற்குப் பின்போட வேண்டும் - என ஐ.தே.கட்சிப் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய அங்கு தெரிவித்தார்.

ஆனால், அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, இக்கூற்றை ஏற்க முடியாது என்று

நாங்கள் ஏற்கனவே தீர்மானித்து விட்டோம். எக்காரணம் கொண்டும் பிற்போடமுடியாது. திட்டமிட்டபடி 17 ஆம் திகதி தேர்தல் திருத்தச் சட்ட வரைவு சபையில் சமர்ப்பிக்கப்படும் - என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கூறியுள்ளார்.

அரசு தான் நினைத்தபடியே எல்லாவற்றையும் செய்வதென்றால் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டவேண்டிய அவசியமே இல்லை என அமைச்சரின் கூற்றை எதிர்க்கட்சியினர் கண்டித்தனர். இதனால் அங்கு சச்சரவு ஏற்பட்டது.

முடிவில் எதிர்க்கட்சி உறுப்பினர்களான கரு ஜயசூரியவும், முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.(க)

## ஒலிம்பிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்வதற்காக எதென்ஸ் வந்துள்ளனர்.

மேலும் இம்முறை 28 விளையாட்டுப்போட்டிகள் 301 பிரிவுகளாக நடைபெறுகின்றன. இலங்கையிலிருந்து 8 வீர வீராங்கனைகள் கலந்துகொள்கின்றனர்.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் ஏற்படும் என்பதால் இம்முறை ஒலிம்பிக் போட்டிகளுக்கு வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
B.A.Part II
விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன!
பட்டப்படிப்புகள் கல்லூரி
57/18 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(C-36519)

BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ்நகர்.
A/L DAY CLASS
தமிழ் : N.பாலா
அளவையியல் : P.கமல்
இ.நாகரீகம் : பத்மராஜா.
பொருளியல் : P.சண்
புவியியல் : I.S.ஜெகன்.
நாடகம் : தர்மா
ஆரம்பம்: 14.08.2004 SAT.3.00 p.m.
(35139)

இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்.
புவியியலில் புதிய பிரிவுகள் ஆரம்பம்: 2004-08-14
A/L 2006 சனி, ஞாயிறு 2.00 மணி
A/L 2005 மானிடப் புவியியல் பகுதி III
சனி, ஞாயிறு 3.00 மணி
By: திரு.N.S சங்கர் B.A (Hons) Geog.
(35081) -நிர்வாகி.

D.C.A. யாழ். பல்கலைக்கழக வெளிவாரி
B.A. Part II விரிவுரைகள்
நாளை சனி காலை 8.00மணிக்கு ஆரம்பமாகின்றன. கல்வியாண்டு 2005 இற்கான 1st in Com., 1st in Arts வகுப்புகளும் நடைபெறுகின்றன. வகுப்புக்கள் யாவும் D.M.I வெலிங்டன் சந்தி, நிறுவனத்தில் நடைபெறும். -இயக்குநர்
(35095)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.